NĀMA - DEEPA - NIGHANTU

EDITED WITH NOTES BY
S. VAIYAPURI PILLAI, B.A., B.L.,
EDITOR 'TAMIL LEXICON'
UNIVERSITY OF MADRAS.

தமிழகராதியின் ஆதாரநூற் றிரட்டு-௧.

சருவிடை. நகர்

சிவசுப்பிரமணியக் கவிராயர்

இயற்றிய

நாமதீப நிகண்டு

தமிழ் - லெக்ஸிகன் பதிப்பாசிரியர்

S. வையாபுரிப் பிள்ளை, B. A., B. L.,

பழைய வுரையைத் தழுவியியற்றிய புத்துரையுடன்

கூடியது.

காபி ரைட்.] 1930 [விலை ரூ. 2

Printed at the B. N. Press,
Mount Road, Madras.

உ

சிவமயம்.

முன்னுரை.

'நிகண்டு' என்பது முதன்முதலில் வடமொழி வேதத்திற்கு அங்கமாய் அதன்கண்ணே பயின்றுவருஞ் சொற்களின் பொருளுணர்த்துங் கருவிநூலொன்றனுக்கே சிறப்பாக வழங்கப்பட்டது. பின்னர், சொற்பொருளுணர்த்தும் நூல்கட்கெல்லாம் இப்பெயர் ஏற்புடையதாய்க் கொள்ளப்பட்டது. இம்மொழிப் பொருட்காரணம் இன்னும் ஒருதலையாய்த் துணிந்துகூறுதற்கு இயலாதவாறு மயக்கத்திற் கிடனாயுள்ளமை பலரும் அறிந்ததே. இதனைப்போலும் 'இடுகுறியாற் பெயர் பெற்றன: நிகண்டு, கலைக்கோட்டுத் தண்டு என இவை' என்று களவியலுரைகாரர் முதலியோர் கூறி முடித்தனர். நிகண்டு நூலினை 'உரிச்சொற் பனுவல்' என்பது தமிழ் வழக்கு.*

---

* இது பலபடியானும் உணரக்கிடக்கின்றது. பிங்கலந்தையை 'உரிச்சொற் கிளவி' யென அதன் பாயிரம் உரைக்கின்றது. பவணந்தி முனிவர் 'பிங்கல முதலா-நல்லோருரிச்சொலுள் நயந்தனர் கொளலே' எனச்சூத்திரமியற்றினர். மயிலைநாதர் 'பிங்கல முதலான புலவர்களாற் சொல்லப்பட்ட உரிச்சொற்பனுவல்களுள்' என உரைவகுத்தனர். இவரே பிறிதோரிடத்து (நன். 387) 'இவ்விலக்கியங்களுள்ளும் விரிந்த உரிச்சொற் பனுவல்களுள்ளும் உரைத்தவாறு அறிந்து வழங்குக' எனக்கூறினர். கெயாதரர் இயற்றிய 'கெயாதரம்' என்னும் நிகண்டு நூலுள் 'ஒங்கிய - கேதனன் பற்று மறவாத தேவைக் கெயாதரன்றேல் - வேதியன் சொற்ற வுரிச்சொற் பனுவலு மேம்படுமே' என வருகின்றது. உண்மை யிதுவாகலின் 'உரிச்சொல் நிகண்டு' என்பது மேற்சுட்டிய சொல்வழக்கினை மறந்தொழிந்த இக்காலத்துப் பிறந்த புதுப்பெயரென்றே கொள்ளற்பாலது. 'உரிச்சொல்' என்பதே காங்கேயர் நூலுக்கு உரியபெயரென்பது

> உத்தம சீலத்துக் காங்கேயன் சொன்ன வுரிச்சொறன்னை
> வைத்து மனத்துத் திருக்கானை வாழும் வணிகன்கற்றோர்
> சித்த மகிழப் பராக்ரம பாண்டிய தேவன்கண்டீர்
> பத்துத் தொகுதியிற் சேர்த்தா னெவரும் படித்திடவே.


என்று வரும் அரிய செய்யுளாலும், '950-ம் ஆண்டு புரட்டாசி மீ 14உ. ஆழ்வார் திருநகரி மாசித்தெரு தேவர்பிரான் கவிராயர் உரிச்சொல் நீடூழிவாழ்க. பெரிய திருவடி திருமேனிகவிராயகுரு புத்திரரான இரத்தினகவிராயகுரு பாத தாமரைகளே சரணம். ஆசாரியனே தெய்வம்' என்று இந்நிகண்டின் ஏட்டுப் பிரதியொன்றிற் காணும் இறுதிக் குறிப்பினாலும் அறியத்தகும்.

தமிழிலுள்ள நிகண்டுகளில் மிகப் பழைமையானது சேந்தன் திவாகரம். அந்நூல் தோன்றிய காலம் இன்னும் நிச்சயிக்கப்பெறவில்லை. அதன்கண் மிகுதியாய்க் காணப்படும் வடநூற் பொருள்கள் அது சங்ககாலத்திற்கு மிகப் பிற்பட்டதென் றுணர்த்துகின்றன. அதனைச் செய்வித்த அம்பர்கிழான் அருவந்தை புறநானூற்றுட் கல்லாடனர் பாடிய அம்பர்கிழான் அருவந்தையின் வழியிற் பிற்காலத்து விளங்கிய வொருவனாயிருத்தல் கூடும். தமிழ்நாட்டுப் பெருவேந்தர் மூவர் பெயர்களும், அவர்களை யடுத்து 'வேள்புல வரசர் சளுக்கு வேந்தர்' என வேள்புல வரசர் பெயரும், பின்னர்க் குறுநிலவேந்தர்கள் பெயர்களும் முறையே அந்நிகண்டுட் கூறப்படுகின்றன; தமிழ்வேந்தர்கள் கொடியோடொப்பச் சளுக்கவரசர்க்குரிய கேழற்கொடியும் விதந்து ஓதப்படுகின்றது; சளுக்கு வேந்தர்க்கு வேறு பெயர்களில்லாதிருப்பவும், அவர்கள் இன்னரென ஆட்சிபுரிந்த நிலம்பற்றி வலிந்து உணர்த்தப்படுகின்றார்கள். இக்காரணங்களால் சளுக்கிய மரபினர் பிரபல மன்னராய் விளங்கிய காலத்து அஃது இயற்றப்பட்டிருக்கவேண்டுமென்று கருதுதல் தகும். இக்காலம் கி. பி. 7-ம் நூற்றாண்டு அல்லது 8-ம் நூற்றாண்டின் முற்பகுதியாகவேனும் 11-ம் நூற்றாண்டாகவேனும் இருத்தல் கூடுமென்பது தென்றேச சரிதத்தால் உணரலாகும். பிற்கூறிய காலத்தினராகக் கொள்ளத்தகும் இளம்பூரணர் அந்நிகண்டினை யெடுத்தாளுதலின் (தொல். சொல். 390), அஃது அவர் காலத்துக்கு முற்பட்டதென்பது தேற்றம். குறுநிலவேந்தர் பெயராக 'அரட்டர்' என்பது திவாகரப் பிரதி சிலவற்றிற் காணப்படுகின்றது. ராஷ்ட்ரகூடர் (அரட்டர்) குறுநிலவேந்தரா யிருந்தகாலத்து இப்பெயர் தோன்றியிருக்கலாமென்று ஊகித்தற்கிடமுண்டு. இஃது உண்மையாயின், ராஷ்ட்ரகூடர் பிரபலராய் விளங்கிய கி. பி. 750-க்கு முன் அந்நூல் தோன்றியதாதல் பெறப்படும். ஆகவே, 8-ம் நூற்றாண்டின் முற்பகுதி திவாகரம் இயற்றப்பெற்ற காலமெனக் கொள்வது பொருந்துமெனத் தோன்றுகிறது.

இக்காலந்தொட்டுத் தமிழ்நாட்டின் அரசியல் நிலை பெரிதும் மாறுதலடையத் தொடங்கிற்று. சோழ மன்னர்கள் தங்கள் அரசுரிமையைப் பலவாறாக விருத்திசெய்யத் தலைப்பட்டனர். பல நாடுகளை வென்று அடிப்படுத்தார்கள். தமிழவரசாதிக்கியம் குறைவுற்ற பின்னர், மகமதியர்களும், தெலுங்க வரசர்களும், இவர்கட்குப்பின் மீண்டும் மகமதிய அரசர்களும் தமிழ் நாட்டில் வலிமிக்கு விளங்கினார்கள். தமிழ் நாட்டின் இருதய ஸ்தானம் என்று சொல்லத்தக்க மதுரையிலுங்கூட மகமதிய வரசாட்சி சிறிது காலம் இருந்தது. பிறமொழி பேசுமக்கள் தமிழ்மக்களோடு பெரிதுங் கலந்து உறவாடத் தொடங்கினர். இதனாற் பிறமொழிச் சொற்கள் தமிழ்மொழியில் மிகப் பயின்றுவரலாயின. அன்றியும், ஏராளமான வடமொழிச்சொற்களும் இம்மொழியோடு கலந்து புத்துயிர்பெற்று நிலவத் தொடங்கின. இக்காரணங்களாற் சொற்பொருளுணர்த்தும் நூல்கள் அடிக்கடி தோன்றவேண்டும் ஆவசியகம் ஏற்பட்

டது. இவ் வரிசையகத்திற் கேற்பப் பல நிகண்டுகள் பல்வேறு காலத்தில் இயற்றப்பெற்றுப் பிரசாரமெய்தியிருந்தன.

இந்நிகண்டுகளுள்ளே கடைசியாய்த் தோன்றிய பெருநூலாகும் இப்போது வெளியிடப்பெறும் நாமதீப நிகண்டு. ஒருபொருட் பல்பெயர்த் தொகுதி, ஒருசொற் பல்பொருட் பெயர்த்தொகுதி, பல்பொருட் கூட்டத்தொரு பெயர்த் தொகுதி யென முத்திறப்படும் நிகண்டு நூல்களுள், இஃது ஒருபொருட் பல்பெயர்த் தொகுதியாய் விளங்குவது. ஒருபொருட்பல்பெயரை 'ஸமாநார்த்த பதம்' என்பர் வடமொழியாளர். நிகண்டுகளுட் பெரும்பாலன திவாகரத்துட் காணும் தொகுதி முறையையே பின்பற்றிச் செல்கின்றன. ஆனால் இந்நூல் அவ்வாறு செல்லாது புதியதொரு பொருட்பாகுபாடு அமைத்துக் கொண்டு இனிது நடைபெறுகின்றது. அம்முறை வருமாறு:—



நூல் முழுவதும் 808 வெண்பாக்களால் இயன்றுள்ளது. இவற்றுள் பாயிரம் 8 செய்யுள். எஞ்சிய 800 செய்யுட்களும் பொருட்பெயர்களையே விவகரிப்பன. "வெண்பா வொருகாலிற் கல்லானை" என்று வருஞ் செய்யுள் அவ்வகைப் பா மனனஞ் செய்தற்கு எளிதாயுளதெனப் பண்டையோர் கொண்டன ரென்பதை யுணர்த்துகின்றது. இக்கருத்துப்பற்றிப்போலும் வெண்பாவினால் இந்நூல் செய்யப்பெற்றது. பண்டை நிகண்டுகளில் 'உரிச்சொல்' ஒன்றே வெண்பாவினால் அமைந்துள்ளது. ஆனால் அது மிகச் சுருங்கிய நூல். இந்நூல் மிகவிரிந்த நூலாதலோடு செய்யுட்களும் பலவிடங்களில் நயம்பெற அமையப் பெற்றுள்ளது. பிறிதொரு நூனயமும் இங்கே சிறப்பாகக் கூறிக் கொள்ளுதற்குரியது. தெய்வ மானிட வர்க்கங்களிற் பெயர்கூறப்பட்டாருடைய சரிதங்கள் அவர்க்குரிய பெயர்கள் கொண்டே அறியக் கூடியனவாயுள்ளன. உதாரண

மாக, விட்டுணுவிற்குரிய பெயர்களை (செய்யுள் 44-51) நோக்கி யுணர்ந்து கொள்க.

இந்நூலிற் கூறப்பட்டுள்ள பொருட்பெயர்கள் ஏறத்தாழப் பன்னீராயிர மாகும். இப்பெயர்களுள் சங்ககாலந் தொட்டு ஆசிரியரதுகாலம் வரையும் தமிழிற் பயின்றுள்ள சொற்களைக் காணலாம். மலைநாட்டிலிருந்து தமிழிற் புகுந்த சிலதிசைச்சொற்களும் இதன்கண் உள்ளன. 'தை நாறுகன்று'என இந் நூல் கூறும். மலையாள மொழியில் மரக்கன்று 'தை' யென இன்றும் வழங்கப் படுகின்றது. ஆட்சி யென்பது வாரத்தின் பெயரென இந்நூலுணர்த் தும். மலையாளத்தில் இம்மொழி இன்றும் இப்பொருளில் வழங்குகின்றது. இவை போன்றனவும் பிறவும் அறிந்தின்புறுதற்குரியன. 'பல்லாயிர நிகண் டிற் பண்டிதர்கள் சொன்ன பொரு—ளெல்லாம் மெளிதா யினிதுணர... பன்னு தமிழ் நாமதீபம்' என்று பாயிரத்தில் வந்துள்ள அடிகளை நோக்கும் போது இந்நூலை யியற்றுதற்கண் நெடுங்காலமாய் இதன் ஆசிரியர் உழைத் திருத்தல் வேண்டுமென்பது புலனாகின்றது.

இந்நூலாசிரியரது வரலாறாக அறியக்கூடியன மிகச் சிலவேயாம். இவர் கல்லிடைக்குறிச்சியில் வாழ்ந்தவரென்பது பாயிரத்தால் விளங்குகின்றது. தம் தந்தையாரைக் குறித்து இவர் கூறுவதெல்லாம் அவர் 'போதிகை நிகண்டு' எனப் பெயரிய ஒருசொற் பல்பொருள் நிகண்டொன்று இயற்றியுள்ளா ரென்பதேயாம். 'தோகை நிகண்டு' எனப் பெயரிய நூலொன்று தாமே செய் திருப்பதாகவும் உணர்த்துகின்றனர். இங்ஙனமாக நிகண்டின் முத்திறத் தொகுதியையும் இவரும் இவர்தம் தந்தையாரும் செய்து முடித்துள்ளார்கள்.

கல்வி கேள்விகளிற் சிறப்புற்று விளங்கிய இத் தந்தை தநயர்களைக் குறித்து எனது நண்பர் திருவாளர் M. P. S. துரைசாமி முதலியாரவர்கள் கல்லிடைக்குறிச்சி சென்று விசாரணை செய்ததில் இருவரும் ஆண்டுள்ள தளிச்சேரி மடத்தைச் சார்ந்தவர்களென்றுமட்டுந் தெரிந்ததேயன்றி வேறு யாதும் தெரியக்கூடவில்லை. ஆனால், 'தமிழ்ப்பொழில்' பத்திரிகையொன்றால் (துணர் IV, மலர் 7,8,9) சில முக்கிய விஷயங்கள் விளங்கின. அதன்கண் வெளிவந்த 'சாமிநாதம்' என்ற இலக்கணநூலொன்றன் பாயிரத்தில்

பூமிசைப் பன்மொழியின் வேங்கடமுக் கடற்குட்
புணர்தமிழைத் தியனிகண்டாய்ந் தாரெளிதி னுணரத்
தோமின் முன்னூல் வழியொருநூல் வேண்டுமெனத் துறைசைச்
சுடர்மணி சுப்பிரமணிய குருமணி பார்த்தருள
ஆமிதெனக் குருபதமுந் திருக்குறிப்புந் தலைக்கொண்
டகத்தியனைச் சிவசுப்ர மணியனென வீன்ற
சாமிகவி ராசனதி குலத்தோன் கல்லிடையூர்ச்
சம்பனன் செய்தனன் சாமிநாத மென்றிந் நூலே.

என வொருசெய்யுள் காணப்படுகின்றது. இதனாற் கல்லிடைக்குறிச்சியூரி னரான சாமி கவிராசருக்குச் சிவசுப்பிரமணிய கவிராசர் என்ற ஒரு புத்திர

ருண்டென்பதும், இருவரும் திருவாவடுதுறை யாதீனத்து ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் காலத்தவர்களென்பதும், இருவரும் தமிழ்ப்புலமை நிரம்பியவர் களென்பதும், இருவரும் நிகண்டுத் துறையிற் சிறந்து விளங்கியவர்களென் பதும் உணரக் கிடக்கின்றன. நாமதீப நூலாசிரியரது வரலாற்றோடு மேற் குறித்தன பெரிதும் ஒத்திருத்தலின், மேலைச் செய்யுளில் வரும் 'சிவசுப்பிர மணியன்' இவரே யாதல் வேண்டும். இந்த நிகண்டின் பாயிரத்தில் 'சாமிகவி ராசனையுந் தான்வணங்கிப் பேருரைப்பன்' என வருதலும் இம்முடிவினையே வற்புறுத்தும். தமது தந்தையும் வித்தியாகுருவுமா யிருந்தாரைத் தமது நூற் பாயிரத்து வணங்கினரென்று கொள்ளுதல் சாலவும் பொருந்துவதாம்.

சாமிகவிராசரின் காலம் 250 வருடங்கட்கு முற்பட்டதெனத் தமிழ்ப் பொழில் கூறும். எனக்குக் கிடைத்த நாமதீபப் பிரதிகளில் ஒன்றிலேனும் இந் நூலின் காலத்தையறிதற்குரிய குறிப்புக்கள் இல்லை. விக்கிரமசிங்க புரத்துக் குருக்களையா அவர்களிடமிருந்து வரப்பெற்ற உரைபாடச் சுவடித் தலைப்பில் 'சிவகுருநாத தேசிகர் ஏடு' என்றும், உள்ளேயொன்றில் '1042-ம் ௵ கார்த்திகைமீ 10உ' என்றும் காணப்படுகின்றது. இஃது இவ்வேடு எழுதிய காலத்தை யுணர்த்துமே யல்லது நூலாசிரியர் காலத்தையேனும் உரைபா டஞ் செய்தார் காலத்தையேனும் உணர்த்துவதாகக் கொள்ளுதற்கில்லை. சாமி கவிராச ரியற்றிய பொதிகை நிகண்டின் பிரதியொன்றில் '984-ம் ௵ தைமீ 8உ பிள்ளையன் தளவாய் வாசித்துவரும் ஏடு முற்றும்' எனக் காணப்படுகின் றது. அக்காலத்துத் தானே பொதிகை நிகண்டு பிரசாரத்தில் வந்துள்ளதா யின், அதற்குப் பல வாண்டுகட்கு முன்னரே அந்நூல் இயற்றப் பெற்றிருத்தல் வேண்டுமென்று துணியத்தகும். ஆகவே, சாமிகவிராசரது காலமும் அவரது நன்மகனராகிய இந்நூலாசிரியர் காலமும் இற்றைக்கு நூற்றைம்பது வருடங் கட்கு முன்னராமென ஒருவாறு ஊகிக்கலாம். ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் காலமும் இதற்குப் பொருத்தமாகவே வுள்ளது.

இந்நூலினைப் பதிப்பித்தற்கு வேண்டும் ஏட்டுப் பிரதிகள் தந்துதவிய அன்பர்கள் சென்னை இராஜதானிக் கல்லூரித் தமிழாசிரியர் திருவாளர் C. R. நமச்சிவாய முதலியாரவர்களும், ஆழ்வார்குறிச்சி மேலைப் பண்ணை திருவாளர் M. P. S. துரைசாமி முதலியார் B.A, B.L., அவர்களும் ஆவர். இவ்விரு வருக்கும் எனது மனமார்ந்த நன்றியை யிங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். இந்நண்பர்களால் நான்கு மூலப்பிரதிகளும் மூன்று உரைபாடப் பிரதி களும் கிடைத்தன. மூலப் பிரதிகளுள் இரண்டு பிரதிகளில் மாத்திரமே நூல் முற்றுமிருந்தது; மற்றையன அபூர்த்தி. உரைப் பிரதிகளில் ஒன்றேனும் பூர்த் தியானதன்று. ஒரு பிரதியில் 17-ம் செய்யுளிலிருந்து 282-ம் செய்யுள் வரை யுள்ள உரைபாடமே காணப்பட்டது. பிறிதொரு பிரதியில் 116-ம் செய்யுளி லிருந்து 775-ம் செய்யுள் வரையுள்ள உரைபாடம் அடங்கியிருந்தது; ஆனல் இடையிடையே பல விதழ்கள் தவறிவிட்டன. மூன்றும் பிரதியும்

இங்ஙனம் குறைபட்ட பிரதியே யாகும். இம்மூன்று உரைபாடப் பிரதிகளும் பல விடங்களிற் பிழைபட் டிருந்தன. ஆகவே உரைபாடத்தைத் தழுவிப் புதியதோருரை யெழுதுதலே தகுதியெனக் கருதி அவ்வாறு செய்துள்ளேன்.

மேற்குறித்த பிரதிகளுள், நூன் முழுது மடங்கிய மூலப்பிரதி யொன்றும் உரைப்பிரதிகள் இரண்டும் நூலுரைப்பகுதி முற்றும் அச்சியற்றி முடிந்த பின்னரே எனக்குக் கிடைத்தன. ஆதலால் அவைகளை வைத்து ஒப்புநோக்கிப் பாடபேதங்கள் கொடுப்பதொன்றே இயலுவதாயிற்று.

இந்நிகண்டின் சொல்லகராதி அச்சிலிருந்தபொழுது நிகண்டேடுகள் பார்க்கும்பொருட்டுக் காலஞ்சென்ற தி. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் வீட்டுக்குச்சென்றேன். பிள்ளையவர்கள் செல்வக்குமாரர்களாகிய திரு. இராஜசேகரமும் அவர் சகோதரரும் எனக்குத்தங்களிடமிருந்த பிரதிகளனைத்தையும் காட்டி வேண்டும் பிரதிகளையும் மிக்க அன்போடு உதவினார்கள். இவ்விருவர்பாலும் மிக்க நன்றியுடையவனா யிருக்கின்றேன். நாமதீப நிகண்டு மூலத்தின் கடுதாசிப்பிரதியொன்று இவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றேன். இது திரு. நமச்சிவாய முதலியாரவர்களிடமிருந்து கிடைத்த ஏடுகளுள் ஒன்றன் பிரதியே யென்பது ஒப்புநோக்குகையில் தெரியவந்தது.

இந்நூலின் இறுதியிற் சேர்த்திருக்கும் சொல்லகராதியை யெழுதி முடித்தற்கண் உதவி புரிந்தவர்கள் இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை திருவாளர் S. சோமசுந்தர தேசிகரவர்களும், திருவாளர் P. R. மீனாட்சிசுந்தர முதலியார் B.A., B.L., அவர்களு மாவர். இவ்விருவரது அன்புடைமையும் பாராட்டிக் கூறத்தக்கது.

இந்நூலினை விரைவாகவும் அழகாகவும் அச்சிற் பதிப்பித்துதவிய B. N. Press அச்சுக்கூடத் தலைவர்களுக்கு எனது நன்றி உரிமையாகிறது.

தமிழிலுள்ள பிற நிகண்டுகளையும் இவ்வாறே அச்சிடுவிக்கக் கருதியிருக்கிறேன். சூடாமணி நிகண்டொன்று தவிர அச்சில்வந்துள்ள மற்றைய நிகண்டுகட்கு இதுவரை நல்ல பதிப்புக்களே கிடையா. பல நிகண்டுகள் அச்சியற்றப் பெறவே யில்லை. நிகண்டுகள் செவ்வையாய் அச்சிடப்பெறாவிடின் தற்காலத்தே அத்தியாவசியகமாக வேண்டப்படும் தமிழகராதி திருத்தமெய்திப் பெருநலம் பயப்பதாகாது. வடமொழி நிகண்டுகள் பல 'Sources of Sanskrit Lexicography' என்ற கிரந்தமாலையில் ஐரோப்பிய அறிஞரால் வெளியிடப்பட்டுள்ளமை இங்கே நினைப்பூட்டத்தக்கது. யான் பதிப்பிக்கும் தமிழ் நிகண்டுகளும் 'தமிழகராதியின் ஆதாரநூற் றொகுதி' என்ற மகுடத்துடன் வெளிவரும். இத்தொகுதியில் 'நாமதீப நிகண்டு' முதலாவது நூலாகும். இரண்டாவது நூல் 'அரும்பொருள்விளக்க நிகண்டு'. இது மதுரைத்தமிழ்ச் சங்கத்தினின்றும் விரைவின் வெளிவரும். இறைவனருள் முன்னிற்க.

சென்னை
1—11—'30.

S. வையாபுரிப் பிள்ளை,
தமிழ்-லெக்ஸிகன் பதிப்பாசிரியர்.

உள்ளுறை

நாமதீப நிகண்டு

மூலமும் உரையும்

உ

சிவமயம்

நாமதீப நிகண்டு

பாயிரம்

1. ஆனைமுக னைக்குகனை யாதிபுவ னேசொரியை
ஞானமுதல் கோரக்க நாதனையும்—மேன்மைபெறு
சாமிகவி ராகனையுந் தான்வணங்கிப் பேருரைப்பன்
பூமிதனி லுள்ள பொருட்கு. (௧)

2. ஒல்லு முயர்திணைப்பே ரஃறிணையு யிர்ப்பொருட்பே
ரில்பொருட்பே ரிப்பொருள்க ளின்குணப்பேர்—சொல்படல
மாமொருநான் கிட்டிரண்டைந் தைந்துநால் வர்க்கமிட்டு
நாமதீ பம்பகர்ந்தே னான். (௨)

3. தேவர்நர ராமிரண்டுஞ் சீர்பெறுநாற் கால்பறவை
யூர்வனநீர் வாழ்வநிலை யோரைந்து—மேவியற்கை
செய்கையிடங் காலஞ் சினையைந்து நாற்குணமு
மெய்துவர்க்க நாற்படலத் தே. (௩)

4. மனக்குணம்வாக் கின்குணமே மற்றுடலாற் செய்யும்
வினைக்குணமிம் மூன்றுமுயிர் மேவுந்—தனிப்பொருள்கட்
கேய்ந்தகுண மாகுமுயி ரில்பொருள்க ளின்குணமொன்
றாய்ந்தவிவை நாற்குணங்க ளாம். (௪)

5. பல்வடிவு நாற்றமிரண் டைந்துவண்ண மூறெட்டு
நல்ல சுவையாறு நான்களவை—வல்லோர்
புகலுமுயிர்ப் பில்லாப் பொருட்குணங்க ளாகும்
பகர்படல வர்க்கமுறை பார். (௫)

6. திண்பார் புகழ்நாம தீபமோ ரெண்ணூறு
வெண்பாவுஞ் சொற்செறிவான் மெய்த்தனையின்—பண்புசில்பா
வொற்றறுத்த லாதியகொண் டோர்கசில்பா தந்தொடைகள்
பற்றும் வகையுளியாற் பார். (௬)

7. எந்தைப் பொதிகைகிகண் டென்றோர்சொற் பல்பெயரே
தந்தனன்காண் பல்கூட்டஞ் சாரொருபேர்—முந்தியான்
பன்னுந் தொகைநிகண்டிற் பார்க்கவிரி வாமவைக
ளின்னசுருக் கத்தடங்கா வே. (௭)

8. பல்லா யிரநிகண்டிற் பண்டிதர்கள் சொன்னபொரு
ளெல்லா மெளிதா யினிதுரைக்—கல்லிடையூர்
மன்னுசிவ சுப்ர மணியன் கவிராசன்
பன்னுதமிழ் நாமதீ பம். (௮)

பாயிர முற்றும்.

நூல்.

I. உயர்திணைப் படலம்

1. தெய்வ வர்க்கம்.

9. நந்திபெம்மா னாலமர்ந்தோ னம்பனிறை சோதிசெம்ம
லந்திவண்ணன் றாணுநித்தன் ஆனந்தன்—இந்தினன்றீ
முக்கணனைந்து முகன்றிகம்ப ரன்சடைய
னக்கனெண்டோ ளன்பிஞ் ஞகன். (க)

10. ஐந்தொழிலான் ஒன்பான்மூன் றையைந்து மூர்த்திசத்தி
யைந்தனெழுத் தைந்த னருள்வடிவன்—சுந்தரற்குத்
தூதன் குபேரசிநே கன்சுருதி யாகமங்க
ளோதினோ னெண்குணத்தி னோன். (உ)

11. மான்மழுக்க பாலஞ்சூ லந்துடித்தீ யேந்திநஞ்சு
தானுண்டோன் கங்காளன் சாமிபித்தன்—ஞானிபர
னாதிபங்கி பூணூல [1] னண்ணல்சு கன்கயிலை
நாதன்வரன் யோகி நடன். (ங)

உரை பாடம்.

9—18. சிவன்பெயர்:—நந்தி, பெம்மான், ஆலமர்ந்தோன், நம்பன், இறை, சோதி, செம்மல், அந்திவண்ணன், தாணு, நித்தன், ஆனந்தன், இந்து இனன்தீ முக்கணன், ஐந்துமுகன், திகம்பரன், சடையன், நக்கன், எண்டோளன், பிஞ்ஞகன்.

ஐந்தொழிலான், நவமூர்த்தி, திரிமூர்த்தி, ஐயைந்து மூர்த்தி, சத்தியைந்தன், எழுத்தைந்தன், அருள்வடிவன், சுந்தரர்தூதன், குபேரசிநேகன், சுருதியோதினோன், ஆகமங்களோதினோன், எண்குணத்தினோன்.

மானேந்தி, மழுவேந்தி, கபாலமேந்தி, சூலமேந்தி, துடியேந்தி, தீயேந்தி, நஞ்சுண்டோன், கங்காளன், சாமி, பித்தன், ஞானி, பரன், ஆதி, பங்கிந் பூணூலவன், அண்ணல், சுகன், கயிலைநாதன், வரன், யோகி, நடன்.

(பி - ம்.) 1. னண்ணலே.

12. நற்கடுக்கை சிங்க நகமாமை யோட றுகார்த்
கொக்கிறகு தும்பைபன்றிக் கோடுமத்தம்—அக்கெருக்கு
வன்னிபாம் பென்புவில்வம் மால்கண் பிறைகரந்தை
தன்னுகங்கை மீன்கணணிந் தோன். (சு)

13. பார்தேர் பரிவேதம் பாகனயன் மால்கணையக்
கூர் தீக் கணைவிசைகால் கோதண்ட—மேருவரை
நாணரவ மாழிமதி ஞாயிறுபால் வேலையம்புத்
தூணியுங்கொண் டோனீச் சுரன். (ரு)

14. காலன்வே ளானைபுலி காய்ந்தோன் மறைமுதலி
பால்விடையூர்ந் தோனுயர்த்தோன் பாண்டரங்கன்—தோலுடையன்
தேவதே வன்வாம தேவன்மா தேவனத்தன்
காவலன்பி ரானங் கணன். (சு)

15. அழலன்மன்றீ மத்தினிற்பே யோடாடி யீசன்
றழைவிமலன் காளகண்டன் சங்கக்—குழையனுமை
பங்கன் பசுபதிபிச் சாடனன்பூ தப்படையோன்
சங்கரனு ருத்திரனே சம்பு. (எ)

கடுக்கையணிந்தோன், சிங்கநகமணிந்தோன், ஆமையோடணிந்தோன், அறுகணிந்தோன், ஆரணிந்தோன், கொக்கிறகு அணிந்தோன், தும்பை அணிந்தோன், பன்றிக்கோடு அணிந்தோன், மத்தம் அணிந்தோன், அக்கம் அணிந்தோன், எருக்கு அணிந்தோன், வன்னி அணிந்தோன், பாம்பு அணிந்தோன், என்பு அணிந்தோன், வில்வம் அணிந்தோன், மால்கண் அணிந்தோன், பிறை அணிந்தோன், கரந்தை அணிந்தோன், கங்கை அணிந்தோன், மீன்கண் அணிந்தோன்.

பார் - தேர்; வேதம் - பரி; அயன் - பாகன்; மால் - கணை; தீ - அம்பு முனை; வாயு - கணைவிசை ; மேரு - வில்; அரவு - நாண்; ஞாயிறுமதி - ஆழி; பாற்கடல் - அம்புத்தூணி: இவற்றைக் கொண்டோன், ஈச்சுரன்.

காலனைக் காய்ந்தோன், காமனைக் காய்ந்தோன், ஆனையைக் காய்ந்தோன், புலியைக் காய்ந்தோன், மறைமுதலி, விடையூர்தி, விடையுயர்த்தோன், பாண்டரங்கன், தோலுடையன், தேவதேவன், வாமதேவன், மாதேவன், அத்தன், காவலன், பிரான், அங்கணன்.

அழலாடி, மன்றாடி, ஈமத்திலாடி, பேயோடாடி, ஈசன், விமலன், காளகண்டன், சங்கக்குழையன், உமைபங்கன், பசுபதி, பிச்சாடனன், பூதப்படையோன், சங்கரன், உருத்திரன், சம்பு.

16. நிட்களனின் னுமை னிரஞ்சனனி ரந்தரனே
நிர்க்குணன்சாட் [1] சாத்கார னிர்ப்பேத—னிர்ச்சங்க
னத்துவிதன் பூரண னகண்டனச லன்சுக்கன்
முத்த னனுபமன்மு தல். (அ)

17. கண்ணுதல்பு ராரிசித்தன் கத்தனயன் மாற்குமெட்டான்
எண்ணெண்விளை யாட்டானீ சானனரன்—வெண்ணீற்றன்
தந்திகுகன் றாதை சருவஞ்ஞ னன்னைதந்தை
அந்தம் பிறப்பளவி லான். (கூ)

18. அரியன் பெருமானன் பர்க்கெளியான் சாமப்
பிரியனட்ட மூர்த்தி பிநாகி—பரமன்மன
வாக்கினெட்டான் றத்துவா தீதன் மலவயிரி
சேய்க்கறியுண் டோனுஞ் சிவன். (ய)

19. சத்திபரை காளியுமை சண்டிகைப வானிசிவை
யுத்தமிமா ற்கை யுலகீன்றாள்—அத்தையருள்
வாலை புவனை மனோன்மனிச டாதாரி
சூலிமலை மானீச் சுரி. (யக)

நிட்களன், நின்மலன், நிரஞ்சனன், நிரந்தரன், நிர்க்குணன், சாட்சாத்காரன், நிர்ப்பேதன், நிர்ச்சங்கன், அத்துவிதன், பூரணன், அகண்டன், அசலன், சுக்கன், முத்தன், அனுபமன், முதல்.

கண்ணுதல், புராரி, சித்தன், கத்தன், அயனுக்கெட்டான், மாலுக்கெட்டான், எண்ணெண் விளையாட்டான், ஈசானன், அரன், வெண்ணீற்றன், தந்தி தாதை, குகன்றாதை, சருவஞ்ஞன், அன்னையிலான், தந்தையிலான், அந்தமிலான், பிறப்பிலான், அளவிலான்.

அரியன், பெருமான், அன்பருக்கெளியன், சாமப்பிரியன், அட்டமூர்த்தி, பிநாகி, பரமன், மனத்தினெட்டான், வாக்கினெட்டான், தத்துவாதீதன், மலவயிரி, சேய்க்கறியுண்டோன், சிவன். ஆ 161.

19—24. பார்ப்பதி பெயர் :—சத்தி, பரை, காளி, உமை, சண்டிகை, பவானி, சிவை, உத்தமி, மால்தங்கை, உலகீன்றாள், அத்தை, அருள், வாலை, புவனை, மனோன்மனி, சடாதாரி, சூலி, மலைமான், ஈச்சுரி.

(பி - ம்.) 1. சாகார.

20. வீரிகன்னி வல்லணங்கு வேதாளி கங்காளி
யாரணிசா முண்டியயி ராணியைஐ—சூரியம்பை
மாலினி நீலி மதுபதிசிங் காரூடி
பாலைநிலத் தாள்சாம் பவி. (௰௨)

21. சக்கரம்பா சாங்குசம்வாள் சத்திவர தாபயங்கள்
இக்குவிற்பூ வாளிகொண்டா ளெண்டோளி—முக்கண்ணி
யாயி திரிபுரைதா யம்பணத்தி யேகாத்தி
யாயினிகா மக்கோட்டத் தாள். (௰௩)

22. அந்தரி மாதங்கி யம்பிகைதி கம்பரையே
சுந்தரியா ழேடு சுகந்தரித்தாள்—விந்தைசிவ
காமி விமலை கவுரி பகவதி
யாமளைநா ராயணிமா யை. (௰௪)

23. பஞ்சமிகல் யாணி பயிரவி [1] வல்லபி
வஞ்சனியா னந்தியிம வான்புதல்வி—அஞ்சனி
மேனைமக [2] ளாவரணி விட்சேபி யோகினி
யானைமுகன் செவ்வே ளனை (௰௫)

வீரி, கன்னி, வல்லணங்கு, வேதாளி, கங்காளி, ஆரணி, சாமுண்டி, அயிராணி, ஐயை, சூரி, அம்பை, மாலினி, நீலி, மதுபதி, சிங்காரூடி, பாலைநிலத்தாள், சாம்பவி.

சக்கரம், பாசம், அங்குசம், வாள், வேல், வரதம், அபயம், இக்குவில், பூவாளி : இவை யொன்பதும் கொண்டாள், எண்டோளி, முக்கண்ணி, ஆயி, திரிபுரை, தாய், அம்பணத்தி, காத்தியாயினி, காமக்கோட்டத்தாள்.

அந்தரி, மாதங்கி, அம்பிகை, திகம்பரை, சுந்தரி, யாழ்தரித்தாள், ஏடுதரித்தாள், சுகந்தரித்தாள், விந்தை, சிவகாமி, விமலை, கவுரி, பகவதி, யாமளை, நாராயணி, மாயை.

பஞ்சமி, கல்லியாணி, பயிரவி, வல்லபி, வஞ்சனி, ஆனந்தி, இமவான் புதல்வி, அஞ்சனி, மேனைமகள், ஆவரணி, விட்சேபி, யோகினி, ஆனைமுகனன்னை, செவ்வேளன்னை.

(பி - ம்.) 1. வல்லவை. 2. ளாபரணி.

24. ஆரியை வாமிமயி டாரியபி ராமிதுர்க்கை
தாருகசங் காரிலளி தைவிசையை—நாரி
யமரிகவு மாரியறத் தாள்சவுரி தேவி
விமரிசையும் பார்ப்பதிபேர் விள்ளு. (௰௬)

25. இப்பெயரிற் காளிதுர்க்கை யாதிசத்தி கட்கிசையும்
அப்பெயர்கொள் வான்மூ தணங்குகொற்றி—மெய்ப்பான
மாரி வடுகி வடுகன்றாய் மோடியுடன்
சூரியிவை காடுகாள் சொல். (௰௭)

26. தந்திமுகன் பாசாங்கு சங்கனிகொம் பேந்தியொரு
தந்தனால் வாயன் சடையன்முன்னோன்—கந்தனுக்கு
மூத்தோனா கூர்ந்துயர்த்தோன் முக்கண்ணன் மால்சாபம்
தீர்த்தோன் சிவன்கவுரி சேய். (௰௮)

27. பூதரு பத்தனிலம் போதரன்வி நாயகனே
பூத மிவர்ந்தோன் புகர்முகத்தோன்—ஓதுமுறக்
கன்னன்விக்கி னேசன் கயாரிகுடி லாசனத்தான்
சென்னிறத்தா னைங்கரத்தி னன். (௰௯)

ஆரியை, வாமி, மயிடாரி, அபிராமி, துர்க்கை, தாருகசங்காரி, லளிதை, விசையை, நாரி, அமரி, கவுமாரி, அறத்தாள், சவுரி, தேவி, விமரிசை, பார்ப்பதி. ஆ 99.

25. இவற்றுள், காளி, துர்க்கை முதலிய சத்திகளுக்கும் பெயர் அறிக.

காடுகாள் பெயர்:—மூதணங்கு, கொற்றி, மாரி, வடுகி, வடுகன்றாய், மோடி, சூரி, காடுகாள். 8.

26—28. கணபதி பெயர்:—தந்திமுகன், பாசமேந்தி, அங்குசமேந்தி, கனியேந்தி, கொம்பேந்தி, ஒருதந்தன், நால்வாயன், சடையன் முன்னோன், கந்தனுக்கு மூத்தோன், ஆகூர்ந்தோன், ஆகுயர்த்தோன், முக்கண்ணன், மால்சாபந் தீர்த்தோன், சிவன்சேய், கவுரிசேய்.

பூதருபத்தன், இலம்போதரன், விநாயகன், பூதமிவர்ந்தோன், புகர்முகத்தோன், முறக்கன்னன், விக்கினேசன், கயாரி, குடிலாசனத்தான், சென்னிறத்தான், ஐங்கரத்தினன்.

28. நாலிதழ்க்கஞ் சன்போச னப்பிரியன் வல்லவைமன்
மூலமுத லாமைமுது [1]கோடணிந்தோன்—கால்குறியன்
வக்கிரதுண் டன்காக மாகினேன் பொன்னிதந்தோன்
அக்கணப திக்குளபே ராம். (உஅ)

29. கந்தன்முரு கன்குமரன் கார்த்திகே யன்கவுரி
மைந்தன்காங் கேயன்மயி லூர்திசிவன்—மைந்தன்வள்ளி
தெய்வானை மன்புலவன் செட்டிகுகன் வீரர்முன்னோன்
வைவேல வன்குறிஞ்சி மன். (உக)

30. ஈசனயன் கும்ப னிவர்குருச்சு ரந்தணித்தோன்
வாசவனிந் ராணிதிரு மால்மருகோன்—பேசுருத்தி
ராயுதன்றந் திக்கிளையா றுதலன் றேவர்சிறை
காய்பவன்சு வாமிகுழ கன். (உஉ)

31. பன்றிதிற லட்டோன் பவளவடி வன்சமணை
வென்றவன் கற்கி விறலழிப்போன்—குன்றெறிந்து
கீரனை மீட்டோ னருண கிரிக்கருள்வோ
னோர்புலவன் மேற்பாடி னேன். (உங)

நாலிதழ்க்கஞ்சன், போசனப் பிரியன், வல்லவைமன், மூலமுதல், ஆமைமுதுகோடணிந்தோன், கால்குறியன், வக்கிரதுண்டன், காகமாகினேன், பொன்னி தந்தோன், கணபதி. ஆ 36.

29—33. சுப்பிரமணியர் பெயர்:—கந்தன், முருகன், குமரன், கார்த்திகேயன், கவுரிமைந்தன், காங்கேயன், மயிலூர்தி, சிவன்மைந்தன், வள்ளிமன், தெய்வயானைமன், புலவன், செட்டி, குகன், வீரர் முன்னோன், வேலன், குறிஞ்சிமன்.

ஈசன்குரு, அயன்குரு, கும்பன்குரு, சுரந்தணித்தோன், வாசவன் மருகோன், இந்திராணி மருகோன், திருமருகோன், மால்மருகோன், உருத்திராயுதன், தந்திக்கிளையோன், ஆறுதலன், தேவர்சிறை காய்பவன், சுவாமி, குழகன்.

பன்றிதிறலட்டோன், பவளவடிவன், சமணைவென்றவன், கற்கிவிறலழிப்போன், கீரனைமீட்டோன், அருணகிரிக்கருள்வோன், ஓர் புலவன்மேற் பாடினேன்.

(பி - ம்.) 1. கோடிடந்தோன்.

32. சண்முகன்வி சாகன் சரவணப வன்பதினெண்
கண்ணனீ ராறுபுயங் கைசெவியா—னென்னுவெட்சி
காந்தள்குரா நீலங் கடம்பணிவோன் வேள்வேடன்
சேந்தன்கோ ழிக்கொடியோன் சேய். (உச)

33. தாருகன்சிங் காननன்சூர் சாருமன்றில் வெற்புமட்டோன்
[1]நாரதசி நேகன்விண் ணூர் நாட்டினேன்—சேருமும்பர்
சேனைமன்வே தாவைச் சிறையிட்டோ னூரேர்ந்தோ
னசுப்ர மண்யன்பே ராம். (உரு)

34. வேல்சாம்வாள் தண்டுமழு மெய்க்கொடியுங் கந்தன்வலப்
பாலமர்வ விற்பரிசை பற்றீட்டி—சூல்குலிச
மங்குசம்வா மத்தா மபயம் வரதமணி
பங்கயமு முற்குறைத்துப் பன்னு. (உசா)

35. வாகுவுடன் கேசரிம யேந்திரன்ம யேசுரனே
யாகும் புரந்தரனே யந்தகனே—சேகரக்கன்
மார்த்தாண்டன் தீரனும்பின் வைத்துமுன்பு வீரமதைச்
சேர்த்துநவ வீரர்பெயர் செப்பு. (உஎ)

சண்முகன், விசாகன், சரவணபவன், பதினெண்கண்ணன், ஈராறு புயத்தான், ஈராறுகையான், ஈராறு செவியான், வெட்சியணிவோன், காந்தளணிவோன், குராவணிவோன், நீலமணிவோன், கடம்பணிவோன், வேள், வேடன், சேந்தன், கோழிக்கொடியோன், சேய்.

தாருகனையட்டோன், சிங்காननனையட்டோன், சூரனையட்டோன், அன்றில் வெற்பட்டோன், நாரத சிநேகன், விண்ணூர்நாட்டினேன், உம்பர்சேனைமன், வேதாவைச் சிறையிட்டோன், ஊரேர்ந்தோன், சுப்பிரமணியன். ஆ 64.

34. சுப்பிரமணியர் கையாயுதம் 12 :—வேல், சரம், வாள், தண்டு, மழு, கொடி: இவை வலக்கையாயுதம். 6.

வில், பரிசை, ஈட்டி, சூலம், குலிசம், அங்குசம்: இவை இடக்கையாயுதம்-6.

இவற்றுள் இரண்டனைக் குறைத்து அபயம் வரதம் இரண்டனையுங் கூட்டிப் பன்னிரண்டென்றலுமாம்.

35. நவவீரர் பெயர் :—வீரவாகு, வீரகேசரி, வீரமயேந்திரன், வீரமயேசுரன், வீரபுரந்தரன், வீராந்தகன், வீரராக்கதன், வீரமார்த்தாண்டன், வீரதீரன். 9.

(பி - ம்.) 1. நாரதன்சிநேகன்.

36. அங்கிமுகன் வச்சிரவா காளிமுகத் தோன்வீர
சிங்கனிர விப்பகைதன் மப்பகைவ—னிங்கிவரை
யட்டோன் றகர்பிடித்தோன் பாசுரக்கோ லந்தகன்மேற்
றொட்டோன்கு ரூரையழித் தோன். (௨௮)

37. காளியையவென் றோனரன்மா ணிக்கமின்சேய் கார்கடிந்தோன்
வாளினன்செவ் வேட்கிளைய வன்றூதன்—நீளிலக்கத்
தெண்மர்முன்ன வன்சயந்த னைத்தெளித்தோ னுந்திவந்தோன்
வண்ணஞ்சேர்ந் தோன்வீர வாகு. (௨௯)

38. ஆயிரமு கந்தலையீ ராயிரங்கை தோள்செவிமூ
வாயிரங்கண் ணுள்ளோன்மா லாற்றலட்டோன்—பாய்திகிரி
நுங்கினன் சார்ங்கமட்டான் றண்டழித்தா னும்பர்களை
யங்கொருநாள் கொன்றெழுப்பி னன். (௩௰)

39. இந்துவைத்தேய்த் தான்பகன்கண் டீக்கரமேழ் நாக்கிரவி
தந்தமழித் தோன்பிரம சாரதியா—னுந்துபொற்றே
ரூர்திதக்கன் சென்னியறுத் தோன்மகசங் காரியந்தச்
சோரனுக்கு மைத்தலைவைத் தோன். (௩௧)

36—37. வீரவாகுபெயர் :—அங்கிமுகனையட்டோன், வச்சிரவாகுவை யட்டோன், ஆளிமுகனையட்டோன், வீரசிங்கனையட்டோன், இரவிப்பகையை யட்டோன், தன்மப்பகைவனை யட்டோன், தகர்பிடித்தோன், பாசுரக் கோல் அந்தகன்மேற் றொட்டோன், குரூரை யழித்தோன்.

காளியை வென்றோன், அரன்சேய், மாணிக்கமின் சேய், கார்கடிந் தோன், வாளினன், செவ்வேட்கிளையவன், செவ்வேள் தூதன், இலக் கத்தெண்மர் முன்னவன், சயந்தனைத் தெளித்தோன், உந்திவந்தோன், வண் ணஞ் சேர்ந்தோன், வீரவாகு. ஆ 21.

38—40. வீரபத்திரன் பெயர்:—ஆயிரமுக முள்ளான், ஆயிரந்தலை யுள்ளான், ஈராயிரங் கையுள்ளான், ஈராயிரந் தோளுள்ளான், ஈராயிரஞ்செவி யன், மூவாயிரங் கண்ணுள்ளான், மாலாற்றலட்டோன், மால்திகிரி நுங்கி னன், மால்சார்ங்க மட்டான், மால்தண் டழித்தான், உம்பர்களைக் கொன் றெழுப்பினோன்.

இந்துவைத் தேய்த்தோன், பகன்கண்ணழித்தோன், தீயின் கையுட னெழுநா வறுத்தோன், இரவிதந்த மழித்தோன், பிரமசாரதியான், தேரூர்தி, தக்கன் சென்னியறுத்தோன், தக்கன் மகசங்காரி, தக்கனுக்கு மைத்தலை வைத் தோன்.

40. கட்கனுமை சேய்சிவன்றீக் கண்ணுதித்தோன் காளிநண்ப
னுக்கிரன் செஞ்சடையா னேரெண்காற்—பக்கிவண்ணன்
நாரசிங்கன் வீறழித்தோன் பானுகம்ப னைப்பயந்தோன்
வீரபத்தி ரன்பேரா மே. (௩௨)

41. சித்தன்வடு கன்குமரன் பிள்ளையயன் சென்னிகொய்தோன்
முத்தனூ யூர்திமுக்க ணன்காரி—மத்தகயத்
தோலுரித்த வன்கேத்ர பாலன் கரும்பரியான்
சூலன் வயிரவன்பேர் சொல். (௩௩)

42. வெள்ளிவரை காப்போன் விடைமுகன்பூ தத்தலைவன்
தெள்ளுஞ் சுதேதைமன்சி லாதரன்சேய்—விள்ளரிய
வேதாக மக்குரவன் வேத்திரக்கை யானேழு
மாதிநந்தி கேச்சுர னுக்காம். (௩௪)

43. காரிசெண்டு தண்டணிந்தோன் கையனையன் மாலரன்சே
யாரியன்பச் சைப்பரிவெள் ளானையுள்ளோன்—பூரணை
புட்கலைமன் யோகிகடல் வண்ணனெய்தல் பூண்டோன்கோ
ழிக்கொடியோ னெண்கரன்சாத் தன். (௩௫)

---

* கட்கன், உமைசேய், சிவன்றீக்கண் ணுதித்தோன், காளிநண்பன், உக்கிரன், செஞ்சடையான், எண்காற்பக்கி வண்ணன், நரசிங்கன் வீறழித்தோன், பானுகம்பனைப் பெற்றோன், வீரபத்திரன். ஆ 30.

41. வயிரவன் பெயர்:—சித்தன், வடுகன், குமரன், பிள்ளை, அயன் சென்னிகொய்தோன், முத்தன், நாயூர்தி, முக்கணன், காரி, கயத்தோலுரித்தோன், கேத்திரபாலன், கரும்பரியான், சூலன், வயிரவன். ஆ 14.

42. நந்திகேச்சுரன் பெயர்:—வெள்ளிவரை காப்போன், விடைமுகன், பூதத்தலைவன், சுதேதைமன், சிலாதரன்சேய், வேதாகமக் குரவன், வேத்திரக்கையான், நந்திகேச்சுரன். 8.

43. சாத்தர்வின் பெயர் :—காரி, செண்டணிந்தோன், தண்டணிந்தோன், கையன், ஐயன், மாலரன்சேய், ஆரியன், பச்சைப்பரி யுள்ளோன், வெள்ளானையுள்ளோன், பூரணைமன், புட்கலைமன், யோகி, கடல்வண்ணன், நெய்தல் பூண்டோன், கோழிக்கொடியன், எண்கரன், சாத்தன். ஆ 17.

44. வாமனிரா மன்பலதே வன்பரசன் கிட்டிணன்மீன்
கூர்மநர சிங்கம்வரா கங்குதிரை—யாம்வடிவன்
விண்டா யிரநாமன் வேலைபாம் [1]பால்கோலிற்
கண்டுயில்வோ னேமிசெங்க ணன். (௩௬)

45. பாருண் டளந்திடந்தோன் பச்சைகரி யோன்விசைய
சாரதிகோ பாலனச்சு தன்பிரமன்—மாரனத்தன்
கோசலைய சோதைநந்த கோன்வசுதே வன்புதல்வன்
தாசரதி தேவகிமைந் தன். (௩௭)

46. பொன்னவனி சீதையெண்ம ராய்ச்சியரை யும்புணர்ந்தோன்
பின்னுபேந்தி ரன்பெருமாள் பீதாம்ப—ரன்முகுந்தன்
கண்ணன்றா மோதரனாற் கையன்கோ விந்தன்முகில்
வண்ணன் புருடோத்த மன். (௩௮)

47. மாதவன்ஞா னத்துயிலோன் வைகுண்டன் கேசவன்மால்
சீதரனீண் டோன்காவற் றேவனைவர்—தூதன்வில்வா
ளாழிசங்கந் தண்டம்பஞ் சாயுதன்புள் ளூர்ந்துயர்த்தோன்
வாழ்பதும நாபன்வல வன். (௩௯)

44—51. விட்டுணுவின் பெயர்:—வாமன், இராமன், பலதேவன், பரசன், கிட்டிணன், மீன், கூர்மம், நரசிங்கம், வராகம், குதிரை: ஆகிய பத்து வடிவன், விண்டு, ஆயிரநாமன், வேலையிற் றுயில்வோன், பாம்பிற் றுயில்வோன், ஆலிற்றுயில்வோன், கோலிற் றுயில்வோன், நேமி, செங்கணன்.

பாருண்டோன், பாரளந்தோன், பாரிடந்தோன், பச்சை, கரியோன், விசையசாரதி, கோபாலன், அச்சுதன், பிரமனத்தன், மாரனத்தன், கோசலை புதல்வன், அசோதை புதல்வன், நந்தகோன் புதல்வன், வசுதேவன் புதல்வன், தாசரதி, தேவகி மைந்தன்.

பொன்னைப் புணர்ந்தோன், அவனியைப் புணர்ந்தோன், சீதையைப் புணர்ந்தோன், எண்மரைப் புணர்ந்தோன், ஆய்ச்சியரைப் புணர்ந்தோன், உபேந்திரன், பெருமாள், பீதாம்பரன், முகுந்தன், கண்ணன், தாமோதரன், நாற்கையன், கோவிந்தன், முகில்வண்ணன், புருடோத்தமன்.

மாதவன், ஞானத்துயிலோன், வைகுண்டன், கேசவன், மால், சீதரன், நீண்டோன், காவற்றேவன், ஐவர் தூதன், வில்லன், வாளன், ஆழியான், சங்கன், தண்டன், பஞ்சாயுதன், புள்ளூர்ந்தோன், புள்ளுயர்த்தோன், பதுமநாபன், வலவன்.

(பி - ம்.) 1. பால்தோலிற்.

48. பொன்னன் றிரிசிரத்தோன் பொற்கண்ணன் வாலிகும்ப
கன்னன்விரா தன்கால கேயர்கரன்—பின்வாணன்
கஞ்சன்மூ லன்சோமு கன்கயிட வன்கவந்தன்
வஞ்சமான் றந்தவக்கி ரன். (சஅ)

49. மாலிசிசு பாலனிலங் கேசன்மது தாடகைசு
மாலிமுரன் றுந்துமியே தூடணன்சாத்—தூலியையும்
வென்றோன்புள் வாய்கீண்டோன் வெம்பேய் முலையொடுயிர்
தின்றோன் மலைக்குடைசெய் தோன். (சக)

50. வண்டுருவன் சோரன் மருதிடந்தோன் காகுத்தன்
பண்டியட்டோன் சாலமெய்தோன் பாம்பாடி—பெண்டுருவன்
கன்றாற் கனியெறிந்தோன் சிதை சிறைகடிந்தோன்
மன்பூபா ரந்தவிர்த்த வன். (சஉ)

51. நாரணனு ராயணன்சு ரர்க்கமுத நல்கினோன்
வாரிகடைந் தோன்வரம்பிட் டோனடைத்தோன்—காரியரி
மாயன் [1]றுழாய்மணிம றுப்புயனி ராகவனோ
டாயனிவை விட்டுணுப்பே ராம். (சங)

பொன்னனை வென்றோன், திரிசிரனை வென்றோன், பொற்கண்ணனை வென்றோன், வாலியை வென்றோன், கும்பகன்னனை வென்றோன், விராதனை வென்றோன், காலகேயரை வென்றோன், கரனை வென்றோன், வாணனை வென்றோன், கஞ்சனை வென்றோன், மூலனை வென்றோன், சோமுகனை வென்றோன், கயிடவனை வென்றோன், கவந்தனை வென்றோன், வஞ்சமானை வென்றோன், தந்தவக்கிரனை வென்றோன்.

மாலியை வென்றோன், சிசுபாலனை வென்றோன், இலங்கேசனை வென்றோன், மதுவை வென்றோன், தாடகையை வென்றோன், சுமாலியை வென்றோன், முரனை வென்றோன், துந்துமியை வென்றோன், தூடணனை வென்றோன், சாத்தூலியை வென்றோன், புள்வாய் கீண்டோன், பேய்முலையொ டுயிர்தின்றோன், மலைக்குடை செய்தோன்.

வண்டுருவன், சோரன், மருதிடந்தோன், காகுத்தன், பண்டியட்டோன், சாலமெய்தோன், பாம்பாடி, பெண்டுருவன், கன்றாற் கனியெறிந்தோன், சிதைசிறை கடிந்தோன், பூபாரந் தீர்த்தவன்.

நாரணன், நாராயணன், சுரர்க்கமுத நல்கினோன், வாரி கடைந்தோன், வாரி வரம்பிட்டோன், வாரி யடைத்தோன், காரி, அரி, மாயன், துழாய்ப்புயன், மணிப்புயன், மறுப்புயன், இராகவன், ஆயன், விட்டுணு ஆ 120.

(பி - ம்.) 1. துழாயணிம.

52. நீலாம் பரன்முசலி வெள்ளையனந் தன்காம
பால னலாயுதன்ப னந்தாமன்—சர்வமோர்
குண்டலனீ ரேபதிமன் கூறுபலபத்திரனே
திண்பலதே வன்சிறப்புப் பேர். (சச)

53. இந்திரைமாச் செல்வியிளை யாளிரமைச் செய்யாள்பொன்
செந்திருப்பூ மான்கமலை சிதேவி—விந்தைமகள்
பாற்கடல்வந் தாள்பொறிமால் பாரிமதன் றயாக்கந்
தாக்கணங்கி லக்குமிபேர் தான். (சரு)

54. அன்னமுயர்த் தூர்ந்தோ னனந்தன்மால் சேய்வாணி
மன்னன்மறை யோன்மலரோன் மண்படைத்தோன்—துன்னும்
பிதாமகனெண் கண்ணன் பிதாச்சதா னந்தன்
விதாதா கமலன் விதி. (சகா)

55. சம்புபர மேட்டி சதுமுகன்வே தாக்குரவன்
பம்பு மிரணியகெர்ப் பன்சூதன்—நம்பும்
வரனயன் ஞானியிறை வானோர் முதுவன்
பிரமன் றனக்குரிய பேர். (சஎ)

---

52. பலதேவன் பெயர்:—நீலாம்பரன், முசலி, வெள்ளை, அனந்தன், காமபாலன், அலாயுதன், பனந்தாமன், ஓர்குண்டலன், இரேவதிமன், பலபத்திரன், பலதேவன். ஆ 11.

53. இலக்குமி பெயர்:—இந்திரை, மா, செல்வி, இளையாள், இரமை, செய்யாள், பொன், திரு, பூமான், கமலை, சிதேவி, விந்தைமகள், பாற்கடல் வந்தாள், பொறி, மால்பாரி, மதன்றய், ஆக்கம், தாக்கணங்கு, இலக்குமி. ஆ 19.

54—55. பிரமன்பெயர்:—அன்னமுயர்த்தோன், அன்ன மூர்ந்தோன், அனந்தன், மால்சேய், வாணிமன்னன், மறையோன், மலரோன், மண்படைத்தோன், பிதாமகன், எண்கண்ணன், பிதா, சதானந்தன், விதாதா, கமலன், விதி.

சம்பு, பரமேட்டி, சதுமுகன், வேதா, குரவன், இரணிய கெர்ப்பன், சூதன், வரன், அயன், ஞானி, இறை, வானோர் முதுவன், பிரமன். ஆ 28.

56. பாமகள்பி ராமியயன் பாரிவெண்பூ மானிசைமான்
நாமகள்வாக் காள்வாணி ஞானிவெள்ளை—யாமுருவாள்
பாரதிசா வித்திரிகா யத்திரிபூ ரப்பரியாள்
ஈரேழ் சரசோ தி யே. (சஅ)

57. கந்தர்ப்பன் வேள்வசந்தன் காமன்மதன் மால்பூமான்
மைந்த னனங்கன் மதுசகனே—சிந்துவண்ணன்
அங்கசன்ம னேபுசம்ப ராரிசித்த சன்மோகன்
றங்கிரதி மன்மாரன் மூன். (சகூ)

58. அற்கரிகாற் றேர்கிளிமா வாழிமுர சிந்துகுடை
பொற்குயில்சின் னந்தாழம் பூவான்மீ—னக்கொடிபெண்
தானையன்றில் காளமகிழ் தார்மல் லிகைபடிக்கம்
வேனில்விழாச் சோலைபடை வீடு. (ருய)

59. வாகைமரைத் தாள்கரும்பு வண்கமுகம் பாளைப்பூ
வாகியவில் லம்புயநூ லாய்ந்தபிச்சி—மோகவண்டு
வெட்டிவேர் மாந்தளிர்நாண் விந்தமாப் பிண்டிமுல்லை
யட்டிடுநீ லங்கோ லவற்கு. (ருக)

---

56. சரசோதி பெயர்:—பாமகள், பிராமி; அயன்பாரி, வெண்பூமான், இசைமான், நாமகள், வாக்காள், வாணி, ஞானி, வெள்ளை யுருவாள், பாரதி, சாவித்திரி, காயத்திரி, பூரப்பரியாள்,சரசோதி. ஆ 15.

57--59. மன்மதன் பெயர்:--கந்தர்ப்பன், வேள், வசந்தன், காமன்,மதன், மால்மைந்தன், பூமான் மைந்தன், அனங்கன், மதுசகன், சிந்துவண்ணன், அங்கசன், மனேபு, சம்பராரி, சித்தசன், மோகன், இரதிமன், மாரன்.

அற்கரியான், காற்றேரான், கிளிமாவான், ஆழிமுரசன், இந்துக் குடையான், குயிற்சின்னன், தாழைம்பூவாளான், மீனக்கொடியான், பெண் தானையான், அன்றிற்காளத்தான், மகிழ்த்தாரான், மல்லிகைப் படிக்கத்தான், வேனில்விழாவான், சோலைப் படைவீட்டான்.

வாகைவில்லான், மரைத்தாள் வில்லான், கருப்புவில்லான், கமுகம் பாளைவில்லான், கமுகம்பூவில்லான், அம்புயநூல் நாணன், பிச்சிப்பூநாணன், வண்டுநாணன், வெட்டிவேர்நாணன், மாந்தளிர் நாணன், விந்தக் கோலன், மாம்பூக்கோலன், பிண்டிக்கோலன், முல்லைக்கோலன், நீலக் கோலன். ஆ 46.

60. ஆகண்ட லன்மா லரிபுருகூ தன்புலவன்
போகி புரந்தரன்பு ரோகிதனே—மேகமூ
ணுச்சிரவா வெள்ளானை யூர்ந்தோ னிடிக்கொடியன்
வச்சிரன்விண் கோவாசவன். (௫௨)

61. ஆயிரங்கண் ணன்கரியோ னண்டர்கோன் கோசிகனே
மாய்வில்சசி மன்மருத்து வன்மகவான்—றேய்பாக
சாதனன்சு ணுசிசக்க ரன்சதமக ன்மருத
நாதன் வலாரியிந்தி ரன். (௫௩)

62. இந்திரன் றேவியிந்தி ராணியயி ராணிசசி
சுந்தரிபு லோமிசையாஞ் சொல்சயந்தன்—மைந்தனுர்
தேவணங்கு சூர்கடவுள் தெய்வதம்புத் தேளியவுள்
ஆவனதெய் வப்பொதுப்பே ராம். (௫௪)

63. விண்ணவரி லேகரண்டர் மேனிலர்பட் டாரகரே
பண்ணவரா தித்தர் பகவர்சுரர்—நண்ணமரர்
புங்கவ ரும்பர் புலவரிமை யோர்விபுத
ரங்கமுதுண் டோர்தேவ ராம். (௫௫)

60—61. இந்திரன் பெயர்:—ஆகண்டலன், மால், அரி, புருகூதன், புலவன், போகி, புரந்தரன், புரோகிதன், மேகமூர்ந்தோன், உச்சிரவா வூர்ந்தோன், வெள்ளானை யூர்ந்தோன், இடிக்கொடியன், வச்சிரன், விண்கோ, வாசவன்.

ஆயிரங்கண்ணன், கரியோன் , அண்டர்கோன், கோசிகன், சசிமன், மருத்துவன், மகவான், பாகசாதனன், சுனாசி, சக்கரன், சதமகன், மருதநாதன், வலாரி, இந்திரன். ஆ. 29.

62. இந்திரன்றேவி பெயர்:—இந்திராணி, அயிராணி, சசி, சுந்தரி, புலோமிசை. ,, 5.

இந்திரன்மகன் பெயர்:—சயந்தன். ,, 1.

தெய்வப் பொதுப்பெயர்:—தேவு, அணங்கு, சூர், கடவுள், தெய்வதம், புத்தேள், இயவுள், தெய்வம். ,, 8.

63. தேவர்கள் பெயர்:—விண்ணவர், இலேகர், அண்டர், மேனிலர், பட்டாரகர், பண்ணவர், ஆதித்தர், பகவர், சுரர், அமரர், புங்கவர், உம்பர், புலவர், இமையோர், விபுதர், அமுதுண்டோர், தேவர். ,, 17.

64. உருத்திரர் பன்னொருவர் ஓர்பன் னிருவி
ரருக்கர் வசுக்களெண்ம ரன்றி—மருத்துவரொன்
றுன வசுவனிக ளவ்விருவ ராகவிவர்
வானின்முப்பான் மூன்றுதே வர். (௬௪)

65. சிவனுருத்தி ரன்றேவ தேவன் கபாலி
சவுமியன்ப வோற்பவன்மா தேவன்—கவர்நீல
லோகிதன்வீ மன்விசையன் சங்கரனு ருத்திரர்க
ளேகா தசரா மிவர். (௬௫)

66. ஆன்றவரு ணன்பூடா அஞ்சனுடன் றாதாவே
தோன்றுமிந்தி ரன்சவிதாச் சொல்விவச்சு—வான்பகனே
தொட்ட பரிச்சனியே தொட்டாவே மித்திரனே
விட்டுணுவீ ராறருக்கர் மெய். (௬௬)

67. துருவன் பிரத்யூடன் சோம னனிலன்
தரனனல னுபத் துவனே—பிரபாவ
னெண்வசுக்க ளாகு மிருமருத்தர் தத்திரனே
விண்ணுறுநா தத்திபனு மே. (௬௭)

---

64. முப்பத்துமூன்று தேவர் பெயர்:—உருத்திரர் பதினொரு வர், பன்னிரண்டாதித்தர், எட்டு வசுக்கள், மருத்துவரிருவர்.

65. ஏகாதச வுருத்திரர் பெயர்:—சிவன், உருத்திரன், தேவதேவன், கபாலி, சவுமியன், பவோற்பவன், மாதேவன், நீல லோகிதன், வீமன், விசையன், சங்கரன். ஆ 11

66. துவாதசாதித்தர் பெயர்:—வருணன், பூடா, அஞ் சன், தாதா, இந்திரன், சவிதா, விவச்சுவான், பகன், பரிச்சனி, தொட்டா, மித்திரன், விட்டுணு. ,, 12.

67. அஷ்டவசுக்கள் பெயர்:—துருவன், பிரத்தியூடன், சோமன், அனிலன், தரன், அனலன், ஆபத்துவன், பிரபாவன். ,, 8.

மருத்துவரிருவர் பெயர்:—தத்திரன், நாதத்தியன். ,, 2.

68. தேவர்முனி வோரியக்கர் சித்தர்விஞ்சை யோர்கருடர்
பூவசுரர் கிம்புருடர் பூதர்படர்—மாவரக்கர்
நாகருடுக் கந்திருவர் கின்னரர்பேய் நற்போகர்
மாகர்பதி னெண்கணநா மம். (௬௮)

69. அருமரா மானரம்பை யண்டர்பெண்ணி டாகினியே
சாகினி சன்மினிமூத் தாள்முகடி—காகமுயர்
சேட்டைகர வூர்திதௌவை சீர்கேடி யோர்சடையாள்
கேட்டையிவை மூதேவிக் கே. (௬௯)

70. மின்னுவித்தி யாதரரே விஞ்சையர் கோசரரே
தன்னிகரில் சேடியராஞ் சாதியொன்றே—கின்னரர்கள்
கந்திருவர் கிம்புருடர் யாழ்பயில்வாற் பாராள்வாற்
றந்திறலி னற்கணபே தம். (௭௦)

71. போகநிலத் தின்புறவோர் போகர்விண்ணிற் சஞ்சரிப்போர்
மாகர்சுர ரேவல்செய்வோர் வன்படராம்—ஏகுகுறள்
சாதகங்கி ருத்திமஞ்சா தம்பாரி டங்கூளி
பூதம் பிரேதகமும் போற்று. (௭௧)

---

68. பதினெண் கணத்தின் பெயர்:—தேவர், முனிவர், இயக்கர், சித்தர், விஞ்சையர், கருடர், அசுரர், கிம்புருடர், பூதர், படர், அரக்கர், நாகர், உடு, கந்திருவர், கின்னரர், பேய், போகர், மாகவாசியர். ஆ. 18.

69. தெய்வப் பெண்களின் பெயர்:—அரமான், அரம்பை. ,, 2.

இடாகினி பெயர்:—இடாகினி, சாகினி, சன்மினி. ,, 3.

மூதேவி பெயர்:—மூத்தாள், முகடி, காகமுயர்த்தாள், சேட்டை, கரவூர்தி, தவ்வை, சீர்கேடி, ஓர்சடையாள், கேட்டை, மூதேவி. ,, 10.

70. வித்தியாதரர் பெயர்:—வித்தியாதரர், விஞ்சையர், கோசரர், சேடியர். ,, 4.

கின்னரர், கந்திருவர், கிம்புருடர் என்னு மூவரு மொருசாதி. அவர் யாழ் வாசினையாற் கின்னரரென்றும், அரசரிமையாற் கந்திருவரென்றும், வீரத் திறத்தாற் கிம்புருடரென்றும் கணங்களிற் பேதப்படுவர்.

71. போகபூமியி லின்ப மனுபவிப்போர் பெயர்—போகபூமியார். ,, 1.

ஆகாயத்திற் சஞ்சரிப்போர் பெயர்:—மாகவாசியர். ,, 1.

தேவருக்கு ஏவல் செய்வோர் பெயர்:—படர். ,, 1.

பூதங்களின் பெயர்:—குறள், சாதகம், கிருத்திமம், சாதம், பாரிடம், கூளி, பூதம், பிரேதகம். ,, 8.

72. பாசங் குணலிகுண பாசிகுண பங்குணங்கு
வீசலகை யண்ணை வியந்தரம்ப—சாசுகடி
வேதாளஞ் சோகு வெறிகிரகஞ் சங்கைமயல்
[1] தீதார்பே யாங்கழுதஞ் செப்பு. (சுஉ)

73. அந்தரத்தார்க் கொன்ன ரவுனர் தகுவர்திதி
மைந்தர் தயித்தியராம் வாளசுரர்—முந்தரக்கர்
நீலர் நிருதர் நிசாசரரி ராக்கதரே
சால கடங்கடராந் தான். (சுரு)

74. சோதியெழு நாவரிதீத் தூமகே தங்கியனல்
சாதவே தாக்கனல்சேர்ந் தார்க்கொல்லி—மோதெரியா
ரேர்திதழல் வன்னி யுதாசனனே வாயுசக
னரல்வசுத் தேயு வழல். (சுசா)

75. தகனன் முளரி தனஞ்சயன்சு வாலன்
சிகிசுடர் தென்கிழ்த் திசையோன்—ஞெகிழிசித்ர
பானுத் தபனனெருப் பங்கார கன்சுசியென்
றானமி லக்கினிப்பே ரோது. (சுஎ)

72. பேயின் பெயர்:—பாசம், குணலி, குணபாசி, குணபம், குணங்கு, அலகை, அண்ணை, வியந்தரம், பசாசு, கடி, வேதாளம், சோகு, வெறி, கிரகம், சங்கை, மயல், பேய், கழுது. ஆ 18.

73. அசுரர் பெயர்:—அந்தரத்தோர்க்கொன்னர், அவுணர், தகுவர், திதி மைந்தர், தயித்தியர், அசுரர். „ 6.

இராக்கதர் பெயர்:—அரக்கர், நீலர், நிருதர், நிசாசரர், இராக்கதர், சாலகடங்கடர். „ 6.

74—75 தீயின் பெயர்:—சோதி, எழுநா, அரி, தீ, தூமகேது, அங்கி, அனல், சாதவேதா, கனல், சேர்ந்தார்க்கொல்லி, எரி, ஆரேர்தி, தழல், வன்னி, உதாசனன், வாயுசகன், ஆரல், வசு, தேயு, அழல்.

தகனன், முளரி, தனஞ்சயன், சுவாலன், சிகி, சுடர், தென்கிழ்த் திசையோன், ஞெகிழி, சித்திரபானு, தபனன், நெருப்பு, அங்காரகன், சுசி, அக்கினி. „ 34.

(பி - ம்.) 1. தீதார் பெயர்கழுது.

76. தீபகந்தி பந்திபி கைவிளக்காங் காட்டுத்தீத்
[1]தாவகம்வின் கொள்ளியுற்கை குப்தூபம்—ஆவியரி
தூமம் புகைபெண் சுதைசுவா கரவடவை
யாமடங்க லூழி யனல். (சு அ)

77. அனனடைசு வாலைபொறி யாஞ்சுடர்பு லிங்கங்
கனவிரத நாரங் கவந்தம்—புனல்முகிற்பூச்
சிவனங்கி லாலநீர் சிந்துதகம் வாரிபயங்
கோவளகங் காரங் குசம். (சு க)

78. அம்பப்பா லஞ்சலில மங்கமல நீரமறல்
கம்புட் கரம்வருணங் காண்டமயஞ்—சம்பரம்வா
ரம்புயம்பா னீயமவ தாரம்வனம் பாணியமு
தம்புவனந் தோயஞ் சலம். (எழ)

76. விளக்கின் பேயர்:—தீபகம், தீபம், தீபிகை, விளக்கு. ஆ 4.
காட்டுத் தீயின் பேயர்:—காட்டுத்தீ, தாவகம். ,, 2.
விண்கொள்ளியின் பேயர்:—விண்கொள்ளி, உற்கை. ,, 2.
புகையின் பேயர்:—குப், தூபம், ஆவி, அரி, தூமம், புகை. ,, 6.
அக்கினியின் பாரியைகள் பேயர்:—சுதை, சுவாகா. ,, 2.
ஊழித்தீயின் பேயர்:—வடவை, மடங்கல், ஊழியனல். ,, 3.
அனல்நடையின் பேயர்:—அனல்நடை, சுவாலை. ,, 2.
தீப்பொறியின் பேயர்:—பொறி, சுடர், புலிங்கம். ,, 3.

77—78. நீரின் பேயர்—கனவிரதம், நாரம், கவந்தம், புனல், முகிற்பூ, சிவனம், கிலாலம், நீர், சிந்து, உதகம், வாரி, பயம், கோ, அளகம், கார், அங்குசம்.

அம்பு, அப்பு, ஆலம், சலிலம், அம், கமலம், நீரம், அறல், கம், புட்கரம், வருணம், காண்டம், அயம், சம்பரம், வார், அம்புயம், பானீயம், அவதாரம், வனம், பாணி, அமுதம், புவனம், தோயம், சலம். ஆ 40.

(பி - ம்.) 1. காவகம்.

79. தெய்வப் புனறீர்த்தந் தேவதைகட் காட்டுநீர்
மொய்மஞ்ச [1] னங்கடா யங்குடிநீர்—பெய்யுமருந்
திட்டுவற்று நீர்சா றிரதமிலை யாதியினீர்
விட்ட திராவகம்வேர் நீர். (எக)

80. நீர்நுரைபே னம்பெருக்கு நீத்தம் பிரவாகம்
வாரி பிரளயமும் வெள்ளமுமாஞ்—சேர்மொக்குள்
கொப்புள்புற்பு தங்குமிழி கோலநீ ரோட்டமாம்
அப்பின் சுழியுந்தி யாம். (எஉ)

81. திரையலைத ரங்கமறல் சிகரங்கல் லோலம்
வரைநீ ரருவி யுவகை—யுரைதிவலை
தூவலுறை யாலிதுமி சீகரமு நீர்த்துளிப்பே
ரோவி லுவர்நீ ருறை. (எங)

---

79. தெய்வப்புனலின் பெயர்:—தெய்வப்புனல், தீர்த்தம். ஆ 2.
தேவதைகட் காட்டுநீரின் பெயர்:—மஞ்சனம். ,, 1.
மருந்திட்டு வற்றுநீரின் பெயர்:—கடாயம், குடிநீர். ,, 2.
இலையாதிகளி னீரின் பெயர் :—சாறு, இரதம். ,, 2
வேர் நீரின் பெயர் :—திராவகம், வேர்நீர். ,, 2.

80. நீர் நுரையின் பெயர்:—நீர்நுரை, பேனம். ,, 2.
நீர்ப்பெருக்கின் பெயர்:—பெருக்கு, நீத்தம், பிரவாகம், வாரி, பிரளயம், வெள்ளம். ,, 6.
நீர்க்குமிழியின் பெயர்:—மொக்குள், கொப்புள், புற்புதம், குமிழி. ,, 4.
நீரோட்டத்தின் பெயர்:—கோலம், நீரோட்டம். ,, 2.
நீர்ச்சுழியின் பெயர்:—சுழி, உந்தி. ,, 2.

81. நீர்த்திரையின் பெயர்:—திரை, அலை, தரங்கம், அறல், சிகரம், கல்லோலம். ,, 6.
வரைநீரின் பெயர்:—வரைநீர், அருவி, உவகைநீர். ,, 3.
திவலையின் பெயர் :—திவலை, தூவல், உறை, ஆலி, துமி, சீகரம், துளி. ,, 7.
உவர்நீரின் பெயர் :—உவர்நீர், உறை. ,, 2.

(பி - ம்.) 1. னங்கிடா.

82. குண்டமுந்த காதங்கெம் பீரங் கயமாழுந்
தண்டெளிநீ ரின்பேர் [1] சலசலமாங்—தின்கலங்க
னீர்கலுழி யாவிலமா நீரிறைவன் பாசன்மீ
னூர்திநதி கேள்வன்வரு ணன். (௭௪)

83. கொண்டல்முகி லப்பிரங்கொண் [2] மூக்குயில்ப யோதரஞ்செல்
விண்டெழிலி யம்புதம்வி சும்புமங்குல்—ஒண்புயல்வான்
தாராத ரஞ்சீமூ தங்கனமை கந்தரமால்
கார்சீத மஞ்சுவிண்மே கம். (௭௫)

84. மாரிவரு டம்விருட்டி தூறல்பெயல் வானமழை
வீரியஞ்சேர் சோனை விடாமழையா—சாரம்
பெருமழைக ஞேபலமா லாங்கட்டிப் பேராம்
வருபனியி மந்துகின மாம். (௭௬)

---

82. ஆழத்தின் பெயர்:—குண்டு, அழுந்து, அகாதம், கெம்பீரம், கயம், ஆழம். ஆ. 6.

தெளிநீரின் பெயர்:—தெளிநீர், சலசலம். ,, 2.

கலங்கனீரின் பெயர்:—கலங்கனீர், கலுழி, ஆவிலம். ,, 3.

நீரிறைவன் பெயர் :—பாசன், மீனூர்தி, நதிகேள்வன், வருணன். ,, 4.

83. மேகத்தின் பெயர் :—கொண்டல், முகில், அப்பிரம், கொண்மூ, குயில், பயோதரம், செல், விண்டு, எழிலி, அம்புதம், விசும்பு, மங்குல், புயல், வான், தாராதரம், சீமூதம், கனம், மை, கந்தரம், மால், கார், சீதம், மஞ்சு, விண், மேகம். ,, 25.

84. மழையின் பெயர்:—மாரி, வருடம், விருட்டி, தூறல், பெயல், வானம், மழை. ,, 7.

விடாமழையின் பெயர்:—சோனை, விடாமழை. ,, 2.

பெருமழைப் பெயர்:—ஆசாரம், பெருமழை. ,, 2.

ஆலாங்கட்டிப் பெயர்:—கனோபலம், ஆலாங்கட்டி. ,, 2.

பனியின் பெயர் :—பனி, இமம், துகினம். ,, 3.

(பி - ம்.) 1. சற்சலம் ? 2. மூக்குயின்ப ?

85. சஞ்சலைமின் சம்பை தடித்துவித்து ருச்சவலை
மிஞ்சு கனருசியு மின்னலின்பேர்—அஞ்சசனி
விண்ணே றுருமு வெடிமடங்கல் செல்லொலியே
யண்ணுமன லேறுமிடிக் காம். (எஎ)

86. தண்டன்பா சன்சூலன் சண்டனடு வன்மடங்கல்
திண்டருமன் செங்கோலான் றென்றிசைக்கோன்— மிண்டுசமன்
மாலரிகால் சங்காரன் வைவச்சு தன்மறலி
காலனமன் கூற்றந்த கன். (எஅ)

87. வக்கிரதந் தன்கரியோன் வைதரணி யாற்றினே
னக்கிடா வூர்ந்துயர்த்தோ [1] னுமெமன்பேர்—மைக்காலன்
கூற்றமைச்சன் சித்திரனுங் குத்தனுங்கூற் றின்கணக்கர்
சாற்றுமிருத் தேவல்செய்வ தாம். (எகூ)

88. நந்திநண்பன் செல்வனர வூர்திபுட்ப கன்றனதன்
மந்திரி பிங்கலன் [2] வைச்சிரவன்—முந்துகின்ன
ரேசனள கேசனியக் கேசன் மாகதனே
யாசினிதிக் கோன்குபே ரன். (அய)

---

85. மின்னின் பெயர்:—சஞ்சலை, மின், சம்பை, தடித்து, வித்துரு, சவலை, கனருசி, மின்னல். ஆ 8.

இடியின் பெயர்:—அசனி, விண்ணேறு, உருமு, வெடி, மடங்கல், செல், ஒலி, அனலேறு, இடி. ,, 9.

86—87. எமன் பெயர்:—தண்டன், பாசன், சூலன், சண்டன், நடுவன், மடங்கல், தருமன், செங்கோலான், தென்றிசைக்கோன், சமன், மால், அரி, கால், சங்காரன், வைவச்சுதன், மறலி, காலன், நமன், கூற்று, அந்தகன், வக்கிரதந்தன், கரியோன், வைதரணியாற்றினேன், கிடாவூர்தி, கிடாவுயர்த்தோன், எமன். ,, 26.

எமன் மந்திரியின் பேர்:—காலன். ,, 1.

எமன் கணக்கர் பெயர்:—சித்திரன், குத்தன் ,, 2.

எமனேவல் செய்வது:—மிருத்து. ,, 1.

88. குபேரன் பெயர்:—நந்திநண்பன், செல்வன், நரவூர்தி, புட்பகன், தனதன், மந்திரி, பிங்கலன், வைச்சிரவன், கின்னரேசன், அளகேசன், இயக்கேசன், மாகதன், நிதிக்கோன், குபேரன். ,, 14.

(பி - ம்.) 1. னுமிமன்பேர். 2. வைவச்சிருவன்.

89. வந்துயிர்புட் கோனருணன் மற்றிடிமின் வேந்தர்முன்னேன்
கந்தவகன் வாதமரி கஞ்சலனா—னிலம்
ஆயுசகன் காசிபன்சே யாசுகம்பெ லன்பரிசன்
வாயு வளிமாரு தம். (அக)

90. கால்வயின தேயன் கலைவாக னன்பவனன்
மாலொலிச தாகதிம ருத்துலவை—மேல்வடதிக்
காள்வோன் சமீர னனுமன்வீ மன்றுதை
[1] காளகன்வங் கூழ்பவமான் காற்று. (அஉ)

91. கோடைமேல் கால்கீழ்கால் கொண்டல்வட கால்வடந்தை
வாடைதென்கால் மென்கால் மலயக்கால்—கூடுசிறு
கால்வசந்தந் தென்றிதென்றல் காண்கூதி ரூதைபனிக்
கால்சுழல்கால் சாரிகைசூ றை. (அங)

92. ஆதவன ருக்கனரு ணன்கனலி மார்த்தாண்டன்
சோதிபிதிர்க் கோள்பருதி சூரனினன்—ஆதித்த
னேழ்பரியோ னோராழித் தேரோ னிருள்வலியென்
றாழ்விகத்தன் சண்டனுதை யன். (அச)

89—90. வாயுவின் பெயர்:—வந்து, உயிர், புட்கோன் முன்னோன், அருணன் முன்னோன், இடிவேந்தன் முன்னோன், மின்வேந்தன் முன்னோன், கந்தவகன், வாதம், அரி, கம், சலனன், அனிலம், ஆயுசகன், காசிபன் சேய், ஆசுகம், பெலன், பரிசன், வாயு, வளி, மாருதம்.

கால், வயினதேயன், கலைவாகனன், பவனன், மால், ஒலி, சதாகதி, மருத்து, உலவை, மேல்வடதிக் காள்வோன், சமீரன், அனுமன்றுதை, வீமன்றுதை, காளகன், வங்கூழ், பவமான், காற்று. ,, 37.

91. மேல்காற்றின் பெயர்:—கோடை, மேல்காற்று. ,, 2.

கீழ்காற்றின் பெயர்:—கீழ்கால், கொண்டல். ,, 2.

வடகாற்றின் பெயர்:—வடகால், வடந்தை, வாடை. ,, 3.

தென்காற்றின்பெயர்:—தென்கால், மென்கால், மலயக்கால், சிறுகால், வசந்தம், தென்றி, தென்றல். ,, 7.

பனிக்காற்றின் பெயர்:—கூதிர், ஊதை, பனிக்கால். ,, 3.

சுழல்காற்றின் பெயர்:—சுழற்கால், சாரிகை, சூறை. ,, 3.

92—95 சூரியன்பெயர்:—ஆதவன், அருக்கன், அருணன், கனலி, மார்த்தாண்டன், சோதி, பிதிர்க்கோள், பருதி, சூரன், இனன், ஆதித்தன், எழ்பரியோன், ஓராழித்தேரோன், இருள்வலி, என்றாழ், விகத்தன், சண்டன், உதையன்.

(பி - ம்) 1. தாழ்கண.

93. பானுவொளி விண்மணிப னிப்பகைப தங்கனண்ட
யோனிசுடர் சிங்கன்மறி யுச்சன்வெய்யோன்—வான்விளக்க
மாயிரங்க ரன்றினக ரன்கிரண மாலியரி
ஞாயிறெல்லை மந்திதப னன். (அரு)

94. கிரகேச னெல்லி கிரிவலஞ்செய் கின்றோன்
தரணிசனி தாதை சவிதா—விரவி
மதியளப்போன் வாணா ளளப்போன்சான் றோன்செங்
கதிரவன்வி [1] யாழசிநே கன். (அசு)

95. பாற்கரன்வேந் தன்கமல பாந்திபக லென்றரிய
மாக்கதிர்வி ரோசனன்றி வாகரனே—தாக்கலரி
சாயையுடா தேவிதலை வன்காசி பன்னதிதி
யேயன்மித்தி ரன்சூ ரியன். (அஎ)

96. தானவன்கு பேரனல்லோன் தண்கதிர்சு தாகரனே
[2] மானனிறை யம்புலிசோ மன்கடகக்—கோன்முயற்கூ
டிந்தரிநி லாவிமக ரன்களங்கன் வேந்துபுதன்
றந்தைகலை யோனுடுக்காந் தன். (அஅ)

பானு, ஒளி, விண்மணி, பனிப்பகை, பதங்கன், அண்டயோனி, சுடர், சிங்கன், மறியுச்சன், வெய்யோன், வான்விளக்கம், ஆயிரங்கரன், தினகரன், கிரணமாலி, அரி, ஞாயிறு, எல்லை, மந்தி, தபனன்.

கிரகேசன், எல்லி, கிரிவலஞ் செய்கின்றோன், தரணி, சனிதாதை, சவிதா, இரவி, மதியளப்போன், வாணாளளப்போன், சான்றோன், செங்கதிரவன், வியாழசிநேகன்.

பாற்கரன், வேந்தன், கமலபாந்தி, பகல், என்று, அரியமா, கதிர், விரோசனன், திவாகரன், அலரி, சாயைதலைவன், உடாதேவிதலைவன், காசிபனேயன், அதிதியேயன், மித்திரன், சூரியன். ஆ 65.

96—97. சந்திரன் பெயர்;—தானவன், குபேரன், அல்லோன், தண்கதிர், சுதாகரன், மானன், இறை, அம்புலி, சோமன், கடகக்கோன், முயற்கூடு, இந்து, அரி, நிலா, இமகரன், களங்கன், வேந்து, புதன்றந்தை, கலையோன், உடுக்காந்தன்.

(பி - ம்) 1. யாழ சிநேகி. 2. மானநிறை.

97. திங்கள்சசி மூன்ருழித் தேரோன் பதின்பரியோன்
அங்குமுத பாந்திபன ருயைமகன்—பைங்கதிரே
யத்திரிசேய் தாய்க்கோ ளலவன்விடை யுச்சன்விது
வத்தனையுஞ் சந்திரன்பே ராம். (அகூ)

98. மங்கலன்சே யாரல்வள வன்றீ மகரவுச்சன்
செங்குசனங் காரகன்மண் சேய்பவுமன்—பைங்குருதி
மேடனெண்ப ரித்தேரோன் வக்கிரன்வி ருச்சிகனே
வாடத் துணைக்கோள்செவ் வாய். (கூ0)

99. மேதைபுந்தி மால்புலவன் வித்தைக்கோ ளெண்பரியான்
தூதன்மதி சேய்சவுமன் தேர்ப்பாகன்—மூதறிஞன்
கன்னியான் கன்னியுச்சன் பச்சைகணக் கன்மிதுனன்
பொன்னருணன் கூரியன்பு தன். (கூக)

100. அந்தணன்சி கண்டிகன்பொன் ஞங்கிர சன்றேவ
மந்திரிசி வன்மகவின் கோளரசன்—செந்தனுவன்
மாண் [1] குருநண் டுச்சனென் மாவான்ப்ரு கற்பதியே
யாண்டளப்போன் [2] மீனன்வியா ழன். (கூ2)

திங்கள், சசி, மூன்ருழித்தேரோன், பதின்பரியோன், குமுதபாந்தி, அனருயைமகன், பைங்கதிர், அத்திரிசேய், தாய்க்கோள், அலவன், விடையுச்சன், விது, சந்திரன். ஆ 33.

98. செவ்வாயின் பெயர்:—மங்கலன், சேய், ஆரல், வளவன், தீ, மகரவுச்சன், குசன், அங்காரகன், மண்சேய், பவுமன், குருதி, மேடன், எண்பரித்தேரோன், வக்கிரன், விருச்சிகன், துணைக்கோள், செவ்வாய். ஆ 17.

99. புதன் பெயர்:—மேதை, புந்தி, மால், புலவன், வித்தைக்கோள், எண்பரியான், தூதன், மதிசேய், சவுமன், தேர்ப்பாகன், அறிஞன், கன்னியான், கன்னியுச்சன், பச்சை, கணக்கன், மிதுனன், அருணன், கூரியன், புதன். ஆ 19.

100. வியாழத்தின் பெயர்:—அந்தணன், சிகண்டிகன், பொன், ஆங்கிரசன், தேவமந்திரி, சிவன், மகவின்கோள், அரசன், தனுவன், குரு, நண்டுச்சன், எண்மாவான், பிருகற்பதி, ஆண்டளப்போன், மீனன், வியாழன். ஆ 16.

(பி - ம்) 1. குகு. 2. பீனன்.

101. பார்க்கவன்சுங் கன்கவிப ளிங்குசனன் கோல்விடையன்
காக்கோள்பெண் கோள்காப்பி யன்பிருகு—மாக்கள்பத்தோன்
தானவர்கு ருக்கரணன் சல்லியனே[1] போகிபுகர்
மீனவுச்சன் வெள்ளிசுக் கிரன். (௯௩)

102. மந்தன்முட னோயன்மக ரன்கதிர்சேய் சன்காரி
யுந்தாயுக் கோள்கொடியூர்ந் தோன்முதுவோன்—சந்திர
சாவகன்கோ லுச்சனயத் தோனெண்மா வன்சவுரி
தாவில்கும்பன் மேற்கோள் சனி. (௯௪)

103. ஆறுபரி யான்ஞானக் கோள்கா ராவுதமம்
பாறுமிரா குச்சிகிசெம் பாம்புபரி—யாறுடையான்
துட்டக்கோ ளாங்கேதுத் துன்பவிடக் கோள்சனிசேய்
கட்டமுறு மாந்திகுளி கன். (௯௫)

104. முன்னாள்யா ழேறிரலே ஐப்பசிம ருத்வாநாள்
சென்னிபரி யச்சுவதி சீர்ப்பரணி—துன்னடுப்புத்

---

101. சுக்கிரன் பெயர்:—பார்க்கவன், சுங்கன், கவி, பளிங்கு, உசனன், கோல், விடையன், காக்கோள், பெண்கோள், காப்பியன், பிருகு, மாக்கள் பத்தோன், தானவர்குரு, கரணன், சல்லியன், போகி, புகர், மீனவுச்சன், வெள்ளி, சுக்கிரன். ஆ 20.

102. சனியின் பெயர்:—மந்தன், முடன், நோயன், மகரன், கதிர் சேய், சன்காரி, ஆயுக் கோள், கொடியூர்ந்தோன், முதுவோன், சந்திரசாவ கன், கோலுச்சன், அயத்தோன், எண்மாவான், சவுரி, கும்பன், மேற்கோள், சனி. ஆ 18.

103. இராகுவின் பெயர் :—ஆறுபரியான், ஞானக்கோள், காராவு, தமம், இராகு. ,, 5.

கேதுவின் பெயர்:—சிகி, செம்பாம்பு, பரியாறுடையான், துட் டக்கோள், கேது. ,, 5.

குளிகன் பெயர்:—விடக்கோள், சனிசேய், மாந்தி, குளிகன். ,, 4.

104. அசுவதியின் பெயர்:—முன்னாள், யாழ், ஏறு, இரலை, ஐப்பசி, மருத்துவாநாள், சென்னி, பரி, அச்சுவதி. ,, 9.

பரணியின் பெயர்:—பரணி, அடுப்பு, கிழம், பூதம், தாசி, சோறு, தாசு. ,, 7.

(பி - ம்) 1. போதி.

தோய்கிழம்பூ தந்தாசி சோறுதரா சாமறுவாய்
தீயழகி ருல்கார்த் திகை. (சுசு)

105. உரோகிணிவி மானமய னுட்சதிதே ரூற்று
ஆரோணியுரு ளாமதிமாழ் கோடே—நரிப்புறமும்
மீன்மிகயி ரம்பாலை மெய்மிருக சீரிடப்பேர்
மான்றலையு மார்கழியு மாம். (சுஎ)

106. செங்கையாழ் மூதுரையீ சன்றினமு மாதிரைப்பேர்
பொங்கதிதி நாளா வணம்புணர்தம்—பைங்கரும்பு
பிண்டிபுனி தம்புணர்பூ சம்பூசங் காற்குளமே
வண்டுகுரு நாட் கொடிறு மாம். (சுஅ)

107. ஆயிலியம் பாம்பு [1] கவை யாயின்மக முற்சனியே
காய்வேட்டு வன்கொடுநு கம்வேள்வி—வாய்க்காலாம்
தூர்க்கை கணையெலியி டைச்சனிபூ ரஞ்சுடர்நாட்
பிற்சனிபங் குனியுத்தி ரம். (சுக)

கார்த்திகையின் பெயர்:—அறுவாய், தீ, அழகு, இருல், கார்த்திகை. ஆ 5.

105. உரோகிணிப் பெயர்:—உரோகிணி, விமானம், அயனுள், சதி, தேர், ஊற்றுல், ஆரோணி, உருள். ,, 8.

மிருகசீரிடத்தின் பெயர்:—மதி, மாழ்கு, நரிப்புறம், மும்மீன், மிகயிரம், பாலை, மிருகசீரிடம், மான்றலை, மார்கழி. ,, 9.

106. திருவாதிரையின் பெயர்:—செங்கை, யாழ், மூதுரை, ஈசன்றினம், ஆதிரை. ,, 5.

புனர்பூசத்தின் பெயர் :—அதிதிநாள், ஆவணம், புணர்தம், கரும்பு, பிண்டி, புனிதம், புணர்பூசம். ,, 7.

பூசத்தின் பெயர்:—பூசம், காற்குளம், வண்டு, குருநாள், கொடிறு ,, 5.

107. ஆயிலியத்தின் பெயர்:—ஆயிலியம், பாம்பு, கவை, ஆயில். ,, 4.

மகத்தின்பெயர்:—மகம், முற்சனி, வேட்டுவன், கொடுநுகம், வேள்வி, வாய்க்கால். ,, 6.

பூரத்தின்பெயர்:—தூர்க்கை, கணை, எலி, இடைச்சனி, பூரம். ,, 5.

உத்திரத்தின் பெயர்:—சுடர்நாள், பிற்சனி, பங்குனி, உத்திரம். ,, 4.

(பி - ம்.) 1. சவை.

108. அத்தநவ்வி மீன்கைக் களிறைவிரல் காமரங்க
வுத்துவமாந் தச்ச னுடைநடுநாட்—சித்திரைப்பேர்
செய்பய றளக்குமா மீள்சோதி காற்றுவீழ்க்
கைநுகம்வி ளக்குமரக் கால். (௱)

109. கிட்டுவிசா கஞ்சுளகாந் தேள்பனையே மித்திரநாள்
நாட்ட னுடம் வேதியிந்த்ர நாட்கேட்டை—சேட்டையும்வல்
லாரையுந் தேட்கடைகொக் காணியன்றில் வின்மூலப்
பேரசுர நாளென்றும் பேசு. (௱க)

110. முற்குளநீர் நாளும்பூ ராடமாம் விச்சுவநாட்
பிற்குள மாடியுத்தி ராடப்பேர்—முக்கோலே
சிவுலக்கை மால்நாட் சிரவணமோ ணம்வசுநாள்
ஆவணிபுட் காகமவிட் டம். (௱உ)

---

108. அத்தத்தின் பெயர்:—அத்தம், நவ்வி, மீன், கை, களிறு, ஐவிரல், காமரம், கவுத்துவம். ஆ 8.

சித்திரையின் பெயர்:—தச்சன், உடை, நடுநாள், சித்திரை, செய், பயறு, அளக்கு. 7.

சோதியின் பெயர்:—சோதி, காற்று, வீழ்க்கை, நுகம், விளக்கு, மரக்கால். ,, 6.

109. விசாகத்தின் பெயர்:—விசாகம், சுளகு. ,, 2.

அனுடத்தின் பெயர்:—தேள், பனை, மித்திரநாள், அனுடம். ,, 4.

கேட்டையின் பெயர்:—வேதி, இந்திரநாள், கேட்டை, சேட்டை, வல்லாரை. ,, 5.

மூலத்தின் பெயர்:—தேட்கடை, கொக்கு, ஆணி, அன்றில், வில், மூலம், அசுரநாள். ,, 7.

110. பூராடத்தின் பெயர்:—முற்குளம், நீர்நாள், பூராடம். ,, 3.

உத்திராடத்தின் பெயர்:—விச்சுவநாள், பிற்குளம், ஆடி, உத்திராடம். ,, 4.

திருவோணத்தின் பெயர்:—முக்கோல், உலக்கை, மால்நாள், சிரவணம், ஓணம். ,, 5.

அவிட்டத்தின் பெயர்:—வசுநாள், ஆவணி, புள், காகம், அவிட்டம். ,, 5.

111. குன்றுசெக்குச் சுண்டன்வரு [1] ணம்போர் சதையமுற்கோல்
நன்புரட்டை நாழிபூ ரட்டாதி—வென்றிமன்னன்
பிற்கோல் முரசுமுத்தி ரட்டாதி ரேவதிப்பேர்
சொற்கடைநாட் டோணி தொழு. (௱௧௧)

112. சாலிவட மீன்வசிட்டன் தார மருந்ததிபேர்
ஏல்புடைய மேடமா டேறிடபஞ்—சாலிரட்டை
வீணை [2] சயமகள்வி ழாமிதுனங் கற்கடகம்
காணுநண்ட தாமரிசிங் கம். (௱௧௨)

113. பெண்கன்னி செட்டிநிறைப் பேர்துலாந் தேட்பெயரே
விண்விருச்சி கந்தனுவே விற்பெயராம்—திண்சுறு
மான்மகரங் கும்பமே மட்கலப்பேர் மீனமே
மீனின் பொதுப்பெயரா மே. (௱௧௩)

---

111. சதையத்தின் பேயர்:—குன்று, செக்கு, சுண்டன், வருணம், போர், சதையம். ஆ 6.

பூரட்டாதியின் பேயர்:—முற்கொழுங் கோல், புரட்டை, நாழி, பூரட்டாதி. ,, 4.

உத்திரட்டாதியின் பேயர்:—மன்னன், பிற்கொழுங்கோல், முரசு, உத்திரட்டாதி. ,, 4.

ரேவதியின் பேயர்:—ரேவதி, கடைநாள், தோணி, தொழு. ,, 4.

112. அருந்ததியின் பேர்:—சாலி, வடமீன், வசிட்டன்றாரம், அருந்ததி. ,, 4

மேடத்தின் பேயர்:—ஆட்டின் பெயரெல்லாம் ஆம்.

இடபத்தின் பேயர்:—காளையின் பெயரெல்லாம் ஆம்.

மிதுனத்தின் பேயர்: —இரட்டை, வீணை, சயமகள், விழா, மிதுனம். ,, 5

கற்கடகத்தின் பேயர்:—நண்டின் பெயரெல்லாம் ஆம்.

சிங்கத்தின் பேயர்:—சிங்கப் பெயரெல்லாம் ஆம்.

113. கன்னிப் பேயர்:—பெண்கள் பெயரெல்லாம் ஆம்.

துலாப் பேயர்:—செட்டிகள் பெயரெல்லாம் ஆம்.

விருச்சிகத்தின் பேயர்:—தேளின் பெயரெல்லாம் ஆம்.

தனுவின் பேயர்:—வில்லின் பெயரெல்லாம் ஆம்.

மகரத்தின் பேயர்:—சுறுவின் பெயரும், மான் பெயரும்.

கும்பத்தின் பேயர்:—மட்பாண்டப் பெயரெல்லாம் ஆம்

மீனத்தின் பேயர்:—மீன் பொதுப் பெயரெல்லாம் ஆம்.

(பி - ம்) 1. ணன்போர், 2. சவைமகள்?

114. தாரைநாட் சுக்கையுடுத் தாரகைபம் புற்கைவிண்மீன்
பர்வான்வில் லிந்திரவிற் பச்சைவில்லா—மூர்கோள்
பரிவேட மோரை பவனமில்லி ராசி
அரியகதிர் வட்டம்விசை யம். (௱௪)

115. வெய்யிலென்றா ழாதவம்வெய் யோன்கதிர் மதிக்கதிரே
பெய்நிலவு சந்திரிகை பின்னிருட்பேர்—மொய்திமிரங்
கச்சளந்து ணங்கறல்தி வாந்தமந்த காரமரி
மெச்சுதம மங்குல்கரு வே. (௱௫)

---

114. நட்சத்திரப் பெயர்:—தாரை, நாள், சுக்கை, உடு, தாரகை, பம்பு, உற்கை, விண்மீன். ,, 8.

இந்திரவில்லின் பெயர்:—வான்வில், இந்திரவில், பச்சைவில். ,, 3.

பரிவேடத்தின் பெயர்:—ஊர்கோள், பரிவேடம். ,, 2.

இராசிப் பொதுப் பெயர்:—ஓரை, பவனம், இல், இராசி. ,, 4.

சூரியவட்டத்தின் பெயர்:—கதிர்வட்டம், விசையம். ,, 2.

115. வெய்யிலின் பெயர்:—வெய்யில், என்றூழ், ஆதவம், வெய்யோன் கதிர். ,, 4.

நிலாவின் பெயர்:—நிலவு, சந்திரிகை. ,, 2.

இருட்டின் பெயர்:—இருள், திமிரம், கச்சளம், துணங்கறல், திவாந்தம், அந்தகாரம், அரி, தமம், மங்குல், கரு. ,, 10.

தெய்வ வர்க்கம் முற்றும்.

உயர்திணைப் படலம்

2. மானிட வர்க்கம்.

116. மானவர்மண் ணோர்மனிதர் மாந்தர்மக்கள் மாக்கணரர்
மானுவராண் டோர்மனுடர் மைந்தர்மனு—மானிடரா
மன்பதையும் பஞ்ஞிலுமக் கட்பரப்பாம் நங்கைநம்பி
யென்பர்பெண்ணா ணிற்சிறந்தோர்க் கே. (க)

117. பேதைமக ளேப்பெதும்பை பெண்டரிவை நாரிநல்லாள்
மாதணங்கு காந்தைபிணா மானினியே—கூர்தெரிவை
யங்கனைமா யாள்வனிதை யாட்டிமட வாள்மடந்தை
மங்கைபெண்ணுங் காரிகையு மாம். (உ)

118. வன்னமுறும் பேதைபெதும் பைமங்கை யேமடந்தை
பின்ன ரிவைதெரிவை பேரிளம்பெண்—தன்வயது
முந்தெழுபன் னென்றுபதின் மூன்றுபத்தொன் பானிருபத்
தைந்தெண்ணான் கையெட்டு மாம். (ங)

உரை பாடம்.

116. மானிடர் பெயர் :—மானவர், மண்ணோர், மனிதர், மாந்தர், மக்கள், மாக்கள், நரர், மானுவர், ஆண்டோர், மனுடர், மைந்தர், மனு, மானிடர். ஆ 13.

மக்கட்பரப்பின் பெயர் :—பஞ்ஞில், மக்கட் பரப்பு. ,, 2.

பெண்ணிற்சிறந்தாள் பெயர் :—நங்கை. ,, 1.

ஆணிற்சிறந்தான் பெயர் :—நம்பி. ,, 1.

117. பெண்ணின் பெயர் :—பேதை, மகடூஉ, பெதும்பை, பெண்டு, அரிவை, நாரி, நல்லாள், மாது, அணங்கு, காந்தை, பிணா, மானினி, தெரிவை, அங்கனை, மாயாள், வனிதை, ஆட்டி, மடவாள், மடந்தை, மங்கை, பெண், காரிகை. ,, 22.

118. பருவப்பெண்கள் பெயர் :—

பேதைக்கு வயது 7 ; பெதும்பைக்கு வயது 11.
மங்கைக்கு வயது 13 ; மடந்தைக்கு வயது 19.
அரிவைக்கு வயது 25 ; தெரிவைக்கு வயது 32.
பேரிளம் பெண்ணுக்கு வயது 40.

119. ஆண்புருடன் காளைமைந்த னுடவனு ரேஉக்குமரன்
மாண்புமான் பூமான் மகன்விடலை—வீண்பேடு
நஞ்சகமே சண்ட நபுஞ்சகங்கி லீபமலி
யஞ்சவுறும் பெண்டகமு மாம். (௪)

120. பற்றிலர்நீத் தார்தா பதரிருடி மார்தூயோ
ருற்றதவர் பண்ணவர்த போதனர்மா—லற்றோ
ரறவருறு வோரடிக ளையர்மெய்ப்பர் யோகர்
துறவர்முனை வோர்முனிவர் சொல். (௫)

121. கும்பன் றமிழ்நன் குறுமுனிக டற்குடித்தோன்
செம்பொதிகை மோனி சிவசமனன்—வம்புபுரி
வில்வலன்வா தாவியன்றில் வெற்புவிந்த மால்சமைபத்
தல்லட்டோ னுமகத்தி யன். (௬)

122. ஆசிரியன் போதனண்ணன் றேசிகனு பாத்தியத்த
னாசாரி யன்பணிக்கன் சாமியய்ய—னாசான்
குரவ னடிகளுரவோன்குருவாஞ் சீடன்
பரவுமா ணாக்கனுங்கற் பான். (௭)

---

119. ஆணின் பெயர்:—ஆண், புருடன், காளை, மைந்தன், ஆடவன், ஆஉ, குமரன், புமான், பூமான், மகன், விடலை. ஆ 11.
பேடியின் பெயர்:—பேடு, நஞ்சகம், சண்டம், நபுஞ்சம், கிலீபம், அலி, பெண்டகம். ,, 7.

120. இருடிகள் பெயர்:—பற்றிலர், நீத்தார், தாபதர், இருடிமார், தூயோர், தவர், பண்ணவர், தபோதனர், மாலற்றோர், அறவர், உறவோர், அடிகள், ஐயர், மெய்யர், யோகர், துறவர், முனைவோர், முனிவர். ,, 18.

121. அகத்தியன் பெயர்:—கும்பன், தமிழ்நன், குறுமுனி, கடற்குடித்தோன், பொதிகைமோனி, சிவசமனன், வில்வலனட்டோன், வாதாவியட்டோன், அன்றில்வெற்பட்டோன், விந்தமட்டோன், மால் சமையத்தலட்டோன், அகத்தியன். ஆ 12.

122. குருவின் பெயர்:—ஆசிரியன், போதன், அண்ணன், தேசிகன், உபாத்தி, அத்தன், ஆசாரியன், பணிக்கன், சாமி, அய்யன், ஆசான், குரவன், அடிகள், உரவோன், குரு. ஆ 15.
சீடன் பெயர்:—சீடன், மாணாக்கன், கற்பான். 3.

123. தக்கோன்விற் பன்னனல்லோன் சாரதிசா டாரியன்சூர்
மிக்கோன்மே தாவிபுதன் மேதைசுதீ—மெய்க்கலைஞன்
சான்றோ னுலகறிஞன் சங்கமவை பண்டிதனே
யான்றோன்கற் றோன்புலவ னும். (அ)

124. நாவலன்பா வேந்தன்வித்து வான்கணக்கா யன்கவிஞன்
பாவலன்கற் றுச்சொலிபேர் பாடகனும்—பாவலரை
வைப்பார் கவிகமகன் வாதியுடன் வாக்கியென்றே
மெய்ப்பினொரு வர்க்கொருவர் மேல். (கூ)

125. தேசார் சவுமியன்றி கம்பரனும் யோகியா
மாசின்மதத் தார்சமய ரங்கவருட்—பாசுபதர்
மாவிரதர் வாமர் வயிரவர்கா ளாமுகரே
தாவில்சைவ ருட்சமயத் தார். (ய)

126. மெய்வாமர் சாத்தருடல் வேதங் குணங்கந்தம்
அவ்வுயிர்மால் பற்றுமவ ரேபுறத்தார்—இவ்வாற்றிற்

---

123. அறிவுள்ளோன் பேயர்:—தக்கோன், விற்பன்னன், நல்லோன், சாரதி, சாடு, ஆரியன், சூர், மிக்கோன், மேதாவி, புதன், மேதை, சுதீ, கலைஞன், சான்றோன், உலகு, அறிஞன், சங்கம், அவை, பண்டிதன், ஆன்றோன், கற்றோன், புலவன். ஆக 22.

124. கவிஞன் பேயர்:—நாவலன், பாவேந்தன், வித்துவான், கணக்காயன், கவிஞன், பாவலன். ,, 6.

கற்றுச்சொல்லி பேயர்:—கற்றுச்சொல்லி, பாடகன். ,, 2.

கவிஞர் வகுப்பின் பேயர்:—கவி, கமகன், வாதி, வாக்கி. [இவர்களுள் முறையே ஒருவருக்கொருவர் சிறந்தவர்கள்.] ,, 4.

125. யோகிபேயர்:—சவுமியன், திகம்பரன், யோகி. ,, 3

மதத்தார் பேயர்:—மதத்தார், சமயர். ,, 2.

உட்சமயிகள் பேயர்:—பாசுபதர், மாவிரதர், வாமர், வயிரவர், காளாமுகர், சைவர். ,, 6.

126. வாமர்பேயர்:—வாமர், சாத்தர். ,, 2.

புறச்சமயத்தார் பேயர்:—உடலைப் பொருளென்போர், வேதத்தைப் பொருளென்போர், குணத்தைப் பொருளென்போர், இந்தியத்தைப் பொருளென்போர், உயிரைப் பொருளென்போர், மாலைப் பொருளென்போர். ,, 6.

[1]சாறுவாங் கன்பூத முத்தனுலோ காயுதனுந்
தேறுசத்தன் கன்மிவைதி கன். (௰௧)

127. அருகதன் குண்டனம ணன்குணமுத் தன்முனிவன்
பாரினிற்கொல் லாவிரதன் பாயுடுப்போன்—சாரணனுந்
தின்சமண் ணுஞ்சிவ ரன்சாக்கி யன்றேர
னன்பவுத்தன் கந்தமுத்த னும். (௰௨)

128. வேதாந்தி வைசேடி கன்சாங்கி யன்மாயா
வாதி யுடன்பரிணா மன்விவர்த்த—னேதுபசு
ஞானியுமாம் பாகவதன் நற்பாஞ்ச ராத்திரிவை
கானசன்வ யிட்டுணுவற் காம். (௰௩)

129. சித்தாந்தி யேசமயா தீதி சிவஞானி
யத்துவிதி சுத்தசைவ னருமே—சித்துணர்ந்த
மாணிக்க வாசகன்பேர் வாதவூ ரானெனவாம்
பேணுதிண்ணன் கண்ணப்பன் பேர். (௰௪)

உடலைப் பொருளென்போன் பெயர் :—சாறுவாங்கன், பூதமுத்தன், உலோகாயுதன். ஆ 3.

வேதத்தைப் பொருளென்போன் பெயர்:—சத்தன், கன்மி, வைதிகன். ,, 3.

127. துறத்தலைப் பொருளென்போன் பெயர்:—ஆருகதன், குண்டன், அமணன், குணமுத்தன், முனிவன், கொல்லாவிரதன், பாயுடுப்போன், சாரணன், சமணன். ,, 9.

இந்திரியத்தைப் பொருளென்போன் பெயர் :—சீவரன், சாக்கியன், தேரன், பவுத்தன், கந்தமுத்தன். ,, 5.

128 உயிரைப் பொருளென்போன் பெயர்:—வேதாந்தி, வைசேடிகன், சாங்கியன், மாயாவாதி, பரிணாமன், விவர்த்தன், பசுஞானி. ,, 7.

மாலைப் பொருளென்போன் பெயர் :—பாகவதன், பாஞ்சராத்திரி, வைகானசன், வயிட்டணவன். ,, 4.

129. சித்தாந்தி பெயர்:—சித்தாந்தி, சமயாதீதி, சிவஞானி, அத்துவிதி, சுத்தசைவன். ,, 5.

மாணிக்கவாசகன் பெயர்:—வாதவூரான், மாணிக்கவாசகன். ,, 2.

கண்ணப்பன் பெயர்:—திண்ணன், கண்ணப்பன். ,, 2.

(பி - ம்) 1. சாறுவா ?

130. அத்திபெண்ணாச் செய்தோ னமணழித்தோன் காழியிறை
சத்திமுலைப் பாலுண்டோன் சம்பந்தன்—முத்தாற்
சிவிகைகுடை பெற்றோன் சிவபாத நெஞ்சன்
றவமகன்மா றன்சுரந்தீர்த் தான். (௱௫)

131. சிலைபுணையா யூர்ந்தோன் றிலதவதி பின்னோன்
அலைவில் புகழூர்சே யாமூர்த்—தலைவனுயர்
மாதினியாண் மைந்தன் மருணீக்கி நாவரையன்
பேதமில்வா கீசனப்பன் பேர். (௱௬)

132. நம்பி விடங்கவர்ந்தோ னூரனா வற்பதியோன்
வெம்புகரா வுண்சேயை மீட்டளித்தோன்—அம்பரவை
சங்கிலிமன் னாகரன்வன் றொண்டன் சடையன்சேய்
சங்கரன்றோ ழன்சுந் தரன். (௱௭)

133. வேதர்தொழி லாறரையர் விப்பிரர்பார்ப் பார்நூலோர்
ஆதிகுல ரந்தணர னற்கொடியோர்—ஓதுகஞ்சம்
பூண்போ ரிருபிறப்போர் பூசுரர்பி ராமணர்பே
ரேண்பிரம சாரிவன்னி யே (௱௮)

---

130. சம்பந்தன் பெயர்:—அத்தி பெண்ணாய்ச் செய்தோன், அமணழித்தோன், காழியிறை, சத்திமுலைப்பா லுண்டோன், சம்பந்தன், முத்தின்சிவிகை பெற்றோன், முத்துக்குடை பெற்றோன், சிவபாதநெஞ்சன் மகன், மாறன் சுரந்தீர்த்தான். 9.

131. அப்பன் பெயர்:—சிலைபுணையா யூர்ந்தோன், திலதவதி பின்னோன், புகழூர்சேய், ஆமூர்த்தலைவன், மாதினியாள் மைந்தன், மருணீக்கி, நாவரையன், வாகீசன், அப்பன். 9.

132. சுந்தரன் பெயர்:—நம்பி, விடங்கவர்ந்தோன், ஊரன், நாவற்பதியோன், கராவுண்சேயை மீட்டளித்தோன், பரவைமன், சங்கிலிமன், ஆகரன், வன்றொண்டன், சடையன்சேய், சங்கரன்றோழன், சுந்தரன். ஆ 12.

133. பிராமணர் பெயர்:—வேதர், தொழிலாறர், ஐயர், விப்பிரர், பார்ப்பார், நூலோர், ஆதிகுலர், அந்தணர், அனற்கொடியோர், கஞ்சம் பூண்போர், இருபிறப்போர், பூசுரர், பிராமணர். ஆ 13.

பிரமசாரி பெயர்:—பிரமசாரி, வன்னி. ,, 2.

134. இற்றனில்வாழ் வோன்கிரகி யில்லுடன்கா னம்புகுந்து
நற்றவஞ்செய் கின்றோன்வா னப்பிரத்தன்—பற்றொழிய
விட்டோன்சன் னசியெதி வீட்டையிச்சித் தோன்முமுக்கு
கட்டுதருக் கன்றார்க்கி கன் (மசா)

135. மாலன்பன் ஞானமுத்தி ரைக்கரத்தான் காரிமன்னன்
பாலன் திருவாய் மொழிபகர்ந்தோன்—சால்புளிக்கீழ்
வாழ்வா னனமூர்த்தி மாறன்மங்கை யூரினனம்
மாழ்வான் சடகோப னும் (உ0)

136. கோவதிப னாதிபன்கோன் கொற்றவன்சு வாமிமன்னன்
காவலனா தன்கொழுநன் காந்தனரன்—மேவுபெம்மான்
எந்தல்செம்மல் ஓங்கல்பதி யீசனிரு பன்றலைவன்
வேந்திறைபி ரான்பிரபு வே. (உக)

137. புரவலன் பார்த்திபன்பூ பன்மகிபன் றோன்றல்
[1] குருசில்பெரு மானியமான் கோமான்—றுரையரசன்
அண்ணலிரா சன்பேர் குறுநிலக்கோ வாங்குறும்பர்
தண்ணரட்டர் வேளிர்புரோ சர். (உஉ)

---

134. இற்றனில் வாழ்வோன் பெயர்:—கிரகி. ஆ 1.

இல்லாளுடன் கானம் புகுந்து தவஞ் செய்வான் பெயர்:—
வானப்பிரத்தன். ,, 1.

பற்றொழித்தோன் பெயர்:—சன்னசி, எதி. ,, 2.

முத்தி விரும்பினோன் பெயர்:—முமுக்கு. ,, 1.

தருக்கன் பெயர்:—தருக்கன், தார்க்கிகன். ,, 2.

135. நம்மாழ்வான் பெயர்:-மாலன்பன், ஞானமுத்திரைக் கரத்தான், காரிமன்னன், பாலன், திருவாய்மொழிபகர்ந்தோன், புளிக்கீழ்வாழ்ந்தோன், அனமூர்த்தி, மாறன், மங்கை யூரினன், நம்மாழ்வான், சடகோபன். ஆ 11.

136 – 137 அரசன் பெயர்:—கோ, அதிபன், ஆதிபன், கோன், கொற்றவன், சுவாமி, மன்னன், காவலன், நாதன், கொழுநன், காந்தன், அரன், பெம்மான், எந்தல், செம்மல், ஓங்கல், பதி, ஈசன், நிருபன், தலைவன், வேந்து, இறை, பிரான், பிரபு.

புரவலன், பார்த்திபன், பூபன், மகிபன், தோன்றல், குருசில், பெருமான், இயமான், கோமான், துரை, அரசன், அண்ணல், இராசன். ஆ 37.

குறுநில வேந்தர் பெயர்:—குறுநிலக்கோ, குறும்பர், அரட்டர், வேளிர், புரோசர். ,, 4.

(பி - ம்) குரிசில்.

138. மந்திரிதேர்ச் சித்துணைய மாத்திபனூ லோன்சூழ்வோன்
முந்துழைய னெண்ணன்முன்னோன் மூதமைச்சன்—பிந்துகணக்
கன்கரணிக் கன்கா விதிநிமித்தன் சாக்கைவள்ளு
வன்பரியா ளன்பரிவா ரன். (உஅ)

139. வண்டர்மற வர்பேடர் வாளுழவர் சூரர்மள்ளர்
மிண்டர்வய வோர்வியவர் வீரர்தெவ்வர்—திண்டிறலோர்
கூளியரே ருளர் கொடும்பொருநர் திண்ணியரே
மீளியர்சே னைத்தலைவர் மேற்று. (உசு)

140. தானைதளர் தண்டனிகந் தந்திரம்ப தாதிபலம்
வானிகக னங்கடகம் வாகினிதார்—சேனைபடை
பாடிபரி காரம் பதாகினியூ பங்கவனம்
கூடியிவை பாளையப்பேர் கூறும். (உரு)

141. உண்டையணி யூபங்கை யொட்டு படைவகுப்பாம்
மண்டுநெற்றி தூசிமுன்செல் வார்படையாம்—கண்டுபின்செல்

---

138. மந்திரி பெயர்:—மந்திரி, தேர்ச்சித்துணை, அமாத்தியன், நூலோன், சூழ்வோன், உழையன், எண்ணன், முன்னோன், அமைச்சன். ஆ 9.

கணக்கன் பெயர்:—கணக்கன், கரணிக்கன், காவிதி. ,, 3.

நிமித்தன் பெயர்:—நிமித்தன், சாக்கை, வள்ளுவன். ,, 3.

பரிவாரன் பெயர்:—பரிவாரன், பரியாளன். ,, 2.

139. வீரர் பெயர்:—வண்டர், மறவர், பேடர், வாளுழவர், சூரர், மள்ளர், மிண்டர், வயவர், வியவர், வீரர், தெவ்வர், திறலோர். ,, 12.

சேனைத்தலைவர் பெயர்:—கூளியர், ஏருளர், பொருநர், திண்ணியர், மீளியர், சேனைத்தலைவர். ,, 6.

140. படையின் பெயர் :—தானை, தளம், தண்டு, அனிகம், தந்திரம், பதாதி, பலம், வானி, ககனம், கடகம், வாகினி, தார், சேனை, படை, பாடி, பரிகாரம், பதாகினி, யூபம், கவனம், கூடி, பாளையம். ,, 21.

141. படைவகுப்பின் பெயர் :—உண்டை, அணி, யூபம், கை, ஒட்டு, படைவகுப்பு. ,, 6.

தூசிப்படையின் பெயர் :—நெற்றி, தூசி, முன்செல்படை. ,, 3.

கூழை கொடிப்படையாங் கூடா படைப்றைப்பேர்
கீழறுத்த லேயறைபோ கே. (உசா)

142. வீட்டுமன்காங் கேயன் விரதன்வன்னி சந்தனுச்சேய்
மாட்டுதுரி யோதனன்வ லம்புரித்தார்—சூட்டிவணங்
காமுடிய நாகக் [1] கொடியன்காந் தாரிகண்ணில்
கோமகன்சு யோதன னுங் கூட்டு. (உஎ)

143. பாண்டுகுந்தி சேயுதிட்டி ரன்பொறையன் பைங்குவளை
பூண்டோன் முரசுயர்த்தோன் பொய்சொல்லான்—காண்டருமன்
பானுமகன் கச்சையுயர்ப் பான்கவச குண்டலன்கா
னீனனங்கர் வேந்துகன்ன னே. (உஅ)

144. காரிபிர கோதரன்க டோற்கயனப் பன்கதையன்
மாருதியி டும்பிமன்சி யக்கொடியோன்—பார்பிளந்தோன்
சல்லியன்சு யோதனன்சந் தன்கி சகனிடும்பன்
வெல்பகனைக் கொன்றோன்வீ மன். (உகூ)

கூழைப்படையின் பெயர் :—பின்செல்படை, கூழை, கொடிப்படை. ஆ 3.

படைப்றைப் பெயர்:—படையறை, கீழறுத்தல், அறை போகு. ,, 3.

142. வீட்டுமன் பெயர் :—வீட்டுமன், காங்கேயன், விரதன், வன்னி, சந்தனுச்சேய். ,, 5.

துரியோதனன் பெயர்:—துரியோதனன், வலம்புரித்தார் சூடி, வணங்காமுடியன், நாகக்கொடியோன், காந்தாரிமகன், கண்ணில்கோ மகன், சுயோதனன். ,, 7.

143. தருமன் பெயர் :—பாண்டுசேய், குந்திசேய், உதிட்டிரன், பொறையன், குவளைபூண்டோன், முரசுயர்த்தோன், பொய்சொல்லான், தருமன். ,, 8.

கன்னன் பெயர் :—பானுமகன், கச்சையுயர்ப்பான், கவசகுண்டலன், கானீனன், அங்கர்வேந்து, கன்னன். ,, 6.

144. வீமன் பெயர் :—காரி, பிரகோதரன், கடோற்கயனப்பன், கதையன், மாருதி, இடும்பிமன், சீயக்கொடியோன், பார்பிளந்தோன், சல்லியனைக் கொன்றோன், சுயோதனனைக் கொன்றோன், சந்தனைக்கொன்றோன், கீசகனைக்கொன்றோன், இடும்பனைக்கொன்றோன், பகனைக்கொன்றோன், வீமன். ஆ 15.

(பி - ம்) 1. கொடியோன்.

145. கன்னன்மைத்து னன்கா வெரித்தோ னனுமதுசன்
விண்ணிறைசே யீசன்முடி மேலடித்தோன்—நன்விசயன்
பற்குனன்கி ரீடிசுவே தன்கிருட்டினன்பார்த்தன்
அர்ச்சுனன்சை வன்றனஞ்ச யன். (௩௰)

146. தென்னன்வைகை யான்செழியன் செந்தமிழ்நாட் டான்மதுரை
மன்வழுதி பஞ்சவன்வேம் பன்மீன—வன்மாறன்
றென்கிரியான்[1] றாம்பிரதி ரன்குமரி யன்கவுரி
யன்கைத வன்பாண்டி யன். (௩௧)

147. சென்னிகிள்ளி யார்த்தாமன் செம்பியன்மால் கோழிக்கோன்
பொன்னித்[2] துறைவன் புலிக்கொடியன்—நன்னேரி
வெற்பன் புனனாடன் வேற்சூரி யன்வளவன்
தப்பிலப யன்சோழன் றான். (௩௨)

148. கோதைகுட்டு வன்குடகன் கொங்கன்வஞ்சி வேந்துபனம்
போதனுதி யன்பொருனைத் தென்மூன்றுற்—றுதிபதி
வானவரம் பன்மலைய மான்வில்ல வன்சேரற்
கானபெயர் சேரலனு மாம். (௩௩)

145. விசயன் பெயர்:—கண்ணன் மைத்துனன், காவெரித்தோன், அனும துவசன், விண்ணிறைசேய், ஈசன்முடிமேலடித்தோன், விசயன், பற்குனன், கிரீடி, சுவேதன், கிருட்டினன், பார்த்தன், அருச்சுனன், சைவன், தனஞ்செயன். ஆ 14.

146. பாண்டியன் பெயர்:—தென்னன், வைகையான், செழியன், செந்தமிழ் நாட்டான், மதுரைமன், வழுதி, பஞ்சவன், வேம்பன், மீனவன், மாறன், தென்கிரியான், தாம்பிரதிரன், குமரியன், கவுரியன், கைதவன், பாண்டியன். ,, 16.

147. சோழன் பெயர்:—சென்னி, கிள்ளி, ஆர்த்தாமன், செம்பியன், மால், கோழிக்கோன், பொன்னித்துறைவன், புலிக்கொடியன், நேரிவெற்பன், புனனாடன், சூரியன், வளவன், அபயன், சோழன். ,, 14.

148 சேரன் பெயர்:—கோதை, குட்டுவன், குடகன், கொங்கன், வஞ்சிவேந்து, பனம்போதன், உதியன், பொருனைத் தென்மூன்றுற் றுதிபதி, வான வரம்பன், மலையமான், வில்லவன், சேரன், சேரலன். ஆ 13.

(பி - ம்) 1. றாம்பிரைத்தி. 2. துறையன்.

149. காரிவிரா டன்சகரன் சென்னி நிருதிதுந்து
மாரிநள னுதிவள்ளல் வக்கிரனே—யோர்சந்தி
மானக் குரன்சிசுபா லன்சந்தன் கன்னனந்தி
மானுமிடை வள்ளலென வாம். (௧௪௪)

150. பாரி யெழிலி[1] பசுந்தொடைபே கன்மலையன்
ஓரிநள்ளி பின்வள்ள லோர்காத்த—வீரன்முசு
குந்தன்பு ரூரவன ளன்சகரன் கோளிலரிச்
சந்திர னுஞ் சக்கரா சர். (௧௪௫)

151. எட்டிவணி கன்பரத னிப்பனுய் கன்றனதன்
செட்டிகவிப் பன்றே சிகனிளங்கோ—வொட்டியன்சி
லேட்டையிச்சி யன்சிர கத்தாமன் கோவலன்பொன்
னீட்டனுழ வோன்வசிய னே. (௧௪௬)

152. வெள்ளைவட்டன் காராளன் மேழியன்கா வித்தாமன்
பிள்ளையுழ வன்சூத்தி ரன்சதுர்த்தன்—கொள்களமன்
பங்கயன்றாள் வந்தோன்பூ பாலன் குடித்தலைவன்
கங்கைகுலன் வேளாளன் காண். (௧௪௭)

---

149. முதல் வள்ளல்கள் பெயர்:—காரி, விராடன், சகரன், சென்னி, நிருதி, துந்துமாரி, நளன். ஆ 7.

இடைவள்ளல்கள் பெயர்:—வக்கிரன், சந்திமான், அக்குரன், சிசுபாலன், சந்தன், கன்னன், அந்திமான். ,, 7.

150. கடைவள்ளல்கள் பெயர்:—பாரி, எழிலி, பசுந்தொடை, பேகன், மலையன், ஓரி, நள்ளி. ,, 7.

சக்கரவர்த்திகள் பெயர் :—கார்த்தவீரியன், முசுகுந்தன், புரூரவன், நளன், சகரன், அரிச்சந்திரன். ,, 6.

151. வைசியன் பெயர்:—எட்டி, வணிகன், பரதன், இப்பன், நாய்கன், தனதன், செட்டி, கவிப்பன், தேசிகன், இளங்கோ, ஒட்டியன், சிலேட்டை, இச்சியன், சிரகத்தாமன், கோவலன், பொன்னீட்டன், உழவோன், வைசியன். ஆ 18.

152. வேளாளன் பெயர்:—வெள்ளைவட்டன், காராளன், மேழியன், காவித்தாமன், பிள்ளை, உழவன், சூத்திரன், சதுர்த்தன், களமன், பங்கயன்றாள் வந்தோன், பூபாலன், குடித்தலைவன், கங்கை குலவன், வேளாளன். ஆ 14.

---

1. 'பாரியாயெழிலி' (சூடாமணி. 2, 24) என்பதற்கு மாறாக 'பாரியே யெழிலி' என்ற பாடம் கொள்ளப்பட்டதுபோலும்.

153. மேற்குலரா மிம்மறையோர் வேந்தரிப்பர் வேளாளர்
நாற்குலரு மன்னோர் நடைமுறைமை—யேற்குமதஞ்
தஞ்செயற்பே தத்துதித்தோர் கீழ்க்குலத்தோர் சாங்கிரர்கள்
பஞ்சவர்க ளாமவர்பேர் பார். (௩அ)

154. அக்கீழ்க் குலத்தர்நில மைந்தினர்கண் ணளர்வண்ணர்
கைக்கோளர் நாவிதர்செக் காருவச்சர்—மெய்க்குயவர்
சோனகர்மி லேச்சர்செம்மார் பாணர்தோ லூன்கள்விற்போ
ரீனர்முத லெண்ணிலர்க ளே. (௩௯)

155. சிற்பியனே வன்மோகன் சித்திரன்கொல் லன்றுவட்டன்
சிற்பிதட்டான் கம்மியனே வன்றபதி—சொற்புனேவன்
கன்னன்கண் ணளனக்க சாலேயன்கண் ணுள்வினேஞன்
நன்மனுவன் றச்சன்யவ னன். (௪௰)

156. குன்றவர்கி ராதர் குறவ ரிறவுளர்
வன்சவரர் வேடர் வனசரர்—பின்புளிஞர்
வேட்டுவர் [1] மாகுலர் வெங்குழுவர் கானவருஞ்
சூட்டுங் குறிஞ்சிநிலத் தோர். (௪௧)

---

153. மறையோர், வேந்தர், இப்பர், வேளாளர் என்னும் இந்நாற்குலத்தோரு மேற்குலத்தோர்.

இவரிலும் நடைபேதம், முறைபேதம், மதபேதம், தொழிற்பேதங்களிற் சென்மித்தோர்கள்:—கீழ்க்குலத்தோர், சாங்கிரர், பஞ்சவர்.

154. கீழ்க் குலத்தோர் பேதப்பாவன :—

நிலமக்களேவர்:—குறிஞ்சித்திணைவர் குறவர், பாலேத்திணைவர் மறவர், முல்லேத்திணைவர் இடையர், மருதத்திணைவர் மள்ளர், நெய்தற்றிணைவர் பரவர்.

கண்ணளர் ஐவர்:—மரத்தச்சர், கற்றச்சர், கொல்லர், தட்டார், கன்னர்.

பிறவகையினர்:—வண்ணர், கைக்கோளர், நாவிதர், செக்கார், உவச்சர், குயவர், சோனகர், மிலேச்சர், செம்மார், பாணர், தோல்விற்போர், ஊன்விற்போர், கள்விற்போர், ஈனர். ஆ. 14.

155. சித்திரகாரன் பெயர்:—சிற்பியன், ஓவன், மோகன், சித்திரன். ,, 4.

கண்ணளன் பெயர் :—கொல்லன், துவட்டன், சிற்பி, தட்டான், கம்மியன், ஓவன், தபதி, புனேவன், கன்னன், கண்ணளன், அக்க சாலேயன், கண்ணுள்வினேஞன், மனுவன், தச்சன், யவனன். ஆ. 15.

156. குறிஞ்சி நிலத்தோர் பெயர்:—குன்றவர், கிராதர், குறவர், இறவுளர், சவரர், வேடர், வனசரர், புளிஞர், வேட்டுவர், மாகுலர், குழுவர், கானவர். ஆ. 13.

(பி - ம்) 1. குர்குலர்

157. குறத்தி கொடிச்சிகுறிஞ் சிப்பெண் குறிஞ்சி
யிறைக்குப்பேர் வெற்ப னெயின—ரிறுக்கருட்டன்
புள்ளுவர்வி ராதர்மற வோர்பா லையரதிற்பெண்
டுள்ளெயிற்றி யேமறத்தி சொல். (சஉ)

158. மீளியுடன் காளை விடலைபா லைக்கிறைப்பேர்
ஆளிடையர் கோபால ராயர்விந்தர்—நீள்பொதுவ
ரண்டர்தொறு வோரமுதர் முல்லையர்பே ரந்நிலப்பெண்
மண்டிடைச்சி யாச்சியென வாம். (சங)

159. குறும்பொறைநா டன்கான நாடனண்ண றோன்றல்
மறஞ்செய்முல்லை வேந்தன்மரு தத்தர்—குறுங்களமர்
மள்ளர்[1]வினை ஞோருழவர் வன்கடைஞர் கம்பளரே
பள்ளர் களைஞரெனப் பன்னு. (சச)

160. அம்மருதப் பெண்கடைச்சி யாற்றுக்கா லாட்டிமள்ளி
வெம்மைதவிர் பள்ளியதின் வேந்தன்பேர்—செம்மகிழ்நன்
ஊரன் கிழவனெய்தற் கோன்றுறைவன் சேர்ப்பன்மெல்லன்
சேர்புலம்பன் கொண்கனெனச் செப்பு. (சரு)

---

157. குறிஞ்சிப் பெண் பெயர்:—குறத்தி, கொடிச்சி, ஆ 2.
குறிஞ்சியரசன் பெயர்:—வெற்பன். ,, 1.
பாலைநிலத்தோர் பெயர்:—எயினர், இறுக்கர், புள்ளுவர், விராதர், மறவோர், பாலையர். ,, 6.
பாலைப்பெண் பெயர்:—எயிற்றி, மறத்தி. ,, 2.
158. பாலையரசன் பெயர்:—மீளி, காளை, விடலை. ,, 3.
முல்லைநிலத்தோர் பெயர்:—இடையர், கோபாலர், ஆயர், விந்தர், பொதுவர், அண்டர், தொறுவோர், அமுதர், முல்லையர். ,, 9.
முல்லைப்பெண் பெயர்:—இடைச்சி, ஆய்ச்சி. ,, 3.
159. முல்லையரசன் பெயர்:—குறும்பொறை நாடன், கானநாடன், அண்ணல், தோன்றல். ,, 4.
மருதநிலத்தோர் பெயர்,—மருதத்தார், களமர், மள்ளர், வினைஞோர், உழவர், கடைஞர், கம்பளர், பள்ளர், களைஞர். ,, 9.
160. மருதப்பெண் பெயர்;—கடைச்சி, ஆற்றுக்காலாட்டி, மள்ளி, பள்ளி. ,, 4.
மருதந்தரசன் பெயர்:—மகிழ்நன், ஊரன், கிழவன். ,, 3.
நெய்தலரசன் பெயர்:—நெய்தற்கோன், துறைவன், சேர்ப்பன், மெல்லன், புலம்பன், கொண்கன். ,, 6.

(பி - ம்) 1. வினைஞோ.

161. பரதர் கலவர் களியர் நுளையர்
பரவர் வலையர் திமிலர்—பரதவர் ;
பெய்கடலர் நெய்தலர் பெண்குழைச்சி யேநுளைச்சி
செய்குரத்தி யேபரத்தி யாம். (சசு)

162. காருகனீ ரங்கோலி தூசன்வண்ணான் காருகர்நெய்
வோர்தந்து வாயர்கைக்கோ ளர்க்குரித்தா—மோர்பறம்பர்
தோல்வினைஞ ரூன்விற்போர் சூனருல்லி யோர்கூவ
நூலர்தைப்போர் பொல்லர்துன்னர் நோக்கு. (சஎ)

163. செம்மார்தோற் றுன்னர்நந்தி சக்கிரிசெக் கான்பெயராம்
வெம்மிலேச்ச ராரியர்மி லேச்சராம்—செம்மைத்
துலைப்பன்யவ னன்சோ[1] னகனுவணா ருப்பு
விலைச்செய்வோர் [2] சிற்பியுவச் சன். (சஅ)

---

161. நெய்தனிலத்தோர் பெயர்:—பரதர், கலவர், களியர், நுளையர், பரவர், வலையர், திமிலர், பரதவர், கடலர், நெய்தலர். ஆ 10.

நெய்தற்பெண் பெயர்:—குழைச்சி, நுளைச்சி, குரத்தி, பரத்தி. ,, 4.

162. வண்ணான் பெயர்:—காருகன், ஈரங்கோலி, தூசன், வண்ணான். ,, 4.

கைக்கோளன் பெயர்:—காருகர், நெய்வோர், தந்துவாயர், கைக்கோளர். ,, 4.

தோல்வினைஞர் பெயர்:—பறம்பர், தோல்வினைஞர். ,, 2.

ஊன்விற்போர் பெயர்:—ஊன்விற்போர், சூனர். ,, 2.

கூவனூலோர் பெயர்:—உல்லியோர், கூவநூலோர். ,, 2.

தைப்போர் பெயர்:—தைப்போர், பொல்லர், துன்னர். ,, 3.

163. செம்மார் பெயர்:—செம்மார், தோற்றுன்னர். ,, 2.

செக்கான் பெயர்:—நந்தி, சக்கிரி, செக்கான், ,, 3.

மிலேச்சர் பெயர்:—மிலேச்சர், ஆரியர், மிலேச்சர், ,, 3.

சோனகர் பெயர்:—துலைப்பன், யவனன், சோனகன், ,, 3.

உப்புவிற்போர் பெயர்:—உவணர், உப்பு விலைச்செய்வோர். ,, 2.

உவச்சன் பெயர்:—சிற்பி, உவச்சன். ,, 2.

(பி - ம்) 1. னகனுமணா? 2. சிப்பி.

164. நாவிதன்சி மங்கலியே ஞெதிமஞ்சி கன்குடிச்சேய்
வாவு சவுரகனு மட்பகைவேட்—கோவனுடன்
கும்பகா ரன்சக் கிரிகுலா லன்குயவன்
வம்பில்வளை போழ்நர்சங்கீர் வார். (சசுஈ)

165. பண்ணவனே வன்மதங்கன் சென்னிகூ தன்பாணன்
றண்வயிரி கோடிகூத் தன்கழைக்கூத்—தன்னினன்வே
ழம்பன் கழாய னதிதிதனி கன்புதியோன்
வம்பலனுங் கூர்ப்பிலிமந் தன். (௬௫)

166. கள்விலைஞ னீழன் சவுண்டிகன்சான் றான்படுவ
னள்ளுதுவட் டன்பிழிஞ னம்புலையன்—விள்ளுறுங்கன்
வங்கனீ னன்களைஞன் வன்கோலைஞ னீசன்மா
தங்கனிழி ஞோன்சண்டா ளன். (௬௬)

---

164. நாவிதன் பெயர்:—நாவிதன், சிமங்கலி, ஞெதி, மஞ்சி கன், குடிச்சேய், சவுரகன். ஆ 6.

குயவன் பெயர்:—மட்பகை, வேட்கோவன், கும்பகாரன், சக்கிரி, குலாலன், குயவன். ,, 6.

சங்கறுப்பார் பெயர்:—வளைபோழ்நர், சங்கீர்வார். ,, 2.

165. பாணன் பெயர்:—பண்ணவன், ஓவன், மதங்கன், சென்னி, கூதன், பாணன். ,, 6.

கூத்தன் பெயர்:—வயிரி, கோடி, கூத்தன். ,, 3.

கழைக்கூத்தன் பெயர்:—கழைக்கூத்தன், வேழம்பன், கழாயன். ,, 3.

புதியோன்பெயர்:—அதிதி, தனிகன், புதியோன், வம்பலன். ,, 4.

மந்தன் பெயர்:—கூர்ப்பிலி, மந்தன். ,, 2.

166. கள்விற்போன் பெயர்:—கள்விலைஞன், ஈழன், சவுண்டிகன், சான்றான், படுவன், துவட்டன், பிழிஞன். ,, 7.

புலையன் பெயர்:—புலையன், குறுங்கன், வங்கன், ஈனன், களைஞன், கோலைஞன், நீசன், மாதங்கன், இழிஞோன், சண்டாளன். ,, 10.

167. தோரணரா னைப்பாகர் தூண்டுபரிச் சாணிபண்ணு
வார்வதுவர் வாதுவர் மாவலர்—தேர்ப்பாகன்
சாரதிசூ தன்வலவன் சாரணர் வேயரொற்றர்
சோரர்கள்வ ருந்திருடர் சொல். (ருஉ)

168. வல்லார்மாட் டோராம்வல் லோன்வலவை வல்லுநனும்
செல்வனுஞ் சம்பனனுேப் தீர்ந்தோனு—முல்லாபன்
வந்திபுகழ் வோன்கரியோன் கள்வனிரு வாணிநக்கன்
உந்துவண்ட ராங்கடிகை யோர். (ருங)

169. ஆயுத்த மானோர்சன் னத்தர்புக ழோனியவுள்
ஒய்விலரு ளுள்ளோன்கா ருண்ணியனுங்—காய்கொலைபன்
காதகன் காருகன்கா ரோடருறை காரர்முன்னோர்
ஓதுபிரா சீனர்முதி யோர். (ருச)

---

167. யானைப்பாகர் பேயர்:—தோரணர், யானைப்பாகர். ஆ 2.
குதிரைச்சாணிகள் பெயர்:—பரிச்சாணி, பண்ணுவர், வதுவர், வாதுவர், மாவலர். ,, 5.
தேர்ப்பாகன் பெயர்:—தேர்ப்பாகன், சாரதி, சூதன், வலவன். ,, 4.
ஒற்றர் பெயர்:—சாரணர், வேயர், ஒற்றர். ,, 3.
கள்வர் பெயர்:—சோரர், கள்வர், திருடர். ,, 3.
168. மாட்டோதார் பெயர்:—வல்லார், மாட்டோர். ,, 2.
வல்லுநன் பெயர்:—வல்லோன், வலவை, வல்லுநன். ,, 3.
செல்வன் பெயர்:—செல்வன், சம்பன்னன். ,, 2.
நோய்தீர்ந்தோன் பெயர்:—நோய்தீர்ந்தோன், உல்லாபன். ,, 2.
புகழ்வோன் பெயர்:—வந்தி, புகழ்வோன். ,, 2.
கரியோன் பெயர்:—கரியோன், கள்வன். ,, 2.
நிருவாணிபெயர்:—நிருவாணி, நக்கன். ,, 2.
கடிகையர் பெயர்:—வண்டர், கடிகையர். ,, 2.
169. ஆயுத்தமானோர் பெயர்:—ஆயுத்தமானோர், சன்னத்தர். ,, 2.
புகழோன் பெயர்:—புகழோன், இயவுள். ,, 2.
அருளுள்ளோன் பெயர்:—அருளுள்ளோன், காருண்ணியன். ,, 2.
கொலைஞன் பெயர்:—கொலையன், காதகன், காருகன். ,, 2.
உறைகாரர்பெயர்:—காரோடர், உறைகாரர். ,, 2.
முன்னோர்பெயர்:—முன்னோர், பிராசீனர், முதியோர். ,, 3.

170. ஆதுல னேழை தரித்திர னச்சமுற்ளேன்
பீதன்பீ ருச்சகிதன் பேசிழுதை—பேதைமட
னென்முழும கன்மூட னேழையா தன்சிதடன்
அண்ணையஞ்ஞை யாமறிவி லான். (ருரு)

171. பாராய ணன்குறிக்கொள் வோன்வழிச்செல் வோன்பதிகன்
எருரியோ ணுங்கிழவ னேவுவான்—பேர்வியவ
ணகரிகர் காமுகரே நற்சதுரர் வஞ்சகன்பேர்
வேகிநிசா தன்சவனன் வேண்டு. (ருசு)

172. மாலுமிமீ கான்மீவான் மீகாம ஞஞ்சமைப்போன்
வாலுவன்பா சிகன்மடை யன்பாகி—கூலியனே
பாசகனு மேற்போன் பரிசிலா ளன்றீனன்
யாசகனு மாமிரப்போ னே. (ருஎ)

---

170. தரித்திரன் பெயர்:—ஆதுலன், ஏழை, தரித்திரன். ஆ 3.

அச்சமுற்றேன் பெயர்:—அச்சமுற்ளேன், பீதன், பீரு, சகிதன். ,, 4.

அறிவிலான் பெயர்:—இழுதை, பேதை, மடன், முழுமகன், மூடன், ஏழை, ஆதன், சிதடன், அண்ணை, அஞ்ஞை, அறிவிலான். ,, 11.

171. குறிக்கோள்வோன் பெயர்:—பாராயணன், குறிக்கொள்வோன். ,, 2.

வழிச்செல்வோன் பெயர்:—வழிச்செல்வோன், பதிகன். ,, 2.

உரியோன் பெயர்:—உரியோன், கிழவன். ,, 2.

ஏவுவான் பெயர்:—ஏவுவான், வியவன். ,, 2.

சதுரர் பெயர்:—நாகரிகர், காமுகர், சதுரர். ,, 3.

வஞ்சகன் பெயர்:— வஞ்சகன், வேகி, நிசாதன், சவனன். ,, 4.

172. மீகாமன் பெயர்:—மாலுமி, மீகான், மீவான், மீகாமன். ,, 4.

சமைப்போன் பெயர்:—வாலுவன், பாசிகன், மடையன், பாகி, கூலியன், பாசகன். ,, 6.

இரப்போன் பெயர்:—ஏற்போன், பரிசிலாளன், தீனன், யாசகன், இரப்போன். ,, 5.

173. பார்த்தர் விடர்படிறர் [1]பல்லவரி டங்கழியர்
தூர்த்தரா மோர்கண்ணர் சொல்காணர்—சீர்த்தியாகி
வள்ளியோன் றாதாவே ளாளனுப காரிவள்ள
லுள்ள புரவலனீ வோன். (௫அ)

174. உலுத்தன் பிசின னுலோபன் குலீனன்
குலக்கேடன் வாமனங் குஞ்சம்—மெலித்தகுறள்
சிந்தாங்கூன் கோணல் செவிடன்வெதி ராஞ்சிதடன்
அந்தனந்த கன்குருட ணும். (௫௯)

175. பங்குகுணில் மொண்டிமுடம் பற்றாமை மூகைமுங்கை
கொங்கணிவே லன்வெறியன் கோமரத்தான்—இங்கிவையே
தேவரா ளன்சா லினிதேவ ராட்டியாம்
பூவி னளமரளப் போர். (௬0)

---

173. தூர்த்தர் பேயர்:—பார்த்தர், விடர், படிறர், பல்லவர், இடங்கழியர், தூர்த்தர். ஆ 6.

ஓர்கண்ணர் பெயர்:—ஓர்கண்ணர், காணர். ,, 2.

கொடையாளி பெயர்:—தியாகி, வள்ளியோன், தாதா, வேளாளன், உபகாரி, வள்ளல், புரவலன், ஈவோன். ,, 8.

174. உலுத்தன் பெயர்:—உலுத்தன், பிசினன், உலோபன். ,, 3.

குலீக்கேடன் பெயர்:—குலீனன், குலக்கேடன். ,, 2.

குறளின் பெயர்:—வாமனம், குஞ்சம், குறள், சிந்து. ,, 4.

கூனின் பெயர்:—கூன், கோணல். ,, 2.

செவிடன் பெயர்:—செவிடன், வெதிர். ,, 2.

குருடன் பெயர்:—சிதடன், அந்தன், அந்தகன், குருடன். ,, 4.

175. முடத்தின் பெயர்:—பங்கு, குணில், மொண்டி, முடம். ,, 4.

ஊமை பெயர்:—ஊமை, மூகை, மூங்கை. ,, 3.

கோமரத்தான் பெயர்:—வேலன், வெறியன், கோமரத்தான், தேவராளன். ,, 4.

கோமரத்தாள் பெயர்:—சாலினி, தேவராட்டி. ,, 2.

அளப்போர் பெயர்:—அளமர், அளப்போர். ,, 2.

(பி - ம்) 1. பல்லுவரி

176. அருந்துதன்வா திப்போ னழக னுலோலன்
பெருந்தம் பதியிரட்டை பெண்ணு—னரம்பிசைப்போர்
சூட்டுங் குயிலுவராந் தோற்கருவி யோர்யவனர்
ஆட்டுவிப்போர் கட்டுவரொன் றாம். (சுக)

177. ஆமே திலர்வம் பலர்நொது மலோரயலோர்
தாமே கிராமியர்கி ராமமுற்றோர்—மாமாத்தி
[1]யன்பரிகா ரன்பிடக னாயுள்வே தன்வயித்தி
யன்பேர் மருத்துவனு மாம். (சுஉ)

178. புல்லர்கலர் கையர்கிஞ்சர் புள்ளுவர்க னிட்டர்பொறி
யில்லர்தே ரார்முறையி லார்பதிதர்—[2] பல்லுவர்கீழ்
மூடர்கய வோர்முசுண்டர் மூர்க்கர்தீ யோர்பயல்க
ளோடமற்பர் திம்பர்சிறி யோர். (சுஙு)

---

176. வாதிப்போன் பெயர்:—அருந்துதன், வாதிப்போன். ஆ 2.
அழகன் பெயர்:—அழகன், உலோலன். ,, 2.
பெண்ணிணிரட்டைகள் பெயர்:—தம்பதி, இரட்டை. ,, 2.
நரம்பிசைப்போர் பெயர்: —நரம்பிசைப்போர், குயிலுவர். ,, 2.
தோற்கருவியோர் பெயர்:—தோற்கருவியோர், யவனர். ,, 2.
ஆட்டுவிப்போர் பெயர்:—கட்டுவர், ஆட்டுவிப்போர். ,, 2.

177. அயலோர் பெயர் :—ஏதிலர், வம்பலர், நொதும லோர், அயலோர். ,, 4.
கிராமமுற்றோர் பெயர்:—கிராமியர். ,, 1.
வைத்தியன் பெயர்:—மாமாத்தியன், பரிகாரன், பிடகன், ஆயுள்வேதன், வைத்தியன், மருத்துவன். ,, 6.

178. சிறியோர் பெயர்:—புல்லர், கலர், கையர், கிஞ்சர், புள்ளுவர், கனிட்டர், பொறியில்லார், தேரார், முறையிலார், பதிதர், வல்லுவர், கீழ், மூடர், கயவோர், முசுண்டர், மூர்க்கர், தீயோர், பயல்கள், அற்பர், திம்பர், சிறியோர். ஆ 21.

(பி - ம்) 1. ரன்பரிகா? 2. வல்லுவர்கீழ்

179. தோழனெலு வன்சேடன் பாங்கன் றுணைவனண்பன்
றூழ்சிலதன் முன்னிலைப்பேர் நானேடா—தோழிசகி
சேடி யிகுளை சிலதிபாங் பாங்கியிவட்
கேடி யெலாள்முன் னிலை. (கூச)

180. நாற்குலத்தான் பெண்ணுயர்வு தாழ்வின்மணந் தின்றமைந்தன்
சாய்க்குமனு லோமனவர் தாழ்வுயர்வாய்—வேட்கவந்தோன்
சொல்பிரதி லோமனவர் சோர்வினந்த ராளனிம்மூன்
றல்லோன் விராத்தியனே யாம். (கரு)

181. குண்டன்வேற் றோர்க்கருள்சேய் கோளகனுங் கைம்மைமகன்
திண்கானீ னன்கன்னி செய்தருணி—யண்டுவதி
யெவ்வனியு மாம்பிரவு டைக்கே யபரஞ்சி
யவ்விசைபோற் பாடலின்மிக் காள். (கசு)

---

179. தோழன் பெயர்:—தோழன், எலுவன், சேடன், பாங்கன், துணைவன், நண்பன், சிலதன். ஆ 7.

தோழன் முன்னிலைப் பெயர்:—எடா. ,, 1.

தோழி பெயர்:—தோழி, சகி, சேடி, இகுளை, சிலதி, பாங்கி. ,, 6.

தோழி முன்னிலைப் பெயர்:—எடி, எல்லாள். ,, 2.

180. நாற்குலத்தில் ஆணுயர்வும் பெண்ணிழிவும் மணந்து புணர்ந்து பெற்ற பிள்ளை பெயர்:—அனுலோமன். ,, 1.

பெண்ணுயர்வும் ஆணிழிவும் மணந்து புணர்ந்து பெற்ற பிள்ளை பெயர்:—பிரதிலோமன். ,, 1.

இவ்விரு வகுப்பிலு மணவாது சோர்வாய்ப் புணர்ந்து பெற்ற பிள்ளைபெயர்:—அந்தராளன். ,, 1.

அனுலோமன், பிரதிலோமன், அந்தராளன் இம்மூன்றுமல்லாமற் பிறந்த பிள்ளை பெயர்:—விராத்தியன். ,, 1.

181. வேற்றோர்க்குப் பெற்ற பிள்ளை பெயர்:—குண்டகன்.

கைம்மை மகன் பெயர்:—கோளகன்.

கன்னி மகன் பெயர்:—கானீனன்.

பிரவுடை பெயர்:—தருணி, உவதி, யெவ்வனி, பிரவுடை. ,, 4.

ஆடல், பாடல், அழகினில் மிக்காள் பெயர்:—அபரஞ்சி. ,, 1.

182. கந்தியவ்வை [1]யம்மைகன்னி நோற்பாள் குமரிகன்னி
வந்திமையே மைம்மை மலடியாம்—நொந்தமுண்டை
கைம்மை கயினி கலனிலியு மங்கலியே
வன்மையறு தாலிவித வை. (௱௭)

183. வண்ணமகள் கோலஞ்செய் வாள்மதங்கி பாடினியே
பண்விறலி பாடகியும் பாடுவிச்சி – கண்ணும்
பதிவிரதை யேசதிகற் பாட்டியாட் கொண்ட
வதிபெண்ணா ணச்சிநா யன். (௱௮)

184. சாமிகோ மாட்டிகோ தாரம் பெருமாட்டி
மாமுதல்வி பேதலைவி மற்றிறைவி—யாமரசி
யீனமில்பாஞ் சாலியைவ ரில்லாள் துரோபதைபேர்
சானகிவை தேகிசீ தை. (௱௯)

---

182. தவப்பெண் பெயர்:—கந்தி, அவ்வை, அம்மை, கன்னி, நோற்பாள். ஆ 5.

குமரி பெயர்:—குமரி, கன்னி. ,, 2.

மலடி பெயர்:—வந்தி, மை, மைம்மை, மலடி. ,, 4.

கைம்மை பெயர்:—முண்டை, கைம்மை, கயினி, கலனிலி, அமங்கலி, அறுதாலி, விதவை. ,, 7.

183. கோலஞ் செய்வாள் பெயர்:—வண்ணமகள், கோலஞ் செய்வாள். ,, 2.

பாடுவிச்சி பெயர்:—மதங்கி, பாடினி, விறலி, பாடகி, பாடுவிச்சி. ,, 5.

பதிவிரதை பெயர்:—பதிவிரதை, சதி, கற்பாட்டி. ,, 3.

ஆட்கொண்ட பெண் பெயர்:—நாச்சி. ,, 1.

ஆட்கொண்ட ஆண் பெயர்:—நாயன். ,, 1.

184. அரசி பெயர்:—சாமி, கோமாட்டி, கோதாரம், பெருமாட்டி, முதல்வி, தலைவி, இறைவி, அரசி. ,, 8.

துரோபதை பெயர்:—பாஞ்சாலி, ஐவரில்லாள், துரோபதி. ,, 3.

சீதை பெயர்:—சானகி, வைதேகி, சீதை. ,, 3.

(பி - ம்) 1. பம்பைகன்னி.

185. அத்தை குரத்திஐயை யாச்சியா சாள்பெயராம்
கைத்தொழில்செய் வோர்தொழுவர் கம்மியராம்—பத்தியில்லா
வேசிபொருட் பெண்கணிகை வேசைவிலை மான்சூளை
தாசிவரை வில்லிபரத் தை. (௭௰)

186. அத்தகுவி ருத்திதொழும் பாள்கிணகர் தாசர்தொறுத்
தொத்தடிமை சேடர்படுத் தொண்டுமா—மெய்த்தொழுத்தை
குட்டனிகுண் டந்துருத்தி கூளி குறளசதி
துட்டைபுழுக் கைபெண்பாற் சொல். (௭௧)

187. ஒன்னார்பற் றார்செறுந ருள்ளார்நள் ளார்மருவார்
மன்னார்செற் றார்பரர்மா னாரிகலார்—இன்னார்வேண்
டாரமரர் தெவ்வர்தரி யார்மாற்றார் சேயர்பகை
வோரரிகள் சத்துருவா கும். (௭௨)

188. உற்றவர்நட் டோர்கிளைகே ளொக்கல்குடும் பங்கூளி
சுற்றம் விருந்தந் தொடர்கடும்பு—பற்றர்தமர்
பந்தநள்ளி மித்ரர் பரிசனம் பாசனமே
பெந்துமுற வின்முறைப் பேர். (௭௩)

---

185. ஆசாள் பெயர்:—அத்தை, குரத்தி, ஐயை, ஆச்சி, ஆசாள். ஆ 5.

தொழில் செய்வோர் பெயர்:—தொழுவர், கம்மியர். ,, 3.

வேசை பெயர்:—வேசி, பொருட்பெண், கணிகை, வேசை, விலைமான், சூளை, தாசி, வரைவில்லி, பரத்தை. ,, 9.

186. புழக்கையின் பெயர்:—தொழும்பு, ஆகிணகர், தாசர், தொறு, தொத்து, அடிமை, சேடர், படு, தொண்டு. ,, 10.

புழக்கச்சி பெயர்:—தொழுத்தை, குட்டனி, குண்டம், துருத்தி, கூளி, குறள், அசதி, துட்டை, புழுக்கை. ,, 9.

187. சத்துநவின் பெயர்:—ஒன்னார், பற்றார், செறுநர், உள்ளார், நள்ளார், மருவார், மன்னார், செற்றார், பரர், மானார், இகலார், இன்னார், வேண்டார், அமரர், தெவ்வர், தரியார், மாற்றார், சேயர், பகைவோர், அரிகள், சத்துரு. ஆ 21.

188. உறவின் முறைப் பெயர்:—உற்றவர், நட்டோர், கிளை, கேள், ஒக்கல், குடும்பம், கூளி, சுற்றம், விருந்தம், தொடர், கடும்பு, பற்றர், தமர், பந்தம், நள்ளி, மித்திரர், பரிசனம், பாசனம், பெந்து, உறவின்முறை. ஆ 20.

189. பேரன்மூ தாதை பிதாமகன்போற் றன்பாட்டன்
பேர்தகப்ப னீன்றோன் பிதாதாதை—யம்மான்
அத்தனய்யன் றந்தையச்ச னப்பனு ஞாதியர்தா
யத்தர்குடிச் சுற்றத்தோ ராம். (௭௪)

190. ஆயியன்னை யவ்வைபெற்றா ளம்மனையாய் தல்லிதள்ளை
தாயம்மை மோய்மாதாத் தவ்வையுமாம்—பாய்செவிலி
பின்வளர்த்த தாய்தமக்கை பேர்சேட்டை தவ்வையண்ணி
முன்னைதத்தை யக்காள்மூத் தாள். (௭௫)

191. கைபனிச்சை தங்கை கனிட்டைபின்னை யாமிளையா
ளையன்சேட் டன்றமைய னண்ணன்முன்னோன்—செய்யதம்முன்
மூத்தோன்பேர் தம்பிபின்னோன் மூளுமனிச் சன்கனிட்ட
னேத்திளவ லந்துமிளை யோன். (௭௬)

---

189. பேரன் பெயர்:—பேரன், மூதாதை, பிதாமகன், போற்றன், பாட்டன். ஆ 5.

தகப்பன் பெயர்:—தகப்பன், ஈன்றோன், பிதா, தாதை, அம்மான், அத்தன், அய்யன், தந்தை, அச்சன், அப்பன். ,, 10.

குடிச்சுற்றத்தார் பெயர்:—ஞாதியர், தாயத்தர், குடிச்சுற்றத்தோர். ,, 3.

190. தாய் பெயர்:—ஆயி, அன்னை, அவ்வை, பெற்றாள், அம்மனை, ஆய், தல்லி, தள்ளை, தாய், அம்மை, மோய், மாதா, தவ்வை. ,, 13.

வளர்த்த தாய் பெயர்:—வளர்த்த தாய், செவிலி. ,, 2.

தமக்கை பெயர்:—தமக்கை, சேட்டை, தவ்வை, அண்ணி, முன்னை, தத்தை, அக்காள், மூத்தாள். ,, 8.

191. தங்கை பெயர்:-கை, அனிச்சை, தங்கை, கனிட்டை, பின்னை, இளையாள். ,, 6.

அண்ணன் பெயர்:—ஐயன், சேட்டன், தமையன், அண்ணன், முன்னோன், தம்முன், மூத்தோன். ,, 7.

தம்பி பெயர்:—தம்பி, பின்னோன், அனிச்சன், கனிட்டன், இளவல், இளையோன். ,, 6.

192. மாமியத்தை மாமனம்மான் மாதுலனு மோர்வயிற்றே
தாமுதித்தார் சோதரர்ச கோதரரே—தோமி
லுடன்பிறந் தோர்துணைவ ரோர்குடியிற் கொண்டோ
னடர்ந்தசட்ட கன்சகல னும். (எஎ)

193. கொண்கனுரி யோன்வேட்டோன் காந்தன்வல்ல வன்கொழுநன்
நண்பன் மணவாள னாயகனே—யொண்கணவன்
பத்தாச் சுகியன் பதிதவன்கேள் வன்றுணைவன்
மெய்த்தலைவன் காதலனு மே. (எஅ)

194. பாரிவிருந் திற்றலைவி பன்னிமனை வாட்டிமனை
தாரமனை யாள்கா தலிகாந்தை—சேருரிமை
வல்லபிகு டும்பினிவாழ்க் கைத்துணைவி ரும்பிகள
மில்லவளும் நாயகிக்கா மே. (எகூ)

195. தோன்றல்புத்தி ரன்சேய் சுதன்மதலை யேயன்மரு
மான்றனையன் செம்மல்புதல் வன்பால—னின்றசெல்வன்
சந்ததிகுட் டன்சிறுவன் காதலன்கு மாரன்மைந்தன்
நந்தனனு மாண்மகன்பேர் நாடு. (அ௰)

---

192. மாமி பெயர்:—மாமி, அத்தை. ஆக 2.

மாமன் பெயர்:—மாமன், அம்மான், மாதுலன். ,, 3.

ஓர்வயிற் றுதித்தோர் பெயர்:—சோதரர், சகோதரர், உடன்பிறந்தோர், துணைவர். ,, 5.

ஓர்குடியிற் கொண்டோர் பெயர்:—சட்டகன், சகலன். ,, 2.

193. நாயகன் பெயர்:—கொண்கன், உரியோன், வேட்டோன், காந்தன், வல்லவன், கொழுநன், நண்பன், மணவாளன், நாயகன், கணவன், பத்தா, சுகியன், பதி, தவன், கேள்வன், துணைவன், தலைவன், காதலன். ஆக 18.

194. நாயகி பெயர்:—பாரி, விருந்து, இல், தலைவி, பன்னி, மணவாட்டி, மனை, தாரம், மனையாள், காதலி, காந்தை, உரிமை, வல்லபி, குடும்பினி, வாழ்க்கைத்துணை, விரும்பி, களம், இல்லவள், நாயகி. ஆக 19.

195. மகன் பெயர்:—தோன்றல், புத்திரன், சேய், சுதன், மதலை, ஏயன், மருமான், தனையன், செம்மல், புதல்வன், பாலன், செல்வன், சந்ததி, குட்டன், சிறுவன், காதலன், குமாரன், மைந்தன், நந்தனன், ஆண்மகன். ஆக 20.

196. புத்திரிகு மாரி புதல்விசுதை யேயிகுட்டி
சித்தமகி ளையை சிறுவிசெல்வி—யத்தனையை
பந்தனை காதலி பாலியிவை பெண்மகள்பேர்
நந்தனையுஞ் சொல்க நயந்து. (௯௧)

197. இப்பொதுச்சந் தானமக வெச்சங் குழவிவழி
மைப்பொருள்சி சுக்குழந்தை கான்முளையே—மெய்ப்பிள்ளை
மக்கள் சிறுரே மகார்மகவின் பன்மையாஞ்
சக்களரோ ராண்பெண்சேர்ந் தார். (௯௨)

198. மைத்துனனத் தான்கொழுநன் மாப்பிளைசம் மந்தியம்மான்
அத்தைமகன் வேட்டோர் துணைகொழுநி—மைத்துனியப்
பிள்ளைகளிற் பெண்பேர் மருமகன்பி றங்கடைமாப்
பிள்ளைமரு மான்மருகன் பேர். (௯௩)

---

196. மகள் பெயர்:—புத்திரி, குமாரி, புதல்வி, சுதை, ஏயி, குட்டி, ஐயை, சிறுவி, செல்வி, தனையை, பந்தனை, காதலி, பாலி, பெண்மகள், நந்தனை ஆ 15.

197. மக்கட் பொதுப் பெயர்:—சந்தானம், மகவு, எச்சம், குழவி, வழி, பொருள், சிசு, குழந்தை, கான்முளை, பிள்ளை. ஆ 10.

மகவின் பன்மைப் பெயர்:—மக்கள், சிறுர், மகார். ,, 3.

ஒரு பெண்ணைச் சேரும் பல புருடர் பெயர்:—சக்களர். ,, 1.

ஓராணைச் சேரும் பல பெண்கள் பெயர்:—சக்களத்திகள். ,, 1.

198. மாமன் மக்கள், மாமி மக்கள், வேட்ட பெண்ணுடன் பிறந்தோர்பெயர்:—மைத்துனன், அத்தான், கொழுநன், மாப்பிள்ளை, சம்மந்தி. ,, 5.

அப்பிள்ளைகளிற் பெண் பெயர்:—கொழுநி, மைத்துனி. ,, 2.

மருமகன் பெயர்:—மருமகன், பிறங்கடை, மாப்பிள்ளை, மருமான், மருகன். ,, 5.

மானிட வர்க்கம் முற்றும்.

II. அஃறிணை யுயிர்ப்பொருட் படலம்

1. நாற்காலுயிர்ப் பொருள் வர்க்கம்.

199. ஆளியறு கேபூட்கை வாளமுமாங் கேசரிக
ராளிவய மாமிருக ராசனரி—கோளரி
சிய முடங்குளைபஞ் சானனங்கண் டீரவந
காயுதமட ங்கலுஞ்சிங் கம். (௧)

200. வல்லியஞ்சார்த் தூலம்வய மாவியா ளந்தீவி
புல்புலித ரக்குழுவை புண்டரிகங்—கொல்வேங்கை
சித்திர காயங் கொடுவரிவி யாக்கிரமே
யத்துங் குயவரியு மாம். (௨)

201. தந்திகளி றத்திகயங் குஞ்சரஞ்சா மோற்பவமா
மந்தமாத் தூங்கல்கரி மாதங்கஞ்—சிந்துரந்தோல்
வாரணம தாவளங்கைம் மாவழுவை யாம்பல்பக
டேரம்ப நாக மிபம். (௩)

202. உம்பல்வல்வி லங்கொருத்தல் மாதிரமு வாப்புழைக்கை
கும்பிசிறு கண்ணிநடைக் குன்றெறும்பி—தும்பிமருண்
மாவேழந் தந்தா வளம்புகர்மு கம்பூட்கை
நால்வாய் கறையடியா னை. (௪)

---

199. ஆளியின் பெயர்:—ஆளி, அறகு, பூட்கை, வாளம். ஆ 4.
சிங்கத்தின் பெயர்: —கேசரி, கராளி, வயமா, மிருகராசன், அரி, கோளரி, சீயம், முடங்குளை, பஞ்சானனம், கண்டீரவம், நகாயுதம், மடங்கல், சிங்கம். ,, 13.

200. புலியின் பெயர்:—வல்லியம், சார்த்தூலம், வயமா, வியாளம், தீவி, புல், புலி, தரக்கு, உழுவை, புண்டரிகம், வேங்கை, சித்திரகாயம், கொடுவரி, வியாக்கிரம், குயவரி. ,, 15.

201. யானையின் பெயர்:—தந்தி, களிறு, அத்தி, கயம், குஞ்சரம், சாமோற்பவம், மா, மந்தமா, தூங்கல், கரி, மாதங்கம், சிந்துரம், தோல், வாரணம், மதாவளம், கைம்மா, வழுவை, ஆம்பல், பகடு, எரம்பம், நாகம், இபம்.

202. உம்பல், வல்விலங்கு, ஒருத்தல், மாதிரம், உவா, புழைக்கை, கும்பி, சிறுகண்ணி, நடைக்குன்று, எறும்பி, தும்பி, மருண்மா, வேழம், தந்தாவளம், புகர்முகம், பூட்கை, நால்வாய், கறையடி, யானை. ,, 41.

203. தீதில்பிடி யானைகரே ணுக்கரிணி சீர்வடவை
யோதிரதி யாமரசு [1]வர்யூத—நாதனுங்
கன்றுமுனி போதகங் கயந்தலையு டன்களபந்
துன்று துடியடியுஞ் சொல். (௫)

204. தாலவட்டம் வால்வே சகம்வா னுனியாமுன்
காலதின்பேர் காத்திரம்பின் காலபரம்—தாலுமத
கங்கும்ப மத்தகங் கைந்நுனியே புட்கரங்கூட்
டங்கடக மஞ்சுமுது காம். (௬)

205. கடைக்கணிரி யாணங் கடங்கதுப்ப தாம்பல்
லடிப்பேர் கரீர மதுதாங்—கிடங்கண்டஞ்
சேவகம்வி லாழிகையிற் சிந்துநீர் பாகல நோய்
எவுதா சாம்புரசை யே. (௭)

---

203. பிடியானையின் பெயர் :—பிடி, கரேணு, கரிணி, வடவை, இரதி. ஆக 5.
அரசுவாவின் பெயர் :—அரசுவா, யூதநாதன். ,, 2.
யானைக்கன்றின் பெயர் :—கன்று, முனி, போதகம், கயந்தலை, களபம், துடியடி. ,, 6.

204. யானைவாலின் பெயர் :—தாலவட்டம். ,, 1.
வால் நுனியின் பெயர் :—வேசகம். ,, 1.
முன்காலின் பெயர் :—காத்திரம். ,, 1.
பின்காலின் பெயர் :—அபரம். ,, 1.
மத்தகத்தின் பெயர் :—தாலு, மதகம், கும்பம், மத்தகம். ,, 4.
துதிக்கைந் நுனியின் பெயர் :—புட்கரம். ,, 1.
யானைக்கூட்டத்தின் பெயர் :—கடகம். ,, 1.
யானை முதுகின் பெயர் :—மஞ்சு. ,, 1.

205. யானைக் கடைக்கண்ணின் பெயர் :—நிரியாணம். ,, 1.
கதுப்பின் பெயர் :—கடம். ,, 1.
பல்லடியின் பெயர் :—கரீரம். ,, 1.
யானை தூங்கு மிடப் பெயர் :—கண்டம், சேவகம். ,, 2.
துதிக்கையிற் சிந்து நீர்ப்பெயர் :—விலாழி. ,, 1.
யானைநோயின் பெயர் :—பாகலம். ,, 1.
புரசையின் பெயர் :—புரசை, தூசு. ,, 2

(பி - ம்.) 1. வாயூப.

206. சூளிகையாங் காதடிப்பேர் தொண்டை[1] தொண்ட லந்துதிக்கை
வாளெயிறு கோடுதந்த மானமும்பின்—னீள்பிருதுங்
கொம்பினடு வீழ்குழிகொப் பம்பயம்பா மோடைபட்டம்
உம்பல்செல்லும் பாதைதண்ட மோர். (௮)

207. மதம்பெய்சுவ டேகரட மாங்கடாந் தானம்
மதர்கடம தங்கூடம் வாரி—முதிரோளி
யாலயங்கண் டக்கயிறு கச்சைமந்த னஞ்குழி
யேனு முகபடா மே. (௯)

208. கந்திருவம் பத்திரியே கற்கியச்சு வஞ்சடிலங்
குந்தமரி கிள்ளையயங் கொக்கிவுளி—கந்துகமாக்
கோடைதுர கங்கோணம் கோடகங்கோ ரம்புரவி
பாடலந்து ரங்கம் பரி. (௰)

209. தூசிகன வட்டந் துரகத மத்திரி
வாசி குரகதம் வாக[2]முன்னி—தேசியுமாங்

206. யானையின் காதடிப் பேயர் :—சூளிகை. ஆ 1.
துதிக்கையின் பேயர் :—தொண்டை, தொண்டலம், துதிக்கை. ,, 3.
யானைக்கோம்பின் பேயர் :—எயிறு, கோடு, தந்தம். ,, 3.
கோம்பினடுவின் பேயர் :—பிருதுமானம். ,, 1.
யானைவிழுங் குழிப்பேயர் :—கொப்பம், பயம்பு. ,, 2.
பட்டத்தின் பேயர் :—ஓடை, பட்டம். ,, 2.
யானைப்பாதையின் பேயர் :—தண்டம். ,, 1.
207. மதச்சுவட்டின் பேயர் :—கரடம். ,, 1.
மதத்தின் பேயர் :—கடாம், தானம், மதர், கடம், மதம். ,, 5.
யானைக்கூடத்தின் பேயர் :—கூடம், வாரி, ஒளி, ஆலயம். ,, 4.
கண்டக்கயிற்றின் பேயர் :—கண்டக்கயிறு, கச்சை. ,, 2.
முகபடாத்தின் பேயர் :—மந்தனம், குழி, முகபடாம். ,, 3.

208. குதிரையின் பேயர் :—கந்திருவம், பத்திரி, கற்கி, அச்சுவம், சடிலம், குந்தம், அரி, கிள்ளை, அயம், கொக்கு, இவுளி, கந்துகம், மா, கோடை, துரகம், கோணம், கோடகம், கோரம், புரவி, பாடலம், துரங்கம், பரி.

209. தூசி, கன்வட்டம், துரகதம், அத்திரி, வாசி, குரகதம், வாகம், உன்னி, தேசி, குதிரை. ஆ 32.

(பி - ம்.) 1. கொண்டலம். 2. வன்னி.

திண்குதிரைப் பேர்பாமே சேர்பல்ல ணம்பருமம்
ப்ண்கலனை யின்பேர் பகர். (௫௧)

210. வற்கம் வடிகயிறு வாய்வடங்கு ரங்குரச்சை
யக்குளம்பா மாதிகமே யம்மார்க்கம்—தக்கபடி
யங்கவடி கச்சமொட்டு மாங்கடியா லங்[1]கறுளே
வெங்கலின மேகவின மே. (௫௨)

211. மத்திகைகோல் சம்மட்டி மந்திரஞ் சாலைபந்தி
மெய்த்த சுவல்குசையே வேசகமே—வைத்தவுளை
வேயு மதின்மயிராம் வேழத்தின் மேற்றவிசே
[2] யாயிலக டம்பலகா ரம். (௫௩)

212. கோப்பெற்றந் தேனுக் குடங்கபிலை யான்சுரபி
யாப்பசுவாம் பத்திரைநல் லாச்சுதையே—தீப்பசுவாம்
வற்சலமீற் றுக்கிருட்டி யோரீற்று வாமலட்டா
வற்சைகன்று தன்னம்வற்ச மாம். (௫௪)

கலனையின் பேயர் :—பரம், பல்லணம், பருமம், பண், கலனை. ஆ 5.
210. வாய்வடத்தின் பேயர் :—வற்கம், வடிகயிறு, வாய்வடம். ,, 3.
குளம்பின் பேயர் :—குரம், குரச்சை, குளம்பு. ,, 3.
குதிரை மார்க்கத்தின் பேயர் :—மாதிகம், மார்க்கம். ,, 2.
அங்கவடியின் பேயர் :—படி, அங்கவடி, கச்சம், மொட்டு. ,, 4.
கடியாலத்தின் பேயர் :—கடியாலம், கறுள், கலினம், கவினம். ,, 4.
211. சம்மட்டியின் பேயர்:—மத்திகை, கோல், சம்மட்டி. ,, 3.
குதிரைப்பந்தியின் பேயர்:—மந்திரம், சாலை, பந்தி. ,, 3.
குதிரைமயிரின் பேயர்:—சுவல், குசை, வேசகம், உளை. ,, 4.
யானைமேற் றவிசின் பேயர் :—இலகடம், பலகாரம், யானைமேற்றவிசு. ,, 3.
212. பசுவின் பேயர் :—கோ, பெற்றம், தேனு, குடம், கபிலை, ஆன், சுரபி, ஆ, பசு. ,, 9.
நற்பசுப் பேயர்:—பத்திரை. ,, 1.
தீப்பசுவின் பேயர்:—சுதை. ,, 1.
ஈற்றுவின் பேயர்:—வற்சலம். ,, 1.
ஓரீற்றுவின் பேயர்:—கிருட்டி. ,, 1.
மலட்டாவின் பேயர்:—வற்சை. ,, 1.
பசுவின் கன்றின் பேயர்:—தன்னம், வற்சம். ,, 2.

(பி - ம்.) 1. கருளே. 2. யாய் பிலகட்டம்.

213. பாறல்விடை நந்திகுண்டை பாண்டில்குத்தங் கூளிபக
டேறிடபங் கோபதியி ருன்மூரி—கூறெருது
புங்கவஞ்சேப் புல்லநரை பூணிகொட்டி யங்காளை
யங்கெருமை யான்பொதுமா டாம். (௰௫)

214. ஆவின்முலைப் பேர்சுரையா மாபீனமேசெருத்தல்
ஆவின்மடுச் சூட்டா மதின்சிமிழே—மேவுமிமி
லக்கு விடைமுரிப்பா மானெருமைப் பால்விளையத்
தக்க துரோசனைய தாம். (௰௬)

215. காலிதொறுக் கோட்டநிரை காலேயம் பட்டிகிடை
யேல்பசுக்கூட் டங்கிடையாட் டின்குழுவாஞ்—[1]சால்பொலியே
றுந்தூர்வ கந்[2]துரிய மாமாக் கவையமா
வாய்ந்தகாட் டாவினு மம். (௰௭)

---

213. காளையின் பெயர்:—பாறல், விடை, நந்தி, குண்டை, பாண்டில், குத்தம், கூளி, பகடு, ஏறு, இடபம், கோபதி, இருல், மூரி, எருது, புங்கவம், சே, புல்லம், நரை, பூணி, கொட்டியம், காளை. ஆ 21.

பசு எருமை யிரண்டுக்கும் பொதுப்பெயர்:—மாடு.

214. பசுவின் முலைப்பெயர்:—சுரை.

மடுவின் பெயர்:—ஆபீனம், செருத்தல், மடு. ,, 3.

சிமிழின் பெயர்:—சூட்டு, சிமிழ். ,, 2.

விடைமுரிப்பின் பெயர்:— இமில், அக்கு, விடைமுரிப்பு. ,, 3.

பசு எருமையின் விளையும் பொருளின் பெயர் :—உரோசனை. [பசுவில் விளைவது உரோசனை யென்றும் எருமையில் விளைவது மயிடரோசனை யென்றும் கூறுவர்]

215. பசுக்கூட்டத்தின் பெயர்:—காலி, தொறு, கோட்டம், நிரை, காலேயம், பட்டி, கிடை, பசுக்கூட்டம். ,, 8.

ஆட்டுக்கூட்டத்தின் பெயர்:—கிடை, ஆட்டின்குழு. ,, 2.

பொலியேற்றின் பெயர்:—பொலியேறு, தூர்வகம், துரியம். ,, 3.

காட்டாவின் பெயர்:—ஆமா, கவையமா, காட்டா. ,, 3.

(பி - ம்.) 1. சால்பொதியே? 2. தூரிய மாமா.

216. காரான் வடவைமயி டஞ்[1]சயிரி பங்கவரி
கார்மேதி மூரிகா சாவெருமை—சேரான்
பகடுகிடா வாமீனுப் பக்குவமாம் பெண்மா
டிகலில் கிடாரியென்று மே. (௰௮)

217. வெள்ளைமறி கார்வெறிமை மேழகம யந்துருவை
பள்ளை[2]யுதள் சாகளஞ்சா கம்பிரமம்—துள்ளலசங்
கொச்சையரு ணங்கொறிவற் காலியொரு மேடமுடுச்
செச்சைதகர் மோத்தைதிண்ண கம். (௰௯)

218. கம்பளஞ்ச கம்புருவை யாடுகிடா யிவ்வான்பேர்
பம்புவரை யாடுசர பம்வருடை—வெம்பறழே
குட்டன்மறி சோரனணங் கைந்தாட்டின் குட்டிகண்டத்
தொட்டுமுறுப் பொன்றதரொன் றோது. (௨௰)

219. [3] பல்லுகங் குடாவடியை வாய்மாக் கவிழ்தலையே
பல்லமெலு வெண்கிருளி பற்றுளியம்—சொல்கரடிக்
காம்பேர் தலைவிரியு மாமண் டசமுசலி
யோம்புதடி கோதா வுடும்பு. (௨௧)

---

216. எருமையின் பெயர்:—காரான், வடவை, மயிடம், சயிரிபம், கவரி, கார், மேதி, மூரி, காசா, எருமை. ஆ 10.
ஆணெருமையின் பெயர்,—பகடு, கிடா. ,, 2.
ஈனாத மாட்டின் பெயர்:—கிடாரி. ,, 1.
217. ஆட்டின் பெயர்:—வெள்ளை, மறி, கார், வெறி, மை, மேழகம், அயம், துருவை, பள்ளை, உதள், சாகளம், சாகம், பிரமம், துள்ளல், அசம், கொச்சை, அருணம், கொறி, வற்காலி, ஒரு, மேடம், உடு, செச்சை, தகர், மோத்தை, திண்ணகம்.
218. கம்பளம், சகம், புருவை, ஆடு. ஆ 30.
ஆணாட்டின் பெயர்:—கிடாய். ,, 1.
வரையாட்டின் பெயர்:—சரபம், வருடை. ,, 2.
ஆட்டுக்குட்டியின் பெயர்:—பறழ், குட்டன், மறி, சோரன், அணங்கு. ,, 5.
ஆட்டுக்கழுத்திற் றூங்குமுறுப்பின் பெயர்:—அதர். ,, 1.
219. கரடியின் பெயர்:—பல்லுகம், குடாவடி, ஐவாய்மா, கவிழ்தலை, பல்லம், எலு, எண்கு, இருளி, உளியம், கரடி, தலைவிரி. ,, 11.
உடும்பின் பெயர்:—அண்டசம், முசலி, தடி, கோதா, உடும்பு. ,, 5.

(பி - ம்.) 1. சரியிரியங், சயிரியங். 2. புதழ். 3. வல்லூகம்.

220. [1] போழ்முகிகோ லங்கிருட்டி போத்திரிவ ராக[2]முர்தூழ்
கேழல்களி றேனங் கிருகிடியே—மோழலரி
வல்லுளிபூ தாரமைமாச் சூகரங்கு ரோட்டிரணி
நல்லெறுழி கோணிபன்றி நாட்டு. (உஉ)

221. சல்லியமு ளாவெய்யே சல்லபமுட் பன்றியம்முட்
சல்லஞ் சலஞ்சா மரைசவரி—மெல்லெகின
மானமாச் சிகரம்பட் டங்கவரி மானணிற்பேர்
தான்வெளில்வ ரிப்புறம தாம். (உங)

222. ஏக சிருங்கிகாண் டாமிருக மென்பர்சிவ
மோகியதி சூரிபுரு டாமிருகம்—வாகில்லா
முண்டிதை[3]யு ரோதனிதே வாங்காகு மொய்சுவவு
சுண்டனுடன் சுந்தரிமூஞ் சூறு. (உச)

---

220. பன்றியின் பெயர்:—போழ்முகி, கோலம், கிருட்டி, போத்திரி, வராகம், முர்தூழ், கேழல், களிறு, ஏனம், கிருகிடி, மோழல், அரி, வல்லுளி, பூதாரம், மைமா, சூகரம், குரோட்டு, இரணி, எறுழி, கோணி, பன்றி. ஆ 21.

221. முளாவின் பெயர்:—சல்லியம், முளா. ,, 2.

முட்பன்றியின் பெயர்:—எய், சல்லபம், முட்பன்றி. ,, 3.

பன்றிமுள்ளின் பெயர்:—சல்லம், சலம். ,, 2.

சாமரைப் பெயர்:—சாமரை, சவரி, எகினம், மானமா, சிகரம், பட்டம், கவரிமான். ,, 7.

அணிலின் பெயர்:—அணில், வெளில், வரிப்புறம். ,, 3.

222. காண்டாமிருகத்தின் பெயர்:—ஏக சிருங்கி, காண்டா மிருகம். ,, 2.

புருடாமிருகத்தின் பெயர்:—சிவமோகி, அதிசூரி, புருடா மிருகம். ,, 3.

தேவாங்கின் பெயர்:—முண்டிதை, உரோதனி, தேவாங்கு. ,, 3.

மூஞ்சூறின் பெயர்:—சுவவு, சுண்டன், சுந்தரி, மூஞ்சூறு. ,, 4.

(பி - ம்.) 1. போழ்முகம். 2. முர்தூள். 3. யுரேதனி.

223. பாக்கன்விலா ளம்விடரு[1]கம்பவன மார்ச்சால
மர்க்கடுவன் பூஞைபல வன்பூசை—தாங்கோதி
யிற்புலியே மண்டலியெ லிப்பகை யேவெருகென்
றப்பதினைன் கும்பூனை யாம். (உரு)

224. நவ்வியுழை யேணஞ்சூ னம்பிணைகு ரங்கமறி
யவ்வருணங் கிட்டிணஞ்சா ரங்கமுமான்—வெவ்விரலை
புல்வாய் கலைவச்ச யங்கருமான் போரிரலை
புல்வாய் தனக்கும் புகல். (உசு)

225. கோகிலஞ்சா காமிருகங் கோடரநி ரந்தமரி
நாகமற்க டம்வா னரங்கடுவன்—யூகங்
கவிவலிமு கம்பிலவங் கங்கிச கங்கா
னவனரமா மந்திகுரங் காம். (உஎ)

226. காருகங்க ருங்குரங்காங் கத்தூரிப் பிள்ளைமான்
[2] சூர்நரந்த நானந் தருக்கமாம்—சீர்மறுவி
நாவிபுழு குப்பிள்ளைப் பேர்காத் திரம்நகுலம்
தீர்வை[3]கத்தி ரங்கிரி செப்பு. (உஅ)

223. பூனைப் பெயர்:—பாக்கன், விலாளம், விடருகம், பவனம், மார்ச்சாலம், கடுவன், பூஞை, அலவன், பூசை, ஓதி, இற்புலி, மண்டலி, எலிப்பகை, வெருகு, பூனை. ஆ 15.

224. மானின் பெயர்:—நவ்வி, உழை, ஏணம், சூனம், பிணை, குரங்கம், மறி, அருணம், கிட்டிணம், சாரங்கம், மான். ஆ 11.

கருமானின் பெயர்:—இரலை, புல்வாய், கலை, வச்சயம், கருமான். ,, 5.

புல்வாயின் பெயர்:—இரலை, புல்வாய். ,, 2.

225. குரங்கின் பெயர்:—கோகிலம், சாகாமிருகம், கோடரம், நிரந்தம், அரி, நாகம், மற்கடம், வானரம், கடுவன், யூகம், கவி, வலிமுகம், பிலவங்கம், கிசகம், கானவன், நரமா, மந்தி, குரங்கு. ஆ 18.

226. கருங்குரங்கின் பெயர்:—காருகம், கருங்குரங்கு. ,, 2.

கத்தூரிப்பிள்ளைப் பெயர்:—கத்தூரிப்பிள்ளை, மான், நரந்தம், நானம், தருக்கம். ,, 5.

புழுகுப்பிள்ளையின் பெயர்:—மறுவி, நாவி, புழுகுப்பிள்ளை. ,, 3.

கீரிப்பிள்ளையின் பெயர்:—காத்திரம், நகுலம், தீர்வை, கத்திரம், கிரி. ,, 5.

(பி - ம்) 1. கம்பவண. 2. சூரி. 3. சுத்திரம்.

227. ஓரிசிரு காலனுக்கு ரோட்டிகலன் கோமாயுப்
பூரிமா வுள்ளான்சம் பொண்டனரி—யோரிகள்வன்
மைம்முகங்கூ லங்கோலாங் கூலமுசு வாங்கிரிச்
சம்முயல்வ யஞ்சசமு மாம். (உசு)

228. கூரனெகி னம்பாசி குக்கல்பட்டி ஞாளிசுவாச்
சூரன் [1] புரோகதிசு ணங்கனக்க—னேர்சார
மேயன்விசு வாசிசுன கன்குரைமு கன்முடுவல்
நாய்ஞமலி யுஞ்சுவா னம். (௩௰)

229. பெண்ணாய்க் கிவற்றின் முடுவலெனும் பேர்சிறப்பாந்
திண்ணார்கொக் கேவிருகஞ் செந்நாயா—மெண்ணுஞ்
சுகினஞ் சடைநாயாம் வேசரிது ரங்க
முகியிவைகோ வேறுகமு தை. (௩க)

---

227. நரியின் பேயர் :—ஓரி, சிருகாலன், உக்குரோட்டு, இகலன், கோமாயு, பூரிமா, உள்ளான், சம்பு, ஒண்டன், நரி. ஆ 10.

முசுவின் பேயர் :—ஓரி, கள்வன், மைம்முகம், கூலம், கோலாங்கூலம், முசு. ,, 6.

முயலின் பேயர் :—கிரிச்சம், முயல், வயம், சசம். ,, 4.

228. நாயின்பேயர் :—கூரன், எகினம், பாசி, குக்கல், பட்டி, ஞாளி, சுவா, சூரன், புரோகதி, சுணங்கன், அக்கன், சாரமேயன், விசுவாசி, சுனகன், குரைமுகன், முடுவல், நாய், ஞமலி, சுவானம். ,, 19.

229. பெண்ணாயின் பேயர்:—இவற்றில் முடுவலெனும் பெயர் சிறப்பு.

செந்நாயின் பேயர் :—கொக்கு, விருகம், செந்நாய். ,, 3.

சடைநாயின் பேயர் :—சுகினம், சடைநாய். ,, 2.

கோவேறுகழுதையின் பேயர் :—வேசரி, துரங்கமுகி, கோவேறு கழுதை. ,, 3.

(பி - ம்) 1. புரோகிதி.

230. காளவாய் வேசரிகோ கத்திரிக ருத்தபமே
கீர்கரம்வா லேப நெடுங்கழுதை—தாழ்வலிதா
மத்திரிதா சோக மிரவணநெ டுங்கழுத்த
லித்துணையு மொட்டகமா மே. (௩௨)

231. சாயனஞ்சாய்ந் தஞ்சரடந் தண்டோணு ணுதிசில்லான்
காய்முசலி கோம்பிதோ கைப்பகையே—பாய்காம
ரூபியண்ட சங்கா முருகியா மோந்திமரை
யாவிதங்கா னக்குதிரை யாம். (௩௩)

232. [1]சாடுந் துருக்கனக தந்துந் தளங்களக
மூடிகம்பெ ருச்சாளி மொய்விருட—நீடாகு
வென்பவுமா மாகு விரும்பன் சிகரியெலி
பின்கருப்பை காரெலியின் பேர். (௩௪)

233. மாவொருத்த லோரிகடு வன்பகடு டன்களிறே
சேவல்கலை யும்பல்போத் தேறுதகர்—பாய்விலங்கி
ணிவைபெண் பாட்டிபிடி யான்பிணைபி ணுப்பெட்டை
காணுமந்தி நாகுங் கருது. (௩௫)

---

230. கழுதையின் பெயர்:—காளவாய், வேசரி, கோகு, அத்திரி, கருத்தபம், கரம், வாலேபம், கழுதை. ஆ. 8.

ஒட்டகத்தின் பெயர்:—அத்திரி, தாசோகம், இரவணம், நெடுங் கழுத்தல், ஒட்டகம். ,, 5.

231. ஒந்தியின் பெயர்:—சாயனம், சாய்ந்தம், சரடம், தண்டு, ஓணன், ஒதி, சில்லான், முசலி, கோம்பி, தோகைப்பகை, காமரூபி, அண்டசம், காமுருகி, ஓந்தி. ,, 14.

மரையின் பெயர்:—மரை, ஆவிதம், கானக்குதிரை. ,, 3.

232. பெருச்சாளியின் பெயர்:—உந்துரு, கனகதம், துந்தனம், களகம், மூடிகம், பெருச்சாளி, விருடம், ஆகு. ,, 8.

எலியின் பெயர்:—ஆகு, இரும்பன், சிகரி, எலி. ,, 4.

காரெலியின் பெயர்:—கருப்பை, காரெலி. ,, 2.

233. ஆண்விலங்கின் பெயர்:—மா, ஒருத்தல், ஓரி, கடுவன், பகடு, களிறு, சேவல், கலை, உம்பல், போத்து, ஏறு, தகர். ,, 12.

பெண்விலங்கின் பெயர்:—பாட்டி, பிடி, ஆன், பிணை, பிணா, பெட்டை, மந்தி, நாகு. ,, 8.

(பி - ம்) 1. சாடிருந்து.

234. பறழ்குழவி குட்டிபிள்ளை பார்ப்புக் குருளை
மறிகன்றின் பேர்விலங்கு மாமான்—செறிமிருக
நாற்காலிப் பேர்வியூ கங்குலம்[1] யூ தம்விருந்த
மேற்சால மக்கூட்டமே. (ரு௬)

235. கூலம்விலா ளந்தோகை கூரமொடு வேசகம்வால்
[2] வாலதியு மாம்வெருகம் வாற்கிழாம்—மேலுலவை
கொம்பு[3] விசா ணஞ்சிருங்கம் கோடுமருப் பாங்குமாங்
கொம்பிலியா மேழையுமே கூறு. (ரு௭)

---

234. குட்டியின் பெயர்:—பறழ், குழவி, குட்டி, பிள்ளை, பார்ப்பு, குருளை, மறி, கன்று. ஆ 8.

நாற்காலுயிர்ப் பொதுப் பெயர்:—விலங்கு, மா, மான், மிருகம், நாற்காலி. ,, 5.

மிருகக் கூட்டத்தின் பெயர்:—வியூகம், குலம், யூதம், விருந்தம், சாலம், மிருகக் கூட்டம். ,, 6.

235. வாலின் பெயர்:—கூலம், விலாளம், தோகை, கூரம், வேசகம், வால், வாலதி. ,, 7.

வாற்கிழின் பெயர்:—வெருகம், வாற்கிழ். ,, 2.

கொம்பின் பெயர்:—உலவை, கொம்பு, விசாணம், சிருங்கம், கோடு, மருப்பு. ,, 6.

கொம்பிலா மிருகப் பெயர்:—குமரம், கொம்பிலி, மேழை. ,, 3.

நாற்காலுயிர்ப் பொருள் வர்க்க முற்றும்.

(பி - ம்) 1. யூகம். 2. வாலுதி. 3. விடாணம்.

2. பறவை யுயிர்ப்பொருள் வர்க்கம்.

236. தாக்கியனே நாகா சனன்வயின தேயன்புட்
கோக்கலுழன் காளாரி கூறுவணன்—தாய்க்கவலந்
தீர்த்தான் பெரிய திருவடிபுட் காசிபன்சேய்
காத்தசுதா தாரிகரு டன். (க)

237. சம்பரம் வாருண்டஞ் சாளுவந்து ரோணமொடு
சிம்புளெண்காற் புள்வருடை சிங்காரி—வெம்பறவை
மெய்க்குலிச தந்தி குலிசாங்கி மீறுசிவ
பக்கிசதுர்ப் பாணிசர பம். (உ)

238. அன்னமெகி னம்வக்கி ராங்கமரா ளம்விகங்கந்
தன்னெடஞ்ச மோதிமமாந் தத்தையரி—வன்னிகிள்ளை
கீர மவந்திகைசு வாகதஞ்சு கங்கிளிப்பேர்
சாருவுமாம் பொய்யாச் சலாங்கு. (ங)

239. சிகிஞமலி மஞ்ஞை சிகண்டி நவிர
மொகரம் பிணிமுகம மூரஞ்—சிகாவளமாங்
கோலமயிற் கேகயமுங் கொள்கமயி லாட்டேங்க
லால லகவல் குரல். (ச)

---

236. கருடன் பெயர்:—தாக்கியன், நாகாசனன், வயினதேயன், புட்கோ, கலுழன், காளாரி, உவணன், தாய்க்கவலந் தீர்த்தான், பெரிய திருவடி, புள், காசிபன் சேய், சுதாதாரி, கருடன். ஆ 13.

237. சரபத்தின் பெயர்:—சம்பரம், வாருண்டம், சாளுவம், துரோணம், சிம்புள், எண்காற்புள், வருடை, சிங்காரி, வெம்பறவை, குலிசதந்தி, குலிசாங்கி, சிவபக்கி, சதுர்ப்பாணி, சரபம். ஆ 14.

238. அன்னத்தின் பெயர்:—அன்னம், எகினம், வக்கிராங்கம், மராளம், விகங்கம், அஞ்சம், ஓதிமம். ,, 7.

கிளியின் பெயர்:—தத்தை, அரி, வன்னி, கிள்ளை, கீரம், அவந்திகை, சுவாகதம், சுகம், கிளி, சாரு. ,, 10.

கருங்குவளையின் பெயர் :—கருங்குவளை, குவலயம், காவி, பானல். ,, 4.

செங்கழுநீரின் பெயர்:—செங்கழுநீர், கோலம், கல்லாரம். ,, 3.

கருநெய்தலின் பெயர்:—கார்நெய்தல், இந்திவரம், நீலம். ,, 3.

வெண்ணெய்தலின் பெயர்:—வெண்ணெய்தல், குமுதம். ,, 2.

(பி - ம்) 1. சாலூரகஞ். 2. வலயம்.

364. தாருநகஞ் சாகிகுசந் தாபரம்பூ கந்துரும்ம்
பூருகந்த ருச்சாலம் பேரங்கடவி—சேரகலி
யம்பாத வம்விருக்க மத்திரிம ரப்பொதுத்தார்
மொய்ம்பார் சடைசிவைவேர் மூடு. (அஅ)

365. மூலகங்கந் தஞ்சகுன மூலங் கிழங்குமுளை
காலங் குரமாங் கவடுகவர்—கோல்விடபங்
கொம்புலவை பொங்கரிபங் கோடுகப்புச் சாகைசினை
யம்பணை கோடரங்கொப் பாம். (அகூ)

366. பன்னந் தகடடைப லாசஞ் சதந்தழையே
மன்னுபத்தி ரந்தலந்த மாலமிலை—மின்னுமுறி
வல்லரிய லங்கல்பல்ல வங்கிசலை மஞ்சரியே
சொல்குழைசுங் கந்தளிர்து ளிர். (கூ0)

367. மொக்குள்நனை போகில் முகைமுகிழங் கோரகைமொட்
டுக்கலிகை சாலகம ரும்புமலர்—மெய்க்குசுமம்
வீத்தா ரலர்பிரசூ னஞ்சுமன சந்துடப்பு
பூத்தாமம் புட்பமிணர் போது. (கூக)

---

364. மரப் பொதுப்பெயர்:—தாரு, நகம், சாகி, குசம், தாபரம், பூகம், துருமம், பூருகம், தரு, சாலம், அடவி, அகலியம், பாதவம், விருக்கம், அத்திரி, மரம். ஆ 16.

வேரின் பெயர்:—தார், சடை, சிவை, வேர், மூடு. ,, 5.

365. கிழங்கின் பெயர்:—மூலகம், கந்தம், சகுனம், மூலம், கிழங்கு. ,, 5.

முளையின் பெயர்:—முளை, கால், அங்குரம். ,, 3.

கோப்பின் பெயர்:—கவடு, கவர், கோல், விடபம், கொம்பு, உலவை, பொங்கர், இபம், கோடு, கப்பு, சாகை, சினை, பணை, கோடரம், கொப்பு. ,, 15.

366. இலையின் பெயர்:—பன்னம், தகடு, அடை, பலாசம், சதம், தழை, பத்திரம், தலம், தமாலம், இலை. ,, 10.

தளிரின் பெயர்:—முறி, வல்லரி, அலங்கல், பல்லவம், கிசலை, மஞ்சரி, குழை, சுங்கம், தளிர், துளிர். ,, 10.

367. அரும்பின் பெயர்:—மொக்குள், நனை, போகில், முகை, முகிழ், கோரகை, மொட்டு, கலிகை, சாலகம், அரும்பு. ,, 10.

பூவின் பெயர்:—மலர், குசுமம், வீ, தார், அலர், பிரசூனம், சுமனசம், துடப்பு, பூ, தாமம், புட்பம், இணர், போது. ,, 13.

368. பூவிதழ்தோ டேடுதளம் புல்லி புறவிதழுட்
பூவிதழா மல்லிபழம் பூத்தேம்பல்—மேவுசெம்மல்
சாம்பல்பிஞ்சு பேசிசதா லம்வடுவாந் தீவிளிகாய்
பூம்பழம்ப லன்கனிபூ ரம். (கூஉ)

369. வித்துக் [1]குருப்பரல்காழ் வீசமத்திக் கொட்டைவிதை
தொத்துடனே மஞ்சரிம லர்த்திரள்பூங்—கொத்தாம்பூந்
தாது துணர்மகரங் கொங்காம் பராகமத்தாள்
தீதின்மக ரந்தமலர்த் தேன். (கூகூ)

370. செங்கனியின் மேற்றேல் செதிளாந்தை நாறுகன்றும்
பைங்குருத்தி னமம் பயின்முருந்தாம்—செங்குறுங்கோ
டண்டுவளார் கம்பகக்கா ழாண்புறக்காழ் பெண்ணலிப்பேர்
மிண்டு கொடுவல் வெளிறு. (கூச)

368. பூவிதழின் பெயர்:—பூவிதழ், தோடு, ஏடு, தளம். ஆ 4.
புறவிதழின் பெயர்:—புல்லி, புறவிதழ். ,, 2.
உட்பூவிதழின் பெயர்:—உட்பூவிதழ், அல்லி. ,, 2.
பழம்பூவின் பெயர்:—பழம்பூ, தேம்பல், செம்மல், சாம்பல். ,, 4.
பிஞ்சின் பெயர்:—பிஞ்சு, பேசி, சுதாலம், வடு. ,, 4.
காயின் பெயர்:—தீவிளி, காய். ,, 2.
பழத்தின் பெயர்:—பழம், பலன், கனி, பூரம். ,, 4.
369. விதையின் பெயர்:—வித்து, குரு, பரல், காழ், வீசம், அத்தி, கொட்டை, விதை. ,, 8.
பூங்கொத்தின் பெயர்:—தொத்து, மஞ்சரி, மலர்த்திரள், பூங்கொத்து. ,, 4.
பூந்தாதின் பெயர்:—பூந்தாது, துணர், மகரம், கொங்கு. ,, 4.
பூந்தாளின் பெயர்:—பராகம். ,, 1.
மலர்த்தேனின் பெயர்:—மகரந்தம், மலர்த்தேன். ,, 2.
370. கனிமேற்றேலின் பெயர்:— செதிள். ,, 1.
மரக்கன்றின் பெயர்:—தை, நாறு, கன்று. ,, 3.
குருத்தின் பெயர்:—குருத்து, பயின், முருந்து. ,, 3.
குறுங்கோட்டின் பெயர்:—குறுங்கோடு, வளார், கம்பு. ,, 3.
ஆண்மரத்தின் பெயர்:—அகக்காழ், ஆண்மரம். ,, 2.
பெண்மரத்தின் பெயர்:—புறக்காழ், பெண்மரம். ,, 2.
அலிமரத்தின் பெயர்:—அலி, கொடுவல், வெளிறு. ,, 3.

(பி - ம்) 1. கரு.

371. நார்துவக்குப் பட்டைதொலி வற்கலம ரத்தோலா
மோருநிரி யாச முகளிவளன்—சேர்பிசினும்
வீழ்சுவ ரோகம் விழுதொட்டுப் புல்லுருவி
தாமுரம ரப்பொடிய தாம். (சுஅ)

372. உலர்மரம்வா னம்வானப் பத்தியமே கோளி
மலரிலியாங் காய்ப்ப பலினம்—பலமொன்
றிலிபழிப கேசிகையா மீர்ம்படுக்கு[1] றும்பு
குலைதாறு சாறுகுச்சங் கொத்து. (சுஅ)

373. இலைகனிகாய் பூவடிகாம் பீர்க்கு நரம்பா
நிலையசரந் தாபரப்பொ துப்பேர்— மலிமூலி
மூலிகைமு ளைத்தலைநெய் யுள்ளவிதை முத்தரிசி
பாலுடைய முத்துட் பருப்பு. (சுஎ)

---

371. மரத்தோலின் பெயர்:—நார், துவக்கு, பட்டை, தொலி, வற்கலம், மரத்தோல். ஆ 6.

பிசினின் பெயர்:—நிரியாசம், உகளி, வளன், பிசின். ,, 4.

விழுதின் பெயர்:—வீழ், சுவரோகம், விழுது. ,, 3.

மரவொட்டின் பெயர்:—ஒட்டு, புல்லுருவி. ,, 2.

மரப்பொடியின் பெயர்:—உரம், மரப்பொடி. ,, 2.

372. உலர்ந்தமரத்தின் பெயர்:—உலர்மரம், வானம். ,, 2.

பூவிலாமரத்தின் பெயர்:—வானப்பத்தியம், கோளி, மலரிலி. ,, 3.

காய்க்கிறமரத்தின் பெயர்:—பலினம். ,, 1.

பலமிலாமரத்தின் பெயர்:—பலமிலி, பழி, பகேசிகை. ,, 3.

கொத்தின் பெயர்:—படு, குறும்பு, குலை, தாறு, சாறு, குச்சம், கொத்து. ,, 7.

373. இலை, கனி, காய், பூ: இவைகளினடியின் பெயர்:—காம்பு. ,, 1.

ஈர்க்கின் பெயர்:—ஈர்க்கு, நரம்பு. ,, 2.

தாபரப் பொதுப் பெயர்:—நிலை, அசரம், தாபரம். ,, 3.

முளைத்தலையின் பெயர்:—மூலி, மூலிகை. ,, 2.

நெய்யுள்ளவித்தின் பெயர்:—முத்து. ,, 1.

முத்துட்பருப்பின் பெயர்:—அரிசி. ,, 1.

(பி - ம்) 1. டெம்பு?

374. சேருகலை யாசினிகாழ் தின்வயிரம் வல்லிவள்ளி
யேகு மிலதை யிரத்தி—மாகொடிப்பேர்
பூடு செடிபுதலாம் யோகமத கங்குளியந்
சாடுறைம ருந்தவிட தம். (கூஅ)

375. கொன்றகரு விப்புணொழிக் குஞ்சல் லியகரணி
கன்றுச்சந் தான கரணிதுண்ட—மொன்றல்விர
ணஞ்சிக்குஞ் சம்மான மாங்கரணி தானமிர்த
சஞ்சி வினியுயிரீ தல். (கூகூ)

---

374. வயிரத்தின் பெயர் :—சேகு, கலை, ஆசினி, காழ், வயிரம். ஆ 5.

கோடியின் பெயர் :—வல்லி, வள்ளி, இலதை, இரத்தி, கொடி. ,, 5.

செடியின் பெயர் :—பூடு, செடி, புதல். ,, 3.

மருந்தின் பெயர் :—யோகம், அதகம், குளியம், உறை, மருந்து, அவிடதம். ,, 6.

375. கருவிப்புண்ணொழிக்கு மருந்தின் பெயர் :—சல்லியகரணி ,, 1.

துண்டம் பொருந்து மருந்தின் பெயர் :—சந்தானகரணி. ,, 1.

விரணந்தீர்க்கு மருந்தின் பெயர் :—சம்மானகரணி. ,, 1.

உயிர்தரு மருந்தின் பெயர் :—அமிர்தம், சஞ்சிவினி. ,, 2.

தாவர வுயிர்ப்பொருள் வர்க்க முற்றும்.

III. அஃறிணை யுயிரில்பொருட் படலம்.

1. இயற்கைப் பொருள் வர்க்கம்.

376. வித்த மிரணியஞ்சா மீகரமீ ழஞ்சுவணங்
கைத்தரிபீ தம்பீத கந்தங்கம்—மெய்த்தமனி
யஞ்சந் திரமுகரி யாசைபொல மாசைகன
கஞ்சாத ரூபம்வேங் கை. (க)

377. மாடைசொன்னந் தேசிகமே மஞ்சாமி சாம்புனத
மாடகங் காஞ்சனங்கல் யாணமுரை—மாடீகை
காரஞ்செந் தாதுநிதி காணநிதா னம்பூரி
பூரியமும் பிங்கலமும் பொன். (உ)

378. துள்ளிரச தந்தாரஞ் சுல்லுக் களதபுதம்
வெள்ளியு ருப்பியம்வெண் பொன்னுமாம்—வெள்ளீயஞ்
சீசங்கா ரீயப்பேர் நாகமீ யப்பொதுப்பேர்
ஆசில்வங்கம் வெண்கலங்கஞ் சம். (ங)

379. இரவி யுதும்பரமி ராசிவடுச் சுற்ப
மெருவைசெம்பு தாம்பிரமி ரும்பின்—வருதெளிவு
தீக்கணமி ரேகெஃகு ருக்கா மிதைத்தெளிவே
யாக்கினதொ முக்கறையென் றும். (ச)

376—377. பொன்னின் பெயர்:—வித்தம், இரணியம், சாமீகரம், ஈழம், சுவணம், கைத்து, அரி, பீதம், பீதகம், தங்கம், தமனியம், சந்திரம், முகரி, ஆசை, பொலம், மாசை, கனகம், சாதரூபம், வேங்கை.

மாடை, சொன்னம், தேசிகம், ஏமம், சாமி, சாம்புனதம், ஆடகம், காஞ்சனம், கலியாணம், உரை, மாடு, ஈகை, காரம், செந்தாது, நிதி, காணம், நிதானம், பூரி, பூரியம், பிங்கலம், பொன். ஆ 40.

378. வெள்ளியின் பெயர்:—இரசதம், தாரம், சுல்லு, களதபுதம், வெள்ளி, உருப்பியம், வெண்பொன். ,, 7.

வெள்ளீயத்தின் பெயர்:—வெள்ளீயம், சீசம். ,, 2.

காரீயத்தின் பெயர்:—காரீயம், நாகம். ,, 2.

ஈயப் பொதுப் பெயர்:—ஈயம், வங்கம். ,, 2.

வெண்கலத்தின் பெயர்:—வெண்கலம், கஞ்சம். ,, 2.

379. செம்பின் பெயர்:—இரவி, உதும்பரம், இராசி, வடு, சற்பம், எருவை, செம்பு, தாம்பிரம். ,, 8.

இருப்புத் தெளிவின் பெயர்:—இருப்புத்தெளிவு, தீக்கணம், இரேகு, எஃகு, உருக்கு. ,, 5.

உருக்குத்தெளிவின் பெயர்:—உருக்குத்தெளிவு, ஒமுக்கறை. ,, 2,

380. தராமதுகம் பித்தளைமா யாபுரியார் கூட
மிரதியுடன் சிருண மிரும்பே—கரும்பொனகி
சொன்னல் பசாசமய மிப்பொதுங்கொல் சிருள்சிக்க
மன்னுலோ கந்தாது வாம். (ரு)

381. செம்பிரும்பீ யம்பொன்வெள்ளி யைம்பொன்வெண்க லந்தரா
ஐம்பொனுறி னேழ்தாதாம் பித்தளைசேர்த்—தைம்பொனிற்சொ
லீயமிரண் டாக்கினவ லோகமுலோ கக்கட்டி
யாயதின்பேர் மாழை[2]தக ணம். (சு)

382. வர[3]நிமிளை தாப்பியமே மாக்கிகமண் ரோ
முரணுகிட்டஞ் சண்டாள முண்டம்—பொருளருத்த
மத்தமிதி யந்திரவி யந்தனம்ப ணந்தரிப்புச்
சொத்தாத்தி காசுமுதற் சொம். (எ)

---

380. தராவின் பெயர்:—தரா, மதுகம். ஆ 2.
பித்தளையின் பெயர்:—பித்தளை, மாயாபுரி, ஆரகூடம், இரதி, சிருணம். ,, 5.
இரும்பின் பெயர்:—இரும்பு, கரும்பொன், அகி, சொன்னல், பசாசம், அயம். ,, 6.
உலோகப் பொதுப் பெயர்:—கொல், சிருள், சிக்கம், உலோகம், தாது. ,, 5.
381. ஐம்பொன் ஆவன:—செம்பு, இரும்பு, ஈயம், பொன், வெள்ளி. ,, 5.
ஏழ்தாது ஆவன:—ஐம்பொன், வெண்கலம், தரா. ,, 7.
நவலோகம் ஆவன:—செம்பு, இரும்பு, காரீயம், வெள்ளீயம், பொன், வெள்ளி, வெண்கலம், தரா, பித்தளை. ,, 9.
உலோகக் கட்டியின் பெயர்:—மாழை, தகணம். ,, 2.
382. நிமிளையின் பெயர்:—நிமிளை, தாப்பியம், மாக்கிகம். ,, 3.
மண்ரோத்தின் பெயர்:—மண்ரோம், முரணு, கிட்டம், சண்டாளம், முண்டம். ,, 5.
பொருளின் பெயர்:—பொருள், அருத்தம், அத்தம், நிதியம், திரவியம், தனம், பணம், தரிப்பு, சொத்து, ஆத்தி, காசு, முதல், சொம். ,, 13.

(பி - ம்) 1. தர. 2. சுகணம். 3. நிமலை.

383. மாமணிசி வப்புமா ணிக்கம் மரகதமே
யாமரிபச் சைவச்சி ரம்வயிரங்—காம்வால
வாயம்வயி ரேயமுத் தாரமௌத்தி கந்தரள
மாய்நித் திலமணிநீ லம். (அ)

384. புட்பரா கங்கவுத்து வம்பதும ராகமாம்
துப்பாரத் தம்பிரவா ளந்துகிரே—விற்பவளம்
வித்துரு மந்துவரா மேதைகோ மேதமா
நத்துமணி யக்குமன வாம். (கூ)

385. [1]சம்பகமி ரும்புணிச லாகைமூன் றாங்காந்த
மம்பொன் மெழுகரக்கி லாக்கையா—மும்பர்மணி
சிந்தா மணியே தியாகமணி வாரீசம்
வந்தநிட்சே பம்புதையல் வைப்பு. (ய)

---

383. மாணிக்கத்தின் பெயர்:—மாமணி, சிவப்பு, மாணிக்கம். ஆ 3.

மரகதத்தின் பெயர்:—மரகதம், அரி, பச்சை. ,, 3.

வயிரத்தின் பெயர்:—வச்சிரம், வயிரம். ,, 2.

வயிரேயத்தின் பெயர்:—வாலவாயம், வயிரேயம். ,, 2.

முத்தின் பெயர்:—முத்து, ஆரம், மௌத்திகம், தரளம், நித்திலம். ,, 5.

நீலத்தின் பெயர்:—மணி, நீலம். ,, 2.

384. புட்பராகத்தின் பெயர்:—புட்பராகம், கவுத்துவம், பதுமராகம். ,, 3.

பவளத்தின் பெயர்:—துப்பு, அரத்தம், பிரவாளம், துகிர், பவளம், வித்துருமம், துவர். ,, 7.

கோமேதகத்தின் பெயர்:—மேதை, கோமேதகம். ,, 2.

சங்குமணியின் பெயர்:—அக்கு, மனவு. ,, 2.

385. காந்தத்தின் பெயர்:—சம்பகம், இரும்புணி, சலாகை, காந்தம். ,, 4.

மெழுகின் பெயர்:—மெழுகு, அரக்கு, இலாக்கை. ,, 3.

சிந்தாமணியின் பெயர்:—உம்பர்மணி, சிந்தாமணி, தியாகமணி, வாரீசம். ,, 4.

புதையலின் பெயர்:—நிட்சேபம், புதையல், வைப்பு. ,, 3

(பி - ம்) 1. சம்பகமி?

386. அக்குமன வீசன்மணி யாமுருத்தி ராக்கங்கா
விக்கல்செங்கல் காருகந்தா தாம்படிகம்—நற்காழ்
பருக்கைபளிங் காமனவு காசரத னங்க
லிரத்தினஞ்ச லாகைமணி யே. (௰௧)

387. நிதிப்பேர் நிதான மிருநிதிப்பேர் சங்கம்
பதும நவநிதிப்பேர் சங்கம்—பதுமமுகுந்
தங்கச் சபமகர நீல மகாபதும
மங்குந்த மேவரத மாம். (௰௨)

388. பண்ணிகா ரம்பரிகா ரம்பண்டா ரங்கூலம்
பண்ணியம்வ ளந்தாரம் பண்டம்வத்தாஞ்—சுண்ணந்தூள்
பூழியிரே ணுப்பொடிது கட்புழுதி யாங்களபஞ்
தாழ்சுதைமண் சுண்ணச்சாந் தாம். (௰௩)

---

386. ஊருத்திராக்கத்தின் பெயர்:—அக்கு, மனவு, ஈசன் மணி, உருத்திராக்கம். ஆ 4.

காவிக்கல்லின் பெயர்:—காவிக்கல், செங்கல், காருகம், தாது. ,, 4.

பளிங்கின் பெயர்:—படிகம், காழ், பருக்கை, பளிங்கு. ,, 4.

இரத்தினப் பொதுப் பெயர்:—மனவு, காசு, அரதனம், கல், இரத்தினம், சலாகை, மணி. ,, 7.

387. நிதியின் பெயர்:—நிதி, நிதானம். ,, 2.

இருநிதியின் பெயர்: —சங்கநிதி, பதுமநிதி. ,, 2.

நவநிதியின் பெயர்:—சங்கம், பதுமம், முகுந்தம், கச்சபம், மகரம், நீலம், மகாபதுமம், குந்தம், வரதம். ,, 9.

388. பல பண்டத்தின் பெயர்:—பண்ணிகாரம், பரிகாரம், பண்டாரம், கூலம், பண்ணியம், வளம், தாரம், பண்டம், வத்து. ,, 9.

புழுதியின் பெயர்:—சுண்ணம், தூள், பூழி, இரேணு, பொடி, துகள், புழுதி. ,, 7.

சுண்ணச் சாந்தின் பெயர்:—களபம், சுதை, மண், சுண்ணச் சாந்து. ,, 4.

389. அடலைபலி சாம்பல்காப் பைசொரியஞ் சாந்தம்
[1]பொடியேமம் புண்ணியம்வி பூதி—யிடுநீறும்
பண்ணுசெச்சை தேய்வைகள பஞ்சாந்து காலேக
வண்ணம்விரைக் குப்பிகல வை. (௰௪)

390. மான்மதங்கத் தூரிசசி வன்கனசா ரம்பளிதங்
கான்கற்பூ ரம்புழுகு கான்மீரந்—தான்மயிர்ச்சாந்
தேலந் தகரமொடு காசறைபீ தங்கலவை
சால்வட் டிகைபுலிநாற் சாந்து. (௰௫)

391. சிந்தூரஞ்சி லேகநுதற் றீட்டுகுறி புண்டரம்பொட்
டந்தில கந்திலத மாமுலைக்கோ—லந்தானே
தொய்யி லரிசிமஞ்சட் டோய்த்தணிவ தச்சுதமாம்
பைய வலத்தகஞ்செம் பஞ்சு. (௰௬)

389. சாம்பலின் பெயர்:—அடலை, பலி, சாம்பல். ஆ 3.

விபூதியின் பெயர்:—காப்பு, ஐசொரியம், சாந்தம், பொடி, ஏமம், புண்ணியம், விபூதி, நீறு. ,, 8.

களபத்தின் பெயர்:—செச்சை, தேய்வை, களபம், சாந்து, காலேக வண்ணம், விரை, குப்பி, கலவை. ,, 8.

390. கஸ்தூரியின் பெயர்:—மான்மதம், கத்தூரி. ,, 2.

கற்பூரத்தின் பெயர்:—சசி, கனசாரம், பளிதம், கற்பூரம். ,, 4.

புழுகின் பெயர்:—புழுகு, கான்மீரம். ,, 2.

மயிர்ச்சாந்தின் பெயர்:—மயிர்ச்சாந்து, ஏலம், தகரம், காசறை. ,, 4.

நால்வகைச் சாந்தின் பெயர்:—பீதம், கலவை, வட்டிகை, புலி. ,, 4.

391. சிந்தூரத்தின் பெயர்:—சிந்தூரம், சிலேகம். ,, 2.

நுதற்குறியின் பெயர்:—நுதற்குறி, புண்டரம். ,, 2.

திலகத்தின் பெயர்:—பொட்டு, திலகம், திலதம். ,, 3.

முலைக்கோலத்தின் பெயர்:—தொய்யில், முலைக்கோலம். ,, 2.

அரிசியை மஞ்சள்தோய்த் தணிவதின் பெயர்:—அச்சுதம். ,, 1.

செம்பஞ்சின் பெயர்:—அலத்தகம், செம்பஞ்சு. ,, 2.

(பி - ம்) 1. பொடிதிருநீ றேமம் புண்ணியம் பூதி.

392. வன்பறுதூ லம்பருத்திப் பஞ்சாகும் பூளையில
வின்பஞ்சாந் துய்யேபஞ் சின்றுடரா—மென்பஞ்சை
நூற்கத் திரட்டியது கொட்டை விடம் பாடாண
மாக்கிடங்[1]க ணம்பொரிகா ரம். (மஎ)

393. [2]வந்தனிகோ ரோசனையாம் வல்லீக மேயிரணம்
சந்துநா சம்பூத நாசமிங்கு—கந்தி[3]யத்தி
யாக்கிரமி ராமடம்பெ ருங்காய மாம்பேன
மீக்குகம்பி மோகியவி னே. (மஅ)

394. குஙகுலுச்ச டாயுகுந்து ருக்கஞ் சிவைகவுசி
க்ங்குற் குலுத்துர்க்கை [4]சிதாரி—குங்குலியஞ்
சற்சரசந் தூபமிவை சாம்பிரா ணிப்பெபராங்
கற்பூரந் தீபஞ்சூ டன். (மசு)

395. விந்தினிமை சூதம் சிவம்பா ரதமிரதங்
கெந்தக[5]நா தம்பலியே [6]நாறிசத்தி—முந்துசிலை
மாணூர் கு[7]நடி மனேசிலைப்பே ராங்கபிலை
யேணகம ரேணுகமா மே. (உய)

392. பருத்திப் பஞ்சின் பெயர்:—தூலம், பருத்திப்பஞ்சு. ஆ 2.
இலவின் பஞ்சின் பெயர்:—பூளை, இலவின் பஞ்சு. ,, 2.
பஞ்சின்றுடரின் பெயர்:—துய், பஞ்சின்றுடர். ,, 2.
பஞ்சைத்திரட்டியதின் பெயர்:—கொட்டை. ,, 1.
பாடாணத்தின் பெயர்: —விடம், பாடாணம். ,, 2.
பொரிகாரத்தின் பெயர்:—இடங்கணம், பொரிகாரம். ,, 2.
393. கோரோசனையின் பெயர்:—வந்தனி, கோரோசனை. ,, 2.
பெருங்காயத்தின் பெயர்:—வல்லீகம், இரணம், சந்துநாசம்.
பூதநாசம், இங்கு, கந்தி, அத்தியாக்கிரம், இராமடம், பெருங்காயம். ,, 9.
அவினின் பெயர்:—பேனம், கம்பி, மோகி, அவின். ,, 4.
394. குங்கிலியத்தின் பெயர் :—குங்குலு, சடாயு, குந்துருக்
கம், சிவை, கவுசிகம், குற்குலு, துர்க்கை, சிதாரி, குங்குலியம். ,, 9.
சாம்பிராணியின் பெயர் :—சற்சரசம், தூபம், சாம்பிராணி. ,, 3.
சூடன் பெயர் :—கற்பூரம், தீபம், சூடன். ,, 3.
395. இரதத்தின் பெயர் :—விந்து, இனிமை, சூதம், சிவம்,
பாரதம், இரதம். ,, 6.
கெந்தகத்தின் பெயர் :—கெந்தகம், நாதம், பலி, நாறி, சத்தி. ,, 5.
மனேசிலையின் பெயர் :—சிலை, குநடி, மனேசிலை. ,, 3.
அரேணுகத்தின் பெயர் :—கபிலை, ஏணகம், அரேணுகம். ,, 3.

(பி - ம்) 1. காணம். 2. வங்கணி. 3. மத்தி. 4. சோரி. 5. நதம். 6. நாரி.
7. குனடி, குனனடி.

396. பீதகியா லம்பிபிஞ்ச னந்தாள கம்பழுப்புக்
கோதந் தமால மரிதாரஞ்—சாதிலிங்கம்
இங்குளந்தா தஞ்சூத வாதிகத்து டன்குலிக
மிங்குலிக மைந்து மிசை. (உக)

397. துத்த மிரஞ்சனஞ் சிபலி கற்பரியா
மைத்துரிசு நீலி மயூரிசிலா—சித்துச்
சயிலேயங் கன்மதங்[1]கன் ஞர்கிரிச நாபி
யயிலா விடமிருத மாம். (உஉ)

398. உப்பிலவ ணம்படுவு வர்ப்புருசி யென்றுமிந்
துப்புச் சயிந்தவமென் றோர்கவெடி—யுப்புச்
சுராகாரஞ் சினக்கா ரம்படிகி வஞ்சி
நிராவுதுக முங்கூகை நீறு. (உங)

---

396. அரிதாரத்தின் பெயர் :—பீதகி, ஆலம்பி, பிஞ்சனம், தாளகம், பழுப்பு, கோதந்தம், மாலம், அரிதாரம். ஆ 8.

சாதிலிங்கத்தின் பெயர் :—சாதிலிங்கம், இங்குளம், தாதம், சூதவாதிகம், குலிகம், இங்குலிகம். ,, 6.

397. துத்தத்தின் பெயர் :—துத்தம், இரஞ்சனம், சிபலி, கற்பரி. ,, 4.

துரிசின் பெயர் :—துரிசு, நீலி, மயூரி. ,, 3.

கன்மதத்தின் பெயர் :—சிலாசித்து, சயிலேயம், கன்மதம். ,, 3.

கன்னரின் பெயர் :—கன்ஞர், கிரிசம். ,, 2.

நாபியின் பெயர் :—நாபி, விடம், மிருதம். ,, 3.

398. உப்பின் பெயர் :—உப்பு, இலவணம், படு, உவர்ப்பு, உருசி. ,, 5.

இந்துப்பின் பெயர் :—இந்துப்பு, சயிந்தவம். ,, 2.

வெடியுப்பின் பெயர் :—வெடியுப்பு, சுராகாரம். ,, 2.

சினக்காரத்தின் பெயர் :—சினக்காரம், படிகி. ,, 2.

கூகை நீற்றின் பெயர் :—வஞ்சி, துகம், கூகைநீறு. ,, 3.

(பி - ம்) 1. கன்ஞரி.

399. முருடிடுக றற்சமிதை கட்டை முளரி
யெரிஞெகிழி காட்டமிந்த னந்தான்—முரிவிறகாங்
கந்து ளிருந்தைநல்ல மாங்கரிக டைக்கொள்ளி
தந்திடுமி ராதமிலா தம். (உச)

400. பொம்மல்பதம் பாத்தமலை யோதனம்பு மூக்கல்வல்சி
யம்மிதவை சாத மடிசில்புகா—வெம்மூரல்
புன்கமமு தன்னமடை போனகம் பாளிதஞ்
சொன்றி கிமிர லுணச் சோறு. (உரு)

401. துப்பசனம் போசனமூன் றுற்றிமிசை பக்கணங்கூழ்
செப்பயினி யுண்டிதின்ப திற்றிதீன்—அப்பொதிசோ
றாற்றுணத் தோட்கோப் பவிபலிச ருத்தேவர்க்
கேற்றுணவாம் வெந்தைபிட்டா மே. (உசு)

---

399. விறகின் பெயர் :—முருடு, இருகு, அறல், சமிதை, கட்டை, முளரி, ஞெகிழி, காட்டம், இந்தனம், விறகு. ஆ 10.

கரியின் பெயர் :—கந்துள், இருந்தை, நல்லம், கரி. ,, 4.

கடைக்கொள்ளியின் பெயர் :—கடைக்கொள்ளி, இராதம், இலாதம். ,, 3.

400. சோற்றின் பெயர் :—பொம்மல், பதம், பாத்து, அமலை, ஓதனம், புழுக்கல், வல்சி, மிதவை, சாதம், அடிசில், புகா, மூரல், புன்கம், அமுது, அன்னம், மடை, போனகம், பாளிதம், சொன்றி, கிமிரல், உணா, சோறு. ,, 22.

401. உண்டியின் பெயர் :—துப்பு, அசனம், போசனம், ஊண், துற்றி, மிசை, பக்கணம், கூழ், அயினி, உண்டி. ,, 10.

தீனியின் பெயர் :—தின்ப, திற்றி, தீன். ,, 3.

கட்டுச்சோற்றின் பெயர் :—பொதிசோறு, ஆற்றுணா, தோட் கோப்பு. ,, 3.

தேவருணவின் பெயர் :—அவி, பலி, சரு, ,, 3.

பிட்டின் பெயர் :—வெந்தை, பிட்டு. ,, 2.

402. பாயசம்பாற் சோறுகறி பாகு துவைசசியங்
தோய்குழம்போ டாணமுமாந் தூய்பொரியல்—பாய்கருணை
காடிபுற்கை மோழை யவாகரக்குக் கூழ்கஞ்சி
பீடில்பே ருண்டி [1]பெருப் பு. (உஎ)

403. மிச்சிலெச்சஞ் சேடமிகை மிஞ்சுபொரு ளுச்சிட்ட
மெச்சில்பிண் ணாக் குத்துவைம லாவகமே—[2]வொச்சைவறை
யற்காஞ்சிற் றுண்டி [3]ய பூப மஃகுல்லி
யுக்காரி சட்குலிமு றுக்கு. (உஅ)

404. அப்பமே நோலைகஞ்ச மண்டகையூ பந்தோசை
பப்பரமி லட்டுகமே தோய்வைபடை—செப்புதில
புஞ்சமா மெள்ளுண்டை புள்விலங்கி னூண்குளகு
மிஞ்சு முறையிரையா மே. (உகூ)

---

402. பாற்சோற்றின் பெயர்:—பாயசம், பாற்சோறு. ஆ 2.
கறியின் பெயர்:—கறி, பாகு, துவை, சசியம், குழம்பு, ஆணம். ,, 6.
பொரியலின் பெயர்:—பொரியல், கருணை. ,, 2.
கஞ்சியின் பெயர்:—காடி, புற்கை, மோழை, யவாகு, அரக்கு, கூழ், கஞ்சி. ,, 7.
பேருண்டியின் பெயர்:—பேருண்டி, பெருப்பு. ,, 2.
403. மிஞ்சுபொருளின் பெயர்:—மிச்சில், எச்சம், சேடம், மிகை. ,, 4.
எச்சிலின் பெயர்:—உச்சிட்டம், எச்சில். ,, 2.
பிண்ணாக்கின் பெயர்:—பிண்ணாக்கு, துவை, மலாவகம். ,, 3.
வறுகறியின் பெயர்:—ஒச்சை, வறையல் ,, 2.
சிற்றுண்டியின் பெயர்:—சிற்றுண்டி, அபூபம். ,, 2.
உக்காரியின் பெமர்:—அஃகுல்லி, உக்காரி. ,, 2.
முறுக்கின் பெயர்:—சட்குலி, முறுக்கு. ,, 2.
404. அப்பத்தின் பெயர்:—அப்பம், நோலை, கஞ்சம், அண்டகை, பூபம். ,, 5.
தோசையின் பெயர்:—தோசை, பப்பரம், இலட்டுகம், தோய்வை, அடை. ,, 5.
எள்ளுண்டையின் பெயர்:—திலபுஞ்சம், எள்ளுண்டை. ,, 2.
புள்விலங்கி னூணின் பெயர்:—குளகு, உறை, இரை. ,, 3.

(பி - ம்.) 1. பெறப்பு. பிரப்பு ? 2. வெர்ச்சைவறை. 3. யாபூபமகுகுல்லி,

405. தோய்வைமுறுக் கப்பமடை தோய்ப்ப னதிரசம்பிட்
டேயுமவ லிட்டவியெள் ளுண்டைபொரி—பாய்சிடை
[1]மொக்குழி தேன்குழல் முந்திரிகைக் கொத்துமா
வுக்காரி யாதிகள்சிற் றாண். (ரு0)

406. நொடிதரி லருப்ப நுணைவைபிண்டி மாவா
மிடியுமாம் வெண்பொரியி லாசங்—தொடுகலிக்க
மஞ்சனமை[2] நாசிமருந் தாநசியஞ் சம்பாரம்
வெஞ்சனங்க றிக்கூட்டா மே. (ருக)

407. பால்பயங்கீ ரம்பயசு பாகமுத் துத்தமுமாஞ்
சாரும் பெருகு ததிதயிரா—மேலருப்ப
மற்சிகை கலாய மதிதமளி தக்கிரமோர்
அற்செறிதண் டாகதமு மாம். (ருஉ)

408. நெய்கிருத மாச்சியந்துப் பாகாரம்நேயமவி
பெய்யிழுது சர்ப்பிவெண்ணெய்ப் பேர்கவின—மைபநவ
நீதமுமா மெட்டயில மெண்ணெய்தயி லப்பொதுநெய்
காதல்செய்நே யஞ்சினே கம். (ருரு)

---

405. சிற்றுண்டிவகைகளின் பெயர்:—தோய்வை, முறுக்கு, அப்பம், அடை, தோய்ப்பன், அதிரசம், பிட்டு, அவல், இட்டவி, எள்ளுண்டை, பொரி, சீடை, மொக்குழி, தேன்குழல், முந்திரிகைக் கொத்து, மா, உக்காரி. ஆ 17.

406. மாவின் பெயர்:—நொடிது, அரில், அருப்பம், நுணைவை, பிண்டி, மா, இடி. ,, 7.

பொரியின் பெயர்:—பொரி, இலாசம். ,, 2.

மையின் பெயர்:—கலிக்கம், அஞ்சனம், மை. ,, 3.

நாசிமருந்தின் பெயர்:—நாசிமருந்து, நசியம். ,, 2.

கறிக்கூட்டின் பெயர்:—சம்பாரம், வெஞ்சனம், கறிக்கூட்டு. ,, 3.

407. பாலின் பெயர்:—பால், பயம், கீரம், பயசு, பாகு, அமுது, துத்தம். ,, 7.

தயிரின் பெயர்:—பெருகு, ததி, தயிர். ,, 3.

மோரின் பெயர்:—அருப்பம், மற்சிகை, கலாயம், மதிதம், அளி, தக்கிரம், மோர், தண்டாகதம். ,, 8.

408. நெய்யின் பெயர்:—நெய், கிருதம், ஆச்சியம், துப்பு, ஆகாரம், நேயம், அவி, இழுது, சர்ப்பி. ,, 9.

வெண்ணெயின் பெயர்:—வெண்ணெய், ஐயங்கவினம், நவநீதம். ,, 3.

எள்ளுத் தயிலத்தின் பெயர்:—எட்டயிலம், எண்ணெய். ,, 2.

தயிலப் பொதுப்பெயர்:—தயிலம், நெய், நேயம், சினேகம். ,, 4.

(பி - ம்) 1. மொக்குளி. 2. நாஞ்சிமருந்.

409. மற்சண்டி தேன்பாகு[1] வானிதம ணற்[2]பாகு
கற்கண்டு கண்ட விகாரமொடு—கற்கண்டாஞ்
சர்க்கரைகு ளம்விசையங் கட்டியயிர் கண்டம்வெல்லம்
அக்காரம் பாளிதம்புல் லம். (கூச)

410. கானுறப ஞட்டுப் பனங்கனிச்சா றட்டகட்டி
சீனிபஞ்ச தாரைமதுத் தேம்பிரசம்—வான்முருகு
நாறுநறை மாக்கிகங்க வுத்திரங்கள் வேரிநறுத்
தேறன்மக ரந்தமட்டுத் தேன். (கூரு)

411. மாலிகவ்வை குந்திவெறி மாரிசுரை சுண்டிதொண்டி
சாலிநனை யிக்காம்பல் சாயனஞ்சு—மாலிபிழி
சாறரிட்ட மேதைதொப்பி சாதிமுண்ட கந்தணியல்
சேறரியல் நாளிமந்தி ரம். (கூசா)

---

409. தேன்பாகின் பெயர்:—மற்சண்டி, தேன்பாகு. ஆ 2.

மணற்பாகின் பெயர்:—வானிதம், மணற்பாகு. ,, 2.

கற்கண்டின் பெயர்:—கற்கண்டு, கண்டவிகாரம், கண்டு. ,, 3.

சர்க்கரையின் பெயர்:—சர்க்கரை, குளம், விசையம், கட்டி, அயிர், கண்டம், வெல்லம், அக்காரம், பாளிதம், புல்லம். ,, 10.

410. பனங்கனிச் சாறட்ட கட்டியின் பெயர் :—பனுட்டு. ,, 1.

சீனியின் பெயர் :—சீனி, பஞ்சதாரை. ,, 2.

தேனின் பெயர்:—மது, தேம், பிரசம், முருகு, நறை, மாக்கிகம், கவுத்திரம், கள், வேரி, நறு, தேறல், மகரந்தம், மட்டு, தேன். ,, 14.

411.—412. கள்ளின் பெயர்:—மாலி, கவ்வை, குந்தி, வெறி, மாரி, சுரை, சுண்டி, தொண்டி, சாலி, நனை, இக்கு, ஆம்பல், சாயனம், சுமாலி, பிழி, சாறு, அரிட்டம், மேதை, தொப்பி, சாதி, முண்டகம், தணியல், சேறு, அரியல், நாளி, மந்திரம்.

(பி - ம்) 1. வானித. 2. பாகந்.

412. சொல்விளம்பி யாவேசஞ் சோமஞ் சுகிவைவெடி
[1] வல்விருனி பாடலியே மாதவமே—வெல்லாக்கு
மத்தியஞ்சு யோகி மதுரை மறவிக்ள்ளாம்
அத்தேனின் பேருமிதற் காம். (௩௭)

413. வெங்களங்கா ளங்கால மாலமிரு தங்காரி
சிங்கிவிழ மாலால மாலகா—லங்கடுவே
நஞ்சம்விட மாஞ்சுதைபீ யூட மருந்தமரி
சஞ்சலந்தீர் தேவாமிர் தம். (௩௮)

414. வற்றலுணக் கும்பொருளாம் வண்கசரி சம்மந்தி
நற்றுவையல் பச்சடிவே வாதடுத—லுற்றகறி
சீரின் மசரதம்பொய்த் தேர்மரிம ரீசிகைபேய்த்
தேர்வெண்டேர் கானல்பாழ்த் தேர். (௩௯)

சொல்விளம்பி, ஆவேசம், சோமம், சுகிவை, வெடி, விருனி, பாடலி, மாதவம், அரக்கு, மத்தியம், சுயோகி, மதுரை, மறவி, கள். ஆ 40.

இவையேயன்றித் தேனின் பெயர் முழுதுமாகும்.

413. நஞ்சின் பெயர் :—களம், காளம், காளம், ஆலம், மிருதம், காரி, சிங்கி, விழம், ஆலாலம், ஆலகாலம், கடு, நஞ்சம், விடம். ,, 13.

தேவாமிர்தத்தின் பெயர் :—சுதை, பீயூடம், மருந்து, அமரி, அமிருதம். ,, 5.

414. உணக்குப் பொருளின் பெயர் :—வற்றல். ,, 1.

துவையலின் பெயர் :—கசரி, சம்மந்தி, துவையல். ,, 3.

வேவாதுசமைத்தகறியின் பெயர் :—பச்சடி. ,, 1.

பேய்த்தேரின் பெயர் :—மசரதம், பொய்த்தேர், மரிமரீசிகை, பேய்த்தேர், வெண்டேர், கானல், பாழ்த்தேர். ,, 7.

இயற்கைப் பொருள் வர்க்க முற்றும்.

(பி - ம்) 1. விகுணி.

அஃறிணை யுயிரில்பொருட் படலம்.

2. செயற்கைப் பொருள் வர்க்கம்.

415. கொய்நவியந் தண்ணம்பா லங்குளிர்க ணிச்சிபர
செய்மழுக்கா ளங்கழுமுள் மூவிலைவேல்—பெய்சூலஞ்
சூழ்பருதி நேமி சுதெரிசன மெஃகம்வளை
யாழி திகிரிசக்க ரம். (க)

416. ஞாங்கர்சத்தி யெஃகயிலு டம்பிடிவேல் நாட்டமசி
[1]தாங்குவணி மட்டா யுதங்கண்டம்—வாங்கேதி
நாந்தகங் கண்டகங்கோ ணங்கட்கந் தூவத்தி
வாய்ந்தவசி வஞ்சநவிர் வாள். (உ)

417. கத்திகர வாளமும்வாட் காம்வே தினங்கர
பத்திரமீர் வாளுடைவாட் சுரிகை—வைத்த
குறும்பிடி யாமரிவாள் புள்ளங் கொடுவா
ளிறுங்குயமா யீட்டிவிட் டேறே. (௩)

---

415. மழுவின் பெயர் :—நவியம், தண்ணம், பாலம், குளிர், கணிச்சி, பரசு, மழு. ஆ 7.

சூலத்தின் பெயர் :—காளம், கழுமுள், மூவிலைவேல், சூலம். ,, 4.

சக்கரத்தின் பெயர் :—பருதி, நேமி, சுதெரிசனம், எஃகம், வளை, ஆழி, திகிரி, சக்கரம். ,, 8.

416. வேலின் பெயர் :—ஞாங்கர், சத்தி, எஃகு, அயில், உடம்பிடி, வேல். ,, 6.

416-417. வாளின் பெயர் :—நாட்டம், அசி, உவணி, மட்டாயுதம், கண்டம், ஏதி, நாந்தகம், கண்டகம், கோணம், கட்கம், தூவத்தி, வசி, வஞ்சம், நவிர், வாள், கத்தி, கரவாளம். ,, 17.

417. ஈர்வாளின் பெயர் :—வேதினம், கரபத்திரம், ஈர்வாள். ,, 3.

உடைவாளின் பெயர் :—உடைவாள், சுரிகை, குறும்பிடி. ,, 3.

அரிவாளின் பெயர் :—அரிவாள், புள்ளம், கொடுவாள், குயம். ,, 4.

ஈட்டியின் பெயர் :—ஈட்டி, விட்டேறு. ,, 2.

(பி - ம்) 1. தாங்குவளி.

418. கழுமுட் [1]கழுப்பரிமு கங்கணைய மென்ப
தெழுவாம் படைவட்டம் பாரா—வளையமா
மெய்பீலி தண்டுபிண்டி பால மிருப்புமுட்குங்
கைவேற்கு மாங்கப்ப ணம். (ச)

419. தறிகை கணிச்சியுளி தட்டைதழல் கிள்ளை
கறிகோல் குணில்கோல் கதைதண்—டெறுழ்தடியாந்
தோமரங்குந் தஞ்சவளஞ் சொற்குளிர்கு ணிற்பவணை
காம ரொடிசில் கவண். (ரு)

420. ஊசியின்பேர் சூசியூ சித்துளைப்பேர் பாசநா
ராசஞ் சலாகையெழுத் தாணிகண்ட—மூசியுமாம்
அச்சின் வயிர மசனி சததோடி
வச்சிரஞ்சம் பங்குலிச மாம். (சா)

418. கழுவின் பேயர்:—கழுமுள், கழு.	ஆ	2.
எழுவின் பேயர்:—பரிமுகம், கணையம், எழு.	,,	3.
படைவட்டத்தின் பேயர்:—படைவட்டம், பாராவளையம்.	,,	2.
பிண்டிபாலத்தின் பேயர்:—பீலி, தண்டு, பிண்டிபாலம்.	,,	3.
இருப்புமுள்ளுக்கும் கைவேலுக்கும் பேயர்:—கப்பணம்.	,,	1.
419. உளியின் பேயர்:—தறிகை, கணிச்சி, உளி.	,,	3.
கிளிகடிகோலின் பேயர்:—தட்டை, தழல், கிள்ளை கறிகோல்.	,,	3.
தடியின் பேயர்:—குணில், கோல், கதை, தண்டு, எறுழ், தடி.	,,	6.
தோமரத்தின் பேயர்:—தோமரம், குந்தம், சவளம்.	,,	3.
கவணின் பேயர்:—குளிர், குணில், பவணை, ஒடிசில், கவண்.	,,	5.
420. ஊசியின் பேயர்:—ஊசி, சூசி.	,,	2.
ஊசித்துளையின் பேயர்:—ஊசித்துளை, பாசம்.	,,	2.
நாராசத்தின் பேயர்:—நாராசம், சலாகை.	,,	2.
எழுத்தாணியின் பேயர்:—எழுத்தாணி, கண்டம், ஊசி.	,,	3.
குலிசத்தின் பேயர்:—வயிரம், அசனி, சததோடி, வச்சிரம், சம்பம், குலிசம்.	,,	6.

(பி - ம்) 1. கழுப்பரி ?

421. கவியங் குடாரங்கோ டாரியாங் கன்னஞ்
சுவர்கனை யிரும்பாந் துரோட்டி—பவிர்தோட்டி
கோணமங்கு சந்தான்[1] குளிர்முலை மூக்கரிவாள்
காணெழுது கோல்துகிலி கை. (எ)

422. கொட்டாமண் வெட்டிகொழுக் கோள்கூடஞ் சம்மட்டி
பட்டடையின் பேரடையாம் பற்றிரும்பு—கட்டுபொறி
யள்ளா முருடுகுற டாக்துவக்கி டங்கணியே
விள்ளுதொடர் சங்கிலியா மே. (அ)

423. கார்முகங்கான் டீபஞ்சா பஞ்சிலைசிங் காணிசிந்து
வாரங் கொடுமரந்து ரோணமுனி—கூர்தடிகோ
தண்டஞ் சராசனம்வே ணுத்தனுவில் லாஞ்சார்ங்கம்
விண்டுவிற்பி னாகமரன் வில். (கூ)

---

421. கோடாரியின் பெயர்:—கவியம், குடாரம், கோடாரி. ஆ 3.
சுவர்கனை யிரும்பின் பெயர்:—கன்னம், சுவர்கனை யிரும்பு. ,, 2.
துரோட்டியின் பெயர்:—துரோட்டி, தோட்டி, கோணம், அங்குசம். ,, 4.
முலை மூக்கரிவாளின் பெயர்:—குளிர், முலை மூக்கரிவாள். ,, 2.
எழுதுகோலின் பெயர்:—எழுதுகோல், துகிலிகை. ,, 2.
422. மண்வெட்டியின் பெயர்:—கொட்டு, மண்வெட்டி. ,, 2.
கொழுவின் பெயர்:—கொழு, கோள். ,, 2.
கூடத்தின் பெயர்:—கூடம், சம்மட்டி. ,, 2.
பட்டடையின் பெயர்:—பட்டடை, அடை. ,, 2.
பற்றிரும்பின் பெயர்:—பற்றிரும்பு, பொறி, அள்ளு. ,, 3.
குறட்டின் பெயர்:—முருடு, குறடு. ,, 2.
சங்கிலியின் பெயர்:—துவக்கு, இடங்கணி, தொடர், சங்கிலி. ,, 4.
423. வில்லின் பெயர்:—கார்முகம், காண்டீபம், சாபம், சிலை, சிங்காணி, சிந்துவாரம், கொடுமரம், துரோணம், முனி, தடி, கோதண்டம், சராசனம், வேணு, தனு, வில். ,, 15.
விட்டுணு வில்லின் பெயர்:—சார்ங்கம். ,, 1.
சிவன் வில்லின் பெயர்:—பினாகம். ,, 1.

(பி - ம்) 1. குளிரிலை?

424. நாரிதொடர் சிஞ்சினிந ரம்பாவம் பூட்டுவடம்
பூரிகுணை நாணுமம் புக்கூடு—சேராவ
நாழிகையா வந்தூணி நற்குதைப்பேர் குப்பிபுங்க
நீள்விற்கு தைகுலையென் னே. (ம)

425. தோணிசர மாசுகமு ரோபந் தொடைகதிரம்
பாணம்விசி கஞ்சாய கம்பகழி—காண்வாளி
பத்திரமேப் பூதைபுங்கம் பல்லங்கோ மாற்கணங்கோ
லத்திரஞ்சி லீமுகம்வண் டம்பு. (மக)

426. அம்புக்கட் டுப்புதை[1]பு ழுக்காமொட் டம்புதண்டம்
அம்பீர்க் குடுசிறகு காம்பாங்கட்—டும்பாசம்
பற்றுக்கை சத்திரம்வி டாப்படைவி டும்படையே
யத்திரங்கைக் கட்டுறைகோ தை. (மஉ)

---

424. நாணின் பெயர்:—நாரி, தொடர், சிஞ்சினி, நரம்பு, ஆவம், பூட்டுவடம், பூரி, குணம், நாண். ஆக 9.

அம்புக்கூட்டின் பெயர்:—அம்புக்கூடு, ஆவநாழிகை, ஆவம், தூணி. ,, 4.

அம்புக்குதையின் பெயர்:—குதை, குப்பி, புங்கம். ,, 3.

விற்குதையின் பெயர்:—விற்குதை, குலை. ,, 2.

425. அம்பின் பெயர்:—தோணி, சரம், ஆசுகம், உரோபம், தொடை, கதிரம், பாணம், விசிகம், சாயகம், பகழி, வாளி, பத்திரம், ஏ, பூதை, புங்கம், பல்லம், கோ, மார்கணம், கோல், அத்திரம், சிலீமுகம், வண்டு, அம்பு. ,, 23.

426. அம்புக்கட்டின் பெயர்:—அம்புக்கட்டு, புதை, புழுக்கு. ,, 3.

மொட்டம்பின் பெயர்:—மொட்டம்பு, உதண்டம். ,, 2.

அம்பீர்க்கின் பெயர்:—அம்பீர்க்கு, உடு. ,, 2.

அம்புச் சிறகின் பெயர்:—அம்புச்சிறகு, காம்பு. ,, 2.

கட்டும் பாசத்தின் பெயர்:—பற்றுக்கை. ,, 1.

விடாப்படையின் பெயர்:—சத்திரம், விடாப்படை. ,, 2.

விடும்படையின் பெயர்—விடும்படை, அத்திரம். ,, 2.

கைக்கட்டுறையின் பெயர்:—கைக்கட்டுறை, கோதை. ,, 2.

(பி - ம்.) 1. புழுகா ?

427. ஆயுதப்பொ துக்கருவி தானைபடை யேதிதுப்பாம்
[1]பாய்தடறு புட்டில் படையுறையாங்—காய்கூர்மை
வையயில்பூ வெஃகுவடி வீள்வெள் வசி[2]நிசியே
யெய்திக் கணைமுனையின் பேர். (௰௩)

428. ஆசரணஞ் சாலிகைச டாரிபரங் கச்சைகண்டங்
காசில்பரு மந்தளமெய்க் காங்கவசம்—கோசகமே
சாத்துஞ் சிரகங்[3] தலைத்திரா ணம்புருடர்
வேய்த்தபதப் பூண்கழலா மே. (௰௪)

429. தட்டு[4]வட்டம் வேதிகைதோல் தண்டைகடஞ் சேடகந்த
கட்டம் பரிசைபல கைகிடுகு—வட்டணமுங்
கேடகமாஞ் சட்டங் கிடுகின்பே ராமுருகு
கோடிகம்பூத் தட்டின்பேர் கூறு. (௰௫)

---

427. ஆயுதப் பொதுப் பெயர்:—ஆயுதம், கருவி, தானை, படை, எதி, துப்பு. ஆக 6.

படையுறையின் பெயர்:—தடறு, புட்டில், படையுறை. ,, 3.

கூர்மையின் பெயர்:—கூர்மை, வை, அயில், பூ, எஃகு, வடி, வள், வெள், வசி, நிசி, திக்கணம், முனை. ,, 12.

428. மெய்க்கவசத்தின் பெயர்:—ஆசு, அரணம், சாலிகை, சடாரி, பரம், கச்சை, கண்டம், பருமம், தளம், கவசம். ,, 10.

தலைத்திராணத்தின் பெயர்:—கோசகம், சிரகம், தலைத்திராணம். ,, 3.

புருடர் பதப்பூணின் பெயர்:—கழல். ,, 1.

429. கேடகத்தின் பெயர்:—தட்டு, வட்டம், வேதிகை, தோல், தண்டை, கடம், சேடகம், தகட்டம், பரிசை, பலகை, கிடுகு, வட்டணம், கேடகம். ,, 13.

கிடுகின் பெயர்:—சட்டம், கிடுகு. ,, 2.

பூத்தட்டின் பெயர்:—முருகு, கோடிகம், பூத்தட்டு. ,, 3.

(பி - ம்.) 1. பாய்கடறு. 2. நசியே. 3. தலைக்கிராணம். 4. வடம்.

430. வெம்புனைசி ருங்கலைவி லங்குசிக ளந்தளையாங்
கொம்பிரலை யாம்பல்வயிர் கோடமா—நன்பரணி
கோய்சிலா வட்டஞ்சா ணைக்கல்குழாய் தண்டாரை
பாய்கந்து கங்[1]குதமும் பந்து. (௰௬)

431. சூடிகைகி ரீடமகு டஞ்சுடிகை மோலிமுடி
கோடகந்தா மம்பதுமங் கிம்புரியே—நீடு
மகுட முடியுறுப்பம் மாலை கரோடி
திகழ்தெய்வ வுத்தி திரு. (௰௭)

432. தொய்யகந்த லைப்பாளை தொங்கலுத்தி பிஞ்ஞகமே
செய்தலைக்கோ லஞ்சே கரமுமாம்—பெய்நுதற்பூண்
சுட்டிலம்ப கம்புல் லகமாஞ் சுடிகைசுட்டி
நாட்டுமரை ஞாணிரத னம். (௰௮)

---

430. விலங்கின் பெயர்:—புனை, சிருங்கலை, விலங்கு, சிகளம், தளை. ஆ 5.
கொம்பின் பெயர்:—கொம்பு, இரலை, ஆம்பல், வயிர், கோடு. ,, 5.
பரணியின் பெயர்:—பரணி, கோய். ,, 2.
சாணைக்கல்லின் பெயர்:—சிலாவட்டம், சாணைக்கல். ,, 2.
குழாயின் பெயர்:—குழாய், தண்டு. ,, 2.
பாயின் பெயர்:—ஆரை, பாய். ,, 2.
பந்தின் பெயர்:—கந்துகம், குதம், பந்து. ,, 3.
431. முடியின் பெயர்:—சூடிகை, கிரீடம், மகுடம், சுடிகை, மோலி, முடி. ,, 6.
முடியுறுப்பின் பெயர்:—கோடகம், தாமம், பதுமம், கிம்புரி, மகுடம். ,, 5.
முடிமாலையின் பெயர்:—முடிமாலை, கரோடி. ,, 2.
திருவின் பெயர்:—தெய்வவுத்தி, திரு. ,, 2.
432. தலைப்பாளையின் பெயர்:—தொய்யகம், தலைப்பாளை. ,, 2.
தலைக்கோலத்தின் பெயர்:—தொங்கல், உத்தி, பிஞ்ஞகம், தலைக்கோலம், சேகரம். ,, 5.
நுதற்பூணின் பெயர்:—நுதற்பூண், சுட்டு, இலம்பகம், புல்லகம். ,, 4.
சுட்டியின் பெயர்:—சுடிகை, சுட்டி. ,, 2.
அரைஞாணின் பெயர்:—அரைஞாண், இரதனம். ,, 2.

(பி - ம்.) 1. குத்தம்.

433. எழ்கோவை மேகலையெண் கோவைகலா பங்காஞ்சி
தாம்பரும மீரொன்பசன் றாமமே—சூழ்பதின
றெஞ்சா விரிசிகைநா லெண்கோவை தோரைகலா
பஞ்சரிம ணிப்பேர் பகர். (யகூ)

434. அரியகங்கு டச்சூ லரவ ஞெகிழி
பரிபுர நூபுரஞ்சி லம்பாம்—பரலரியாம்
பாதகட கம்பாட கஞ்சதங்கை கிண்கிணியாம்
பாதசரம் பாதசா லம். (உய)

435. வீசம்விரற் பூணாழி மோதிரமி லச்சினையு
மாகுஞ் செவிப்பூக்கன் [1]னுவதஞ்சங்—தோய்குணுக்குக்
கம்பியுடன் வல்லிகைக டிப்பிணையுங் காதணிப்பேர்
வம்பிலரைப் பட்டிகைம ணு. (உக)

---

433. எழ்கோவையின் பெயர்:—மேகலை. ஆ. 1.
எண்கோவையின் பெயர்:—கலாபம், காஞ்சி. ,, 2.
பதினெண்கோவையின் பெயர்:—பருமம். ,, 1.
பதினறுகோவையின் பெயர் :—தாமம். ,, 1.
முப்பத்திரண்டு கோவையின் பெயர்:—விரிசிகை. ,, 1.
சரிமணிப் பெயர்:—தோரை, கலாபம், சரிமணி. ,, 3.

434. சிலம்பின் பெயர் :—அரியகம், குடச்சூல், அரவம், ஞெகிழி, பரிபுரம், நூபுரம், சிலம்பு. ,, 7.
சிலம்பினரியின் பெயர்:—பரல், அரி. ,, 2.
பாடகத்தின் பெயர் :—பாதகடகம், பாடகம். ,, 2.
சதங்கையின் பெயர் :—சதங்கை, கிண்கிணி. ,, 2.
பாதசரத்தின் பெயர் :—பாதசரம், பாதசாலம். ,, 2.

435. மோதிரத்தின் பெயர் :—வீசம், விரற்பூண், ஆழி, மோதிரம், இலச்சினை. ,, 5.
செவிப்பூவின் பெயர் :—செவிப்பூ, கன்னுவதஞ்சம். ,, 2.
காதணியின் பெயர் :—குணுக்கு, கம்பி, வல்லிகை, கடிப்பிணை. ,, 4.
அரைப்பட்டிகையின் பெயர் :—அரைப்பட்டிகை, மணு. ,, 2.

(பி - ம்.) 1. னுவதங்கம்.

436. சூடகஞ் சங்குகன்று வண்டு தொடிபிடிகஞ்
சாடுகுரு கேழும்வளை தாடங்கந்—தோடுகுழை
குண்டலங்கே யூரமங்க தந்தோள் வளையாரங்
கண்டிகைம தாணிபதக் கம். (உஉ)

437. கடகப்பேர் கண்டிகை கங்கணங்க டைப்பூண்
மடைகயிலாந் தாம மணியின்—வடஞ்சரங்காழ்
ஆரமுமாங் கற்க ளழுத்துகுழி கேவணமாஞ்
சார்புறும்பூ ணூலுபவீ தம். (உங)

438. ஆபரணம் பூடணம்பூ ணாரமணி பண்டமிழை
மாபணிக லன்கணியே வள்ளிநகை—சேர்வயிரந்
தாங்கிபூண் கோளகையுங் கிம்புரியு மாந்தாலி
யோங்குநாண் மங்கிலிய மோது. (உச)

---

436. கைவளையின் பெயர் :—சூடகம், சங்கு, கன்று, வண்டு, தொடி, பிடிகம், குருகு, வளை. ஆ 8.

தோட்டின் பெயர் :—தாடங்கம், தோடு. ,, 2.

குண்டலத்தின் பெயர் :—குழை, குண்டலம். ,, 2.

தோள்வளையின் பெயர் :—கேயூரம், அங்கதம், தோள்வளை. ,, 3.

பதக்கத்தின் பெயர் :—ஆரம், கண்டிகை, மதாணி, பதக்கம். ,, 4.

437. கடகத்தின் பெயர் :—கடகம், கண்டிகை, கங்கணம். ,, 3.

கடைப்பூணின் பெயர் :—கடைப்பூண், மடை, கயில். ,, 3.

மணிவடத்தின் பெயர் :—தாமம், மணிவடம், சரம், காழ், ஆரம். ,, 5.

கற்களழுத்துங் குழியின் பெயர்:—கேவணம். ,, 1.

பூணூலின் பெயர் :—பூணூல், உபவீதம். ,, 2.

438. ஆபரணப் பொதுப் பெயர் :—ஆபரணம், பூடணம், பூண், ஆரம், அணி, பண்டம், இழை, பணி, கலன், கணி, வள்ளி, நகை. ,, 12.

பூணின் பெயர் :—வயிரம், தாங்கி, பூண், கோளகை, கிம்புரி. ,, 5.

தாலியின் பெயர் :—தாலி, நாண், மங்கிலியம். ,, 3.

439. [1]வட்டில்சிக்கங் கின்னங்கோ ரங்கடிகை வள்ளம்வட்டில்
தட்டந்தா லம்பா சனந்தளிகை—தொட்டுண்
கலமாந் தவியகப்பை கான்சட் டுவப்பேர்
திலகமாம் பேழைமஞ்சி கை. (௨௫)

440. சேகண்டி சேண்டி யெறிமணிசின் னம்பீலி
காகளங்கா ளந்தாளம் பாண்டில்கஞ்ச—மாகுமிவை
கைமணிய டிக்குமணி கண்டை பரந்தவட்டக்
கைமணியின் பேர்படலி கை. (௨௬)

441. பீடிகைது[2] மானங்கான் டங்கண்டி கைகடிப்பங்
கோடிகம்பூண் கொள்கலனுங் கூடையிறை—கோடிகமே
கெண்டி கடபமுமாங் கெழ்க்கரண்ட கங்கரகங்
குண்டிகைக மண்டலப்பேர் கூட்டு. (௨௭)

---

439. கின்னத்தின் பெயர் :—வட்டில், சிக்கம், கின்னம், கோரம், கடிகை, வள்ளம். ஆ 6.
உண்கலத்தின் பெயர் :—வட்டில், தட்டம், தாலம், பாசனம், தளிகை, உண்கலம். ,, 6.
அகப்பையின் பெயர் :—தவி, அகப்பை. ,, 2.
சட்டுவத்தின் பெயர் :—சட்டுவம், திலகம். ,, 2.
பேழையின் பெயர் :—பேழை, மஞ்சிகை. ,, 2.
440. சேகண்டியின் பெயர் :—சேகண்டி, சேண்டி, எறிமணி. ,, 3.
சின்னத்தின் பெயர் :—சின்னம், பீலி. ,, 2.
எக்காளத்தின் பெயர் :—காகளம், காளம். ,, 2.
கைமணியின் பெயர் :—தாளம், பாண்டில், கஞ்சம், கைமணி. ,, 4.
அடிக்குமணியின் பெயர் :—அடிக்குமணி, கண்டை. ,, 2.
பரந்த வட்டக்கைமணியின் பெயர் :—பரந்த வட்டக்கைமணி, படலிகை. ,, 2.
441. பூண்கோள் கலத்தின் பெயர் :—பீடிகை, துமாணம், காண்டம், கண்டிகை, கடிப்பம், கோடிகம், பூண்கொள்கலம். ,, 7.
கூடையின் பெயர் :—கூடை, இறை. ,, 2.
கெண்டியின் பெயர் :—கோடிகம், கெண்டி, கடபம். ,, 3.
கமண்டலத்தின் பெயர் :—கரண்டகம், கரகம், குண்டிகை, கமண்டலம். ,, 4.

(பி - ம்) 1. பட்டில். 2. மானம் ?

442. தர்ப்பண மாடியொளி வட்ட [1]முகிர்தமத்தம்
கைப்படி மக்கலங் கஞ்சனம்—நற்புளகங்
கண்ணடி யாங்கஞ் சனைகலசப் பானையா
நண்ணம் மனையம்மா னை. (உஅ)

443. தாலமுக்கங் கால்செய்வட்டந் தன்விருந்த மாலவட்டம்
பீலிசாந் தாற்றி விசிறியுஞ்சிற்—றாலவட்டம்
வீசனமு மாமோரை மின்னரா டுங்கலனு
மூசலுஞ்ச லூஞ்ச லுரை. (உகூ)

444. தொங்கல்பிச்ச மாதபத்ரஞ் சத்ரங் கவிகைகுடை
கங்கஞ்சிக் கஞ்சிப்பாங் கச்சமம்ப—ணங்குளகந்
தூம்புகால் நாழிபடி குஞ்சந்தூக் குச்சிமிலி
யோம்புசிதர் சிக்க முறி. (௩0)

---

442. கண்ணடியின் பெயர்:—தர்ப்பணம், ஆடி, ஒளிவட்டம், முகிர்தம், அத்தம், படிமக்கலம், கஞ்சனம், புளகம், கண்ணடி. ஆ 9.
கலசப்பானையின் பெயர்:—கஞ்சனை, கலசப்பானை. ,, 2.
அம்மானையின் பெயர்:—அம்மனை, அம்மானை. ,, 2.
443. ஆலவட்டத்தின் பெயர்:—தாலம், உக்கம், கால் செய் வட்டம், விருந்தம், ஆலவட்டம். ,, 5.
சிற்றாலவட்டத்தின் பெயர்:—பீலி, சாந்தாற்றி, விசிறி, சிற்றாலவட்டம், வீசனம். ,, 5.
பெண்கள் விளையாட்டுப் பண்டத்தின் பெயர்:—ஓரை. ,, 1.
ஊஞ்சலின் பெயர்:—ஊசல், உஞ்சல், ஊஞ்சல். ,, 3.
444. குடையின் பெயர்:—தொங்கல், பிச்சம், ஆதபத்திரம், சத்திரம், கவிகை, குடை. ,, 6.
சிப்பின் பெயர்:—கங்கம், சிக்கம், சிப்பு. ,, 3.
அளக்குங்காலின் பெயர்:—கச்சம், அம்பணம், குளகம், தூம்பு, கால். ,, 5.
நாழியின் பெயர்:—நாழி, படி, குஞ்சம். 3.
உறியின் பெயர்:—தூக்கு, சிமிலி, சிதர், சிக்கம், உறி. ,, 5.

(பி - ம்) 1. முகுரத. முகுரமத்தம் ?

445. சிங்கா தனம்பத்தி ராசனமாம் பாரிபரி
யங்கமஞ்சம் பாண்டில்கட்டி லாந்தளிமம்—பொங்குபஞ்சி
மெத்தையணை யாம்பீடம் விட்டாம் பீடிகைபே
சுத்துந் தவிசா சனம். (கக)

446. கொட்டை[1]யுப தானந் தலையணையாந் கூர்தவிடு
முட்டைமுடை நொய்நொறுங்கா மூழிவாய்—பெட்டியா
மஞ்சிகமு மாந்துடைப்பஞ்[2]சோதினிமா றுஞ்சுருக்குச்
செஞ்சுருவை நெய்த்துடுப்ப தே. (கஉ)

447. [3]படியகங்க ளாஞ்சிபடிக் கந்திப முட்டி
தடவிந் தளம்பழுதை தாமம்—வடம்பாசந்
தாம்பிரச்சக் கம்புரிநாண் கச்சைகயி றுமிழைதந்
தாம்பனுவல் சூத்திரமு நூல். (கங)

445. சிங்காதனத்தின் பெயர்:—சிங்காதனம், பத்திராசனம். ஆ 2.

கட்டிலின் பெயர்:—பாரி, பரியங்கம், மஞ்சம், பாண்டில், கட்டில். ஆ 5.

மெத்தையின் பெயர்:—தளிமம், பஞ்சி, மெத்தை, அணை. ,, 4.

ஆசனத்தின் பெயர்:—பீடம், விட்டரம், பீடிகை, தவிசு, ஆசனம். ,, 5.

446. தலையணையின் பெயர்:—கொட்டை, உபதானம், தலையணை. ,, 3.

தவிட்டின் பெயர்:—தவிடு, முட்டை, முடை. ,, 3.

நொறுங்கின் பெயர்:—நொய், நொறுங்கு. ,, 2.

பெட்டியின் பெயர்:—மூழிவாய், பெட்டி, மஞ்சிகம். ,, 3.

மாற்றின் பெயர்:—துடைப்பம், சோதினி, மாறு. ,, 3.

நெய்த்துடுப்பின் பெயர்:—சுருக்கு, சுருவை, நெய்த்துடுப்பு. ,, 3.

447. படிக்கத்தின் பெயர்:—படியகம், காளாஞ்சி, படிக்கம். ,, 3.

தீபமுட்டியின் பெயர்:—தீபமுட்டி, தடவு, இந்தளம். ,, 3.

கயிற்றின் பெயர்:—பழுதை, தாமம், வடம், பாசம், தாம்பு, இரச்சு, அக்கம், புரி, நாண், கச்சை, கயிறு. ,, 11.

நூலின் பெயர்:—இழை, தந்து, பனுவல், சூத்திரம், நூல். ,, 5.

(பி - ம்) 1. உபத்தானம். 2. சோதனி. 3. படியகங்கா.

448. சாலம்வலை யவ்வடமா சாமதலை கந்துநிலை
காலெழுத்தா ணுத்தறி தூண் குற்றிகம்ப—மால்யானைத்
தூணுந் தயிர்கடையுந் தூணும்வெளில் யூபமகத்
தூண்போ திகைகுறிய தூண். (௫௪)

449. அம்மியரை கற்குழவி பற்றியரைக் குங்கல்குழி
யம்மிகல வங்குழிகல் லாமூடை—பம்முகுதை
மூட்டை பொதியலொன்றிற் கட்டியே தூக்குகின்ற
மூட்டையு டோளாய மாம். (௫௫)

450. உலக்கைமுச லந்தடியு ரற்கறையு லூக
மெலிப்பில்திட்டை மூன்றும் வெளிசம்—வலித்தூண்டி
லேணியொடு சேணி[1] யிறவையா மால்பேகண்
ணேணி பிழாவிடா வே. (௫௬)

---

448. வலையின் பெயர்:—சாலம், வலை. ஆ. 2.
வலைவடத்தின் பெயர்:—வலைவடம், மாசு. ,, 2.
தூணின் பெயர்:—மதலை, கந்து, நிலை, கால், எழு, தாணு, தறி, தூண், குற்றி, கம்பம். ஆ. 10.
ஆனைகட்டுந் தூணிற்கும் தயிர்கடையுந் தூணிற்கும் பெயர்:—வெளில். ,, 1.
மகத்தூணின் பெயர்:— யூபம். ,, 1.
குறியதூணின் பெயர்:—போதிகை, குறிய தூண். ,, 2.
449. அம்மியின் பெயர் :—அம்மி, அரைகல். ,, 2
பற்றியரைக்குங் கல்லின் பெயர் :—குழவி, பற்றியரைக் குங் கல். ,, 2.
குழியம்மியின் பெயர் :—குழியம்மி, கலவம், குழிகல் ,, 3.
குதையின் பெயர் :—மூடை, குதை. ,, 2.
பொதியலின் பெயர்:—மூட்டை, பொதியல். ,, 2.
கட்டித்தூக்கு மூட்டையின் பெயர்:—உடோளாயம். ,, 1.
450. உலக்கையின் பெயர் :—உலக்கை, முசலம், தடி. ,, 3.
உரலின் பெயர் :—உரல், கறை, உலூகம், திட்டை. ,, 4.
தூண்டிலின் பெயர் :—வெளிசம், தூண்டில். ,, 2.
ஏணியின் பெயர் :—ஏணி, சேணி, இறவை. ,, 3.
கண்ணேணியின் பெயர் :—மால்பு, கண்ணேணி. ,, 2.
பிளாவின் பெயர் :—பிழா, இடா. ,, 2.

(பி - ம்) 1. யிரவை, யிறைவை ?

451\. கோடிபஞ்சி தானைபடாங் கோடிகமி லக்கரம்பட்
டாடைகலை சம்படமா சாரமடி—சாடிபுட்டந்
தூசுடையு டுக்கைதுகில் குடிகம்வட் டஞ்சீரை
வாசங்க லிங்கமறு வை. (கூஎ)

452\. அம்பரங் கூறை[1] யிடை யல்வே டகம்வேத
கம்பரிவட் டங்காழ கங்கோசி—கம்புடவை
நீவியகா கம்பாரி நேத்திரம் பாளிதங்காம்
பாவல்வத்தி ரஞ்சீலை யாம். (கூஅ)

453\. உத்தரிக மேகாச முத்தரா சங்கமுல்லா
சத்தின்பே ரத்தவா ளம்வடகம்—பொத்தகமே
சித்திரப்ப டாநீவி கொய்சகமுன் றானைதொக்கை
கொத்தான போர்வைமீக் கோள். (கூகூ)

454\. வட்டுடைவார்ப் பட்டிகையே வம்பு[2]விசி கைகச்சாங்
கொட்டகுப்பா யங்காஞ் சுகம்[3]வரணஞ்—சட்டையங்கி
[4]கஞ்சுகமெய்ப் பையெழினி காஞ்ச [5]மவிடிகண்டங்
கஞ்சிகைதி ரைப்படாங் காண். (சO)

451-452\. சீலையின் பெயர் :—கோடி, பஞ்சி, தானை, படாம், கோடிகம், இலக்கரம், பட்டு, ஆடை, கலை, சம்படம், ஆசாரம், மடி, சாடி, புட்டம், தூசு, உடை, உடுக்கை, துகில், குடிகம், வட்டம், சீரை, வாசம், கலிங்கம், அறுவை.

அம்பரம், கூறை, இடையல், வேடகம், வேதகம், பரிவட்டம், காழகம், கோசிகம், புடவை, நீவியம், காகம், பாரி, நேத்திரம், பாளிதம், காம்பு, வத்திரம், சீலை. ஆக 41.

453\. உத்தரிகத்தின் பெயர் :—உத்தரிகம், ஏகாசம், உத்தரா சங்கம். „ 3.

உல்லாசத்தின் பெயர் :—உல்லாசம், அத்தவாளம், வடகம். „ 3.

சித்திரப் படாத்தின் பெயர்:—பொத்தகம், சித்திரப்படாம். „ 2.

கொய்சகத்தின் பெயர் :—நீவி, கொய்சகம். „ 2.

முன்றானையின் பெயர் :—முன்றானை, தொக்கை. „ 2.

போர்வையின் பெயர் :—போர்வை, மீக்கோள். „ 2.

454\. முலைக்கச்சின் பெயர் :—வட்டுடை, வார், பட்டிகை, வம்பு, விசிகை, கச்சு. „ 6.

அங்கியின் பெயர் :—குப்பாயம், காஞ்சுகம், வரணம், சட்டை, அங்கி, கஞ்சுகம், மெய்ப்பை. „ 7.

திரைச்சீலையின் பெயர் :—எழினி, காஞ்சம், அவிடி, கண்டம், கஞ்சிகை, திரைப்படாம். „ 6.

(பி - ம்) 1. மிடையல். 2. விணிகை. 3. வானஞ், பரணம். 4. கஞ்சகி. 5. மவடி.

*455.*கம்பலஞ் சிம்புளி கம்பளமேற் கட்டிவிதா
னம்படங்கு வானிகுஞ்ச நற்றலைப்பாம்—பம்பிறைஞ்சி
வற்கலை சீரை மரவுரிம யிர்ப்படாந்
தைக்கும்வயி [1]ரஞ்சூழி தான். (சக)

456. கத்திகைவி [2]லோதனந்தோ கையிடக்க யம்படங்கு
சத்திவிடங் கம்படம்ப தாகைகொடி—மெய்த்துவசம்
வானமிடால் கேதனமு மாஞ்சும்பு வாக்கிகுச்சா
மானமத்து [3]மூழிமூ ழை. (சஉ)

457. சேட்டைதட்டு முற்றின்முறஞ் சின்னஞ்சூர்ப் பஞ்சுளகாங்
[4]காட்டளிகி ழாராம்பி காராம்பி—பூட்டைபாம்
வார்துணிவட் கண்டம் வகிர்கடிகை துண்டமதா
மார்துணிசி தார்சிதவ லாம். (சங)

455. கம்பளத்தின் பெயர் :—கம்பலம், சிம்புளி, கம்பளம். ஆ 3.
மேற்கட்டியின் பெயர்:—மேற்கட்டி, விதானம், படங்கு, வானி. ,, 4.
குஞ்சத்தின் பெயர் :—குஞ்சம், தலைப்பு. ,, 2.
மரவுரியின் பெயர் :—இறைஞ்சி, வற்கலை, சீரை, மரவுரி. ,, 4.
மயிர்ப்படாத்தின் பெயர் :—மயிர்ப்படாம், வயிரம், சூழி. ,, 3.

456. கொடியின் பெயர் :—கத்திகை, விலோதனம், தோகை, இடக்கயம், படங்கு, சத்தி, விடங்கம், படம், பதாகை, கொடி, துவசம், வானம், இடால், கேதனம். ,, 14.

குச்சின் பெயர் :—சும்பு, வாக்கி, குச்சு. ,, 3.

மத்தின் பெயர் :—மத்து, மூழி, மூழை. ,, 3.

457. சுளகின் பெயர் :—சேட்டை, தட்டு, முற்றில், முறம், சின்னம், சூர்ப்பம், சுளகு. ,, 7.

பூட்டையின் பெயர் :—கிழார், ஆம்பி, காராம்பி, பூட்டை. ,, 4.

துண்டத்தின் பெயர் :—வார், துணி, வள், கண்டம், வகிர், கடிகை, துண்டம் ,, 7.

துணியின் பெயர் :—துணி, சிதார், சிதவல். ,, 3.

* இச்செய்யுள் ஒரு பிரதியிற் காணப்படவில்லை. (பி - ம்) 1. ரஞ்சுளி. 2. லோதனந்தே. 3. மூழி, மூழை யென்பன அகப்பையின் பெயர் (சூடா. நி.) 4. செகதின் பெயர் அளிகிளார் என்பதும் ஊழலேத்தினத்தின் பெயர் ஆம்பி காராம்பி பூட்டை யென்பதும் பழையவுரை.

458. [1]சொல்கவறு வல்கழங்கு[2]சூதாமா யஞ்தாயம்
வெல்சாரி நாயா மிதியடிபா—வல்கழலும்
பாதுகையக் கொட்டை[3]குடை பாதங்காப் புச்செருப்பாம்
பாய்துருத்தி யேசிவிறி பந்து. (சச)

459. கொல்லுலை மூக்குக் குருகுசிவை யத்துருத்தி
வல்லுதி[4]யத்திரியா மத்திகையே—நல்விளக்குத்
தண்டு கவுசிகமாஞ் சாடுருச்சா காடொழுகு
பண்டிவைய முஞ்சகடென் பார். (சரு)

460. பண்டியுளி ரும்பிருசு கந்தாம்பல் லக்[5]கணிதந்
தண்டிகையாக் தோளிகம்யா னஞ்சிவிகை—பொன்பள்ளி
மஞ்சிகையு மாமூர்தி வாகனம்வை யம்பாண்டில்
கஞ்சிகைதேர் பாடைவெள்ளில் காண். (சசு)

---

458. சூதின் பேயர்:—கவறு, வல், கழங்கு, சூது. ஆ. 4.
தாயத்தின் பேயர்:—ஆயம், தாயம். ,, 2.
சாரியின் பேயர்:—சாரி, நாய். ,, 2.
பாதுகையின் பேயர்:—மிதியடி, பாவல், கழல், பாதுகை. ,, 4.
பாதுகைக் கோட்டையின் பேயர்:—கொட்டை, குடை. ,, 2.
செருப்பின் பேயர்:—பாதங்காப்பு, செருப்பு. ,, 2.
சிவிறியின் பேயர்:—துருத்தி, சிவிறி, பந்து. ,, 3.
459. கோல்லுலைமூக்கின் பேயர்:—கொல்லுலைமூக்கு, குருகு, சிவை. ,, 3.
உலைத்துருத்தியின் பேயர்:—துருத்தி, உதி, அத்திரி. ,, 3.
விளக்குத்தண்டின் பேயர்:—மத்திகை, விளக்குத்தண்டு, கவுசிகம். ,, 3.
சகட்டின் பேயர்:—சாடு, உரு, சாகாடு, ஒழுகு, பண்டி, வையம், சகடு. ,, 7.
460. பண்டியுளிரும்பின் பேயர்:—பண்டியுளிரும்பு, இருசு, கந்து. ,, 3.
பல்லக்கின் பேயர்:—பல்லக்கு, அணிதம், தண்டிகை, ஆந்தோளிகம், யானம், சிவிகை, பள்ளி, மஞ்சிகை. ,, 8.
வாகனப் போதுப் பேயர்:—ஊர்தி, வாகனம், வையம், பாண்டில், கஞ்சிகை. ,, 5.
பாடையின் பேயர்:—தேர், பாடை, வெள்ளில். ,, 3.

(பி - ம்) 1. சொலை. 2. சூதாயந்தாயமாம். 3. கொடை. 4. யத்தரி. 5. கணிதக்.

461. தேரிரத மெந்த்ரமரி செந்தனம்வை யங்குயவா
மார்கதிரா நேமிசில்லி யாழியுருள்—பாரியங்கா
லுந்தி பருதி யுதரிவண்டில் தேர்ச்சுற்று
முந்துகிடு காங்கூம்பு மொட்டு. (சஎ)

462. நாப்பணுந்தட் டுந்தேர் நடுக்கொடிஞ்சி கூவிரந்தேர்ப்
பாப்பெயராந் தோட்டிகபா டம்புதவு—காப்பாரி
வாரிகத[1] வாந்தாழ்சிப் புக்கடிப்பாம் வட்டிகையே
சிரோவி யஞ்சித்தி ரம். (சஅ)

463. ஏடு சுவடியிலே கம்புத் தகமாம்வெள்
ளேடுடன லேகமெழு தாச்சுவடி—யேட தின்மேற்
பட்டைகம்பை யென்பர்பசுத் தீண்டுகுற்றி கண்டியந்
கட்டசைது லாந்துலைதூக் காம். (சகூ)

---

461. தேரின் பெயர்:—தேர், இரதம், எந்திரம், அரி, செந்தனம், வையம், குயவு. ஆ 7.

தேர்க்கதிரின் பெயர்:—ஆர், கதிர். ,, 2.

தேர்வண்டிலின் பெயர்:—நேமி, சில்லி, ஆழி, உருள், பாரியம், கால், உந்தி, பருதி, உதரி, வண்டில். ,, 10.

தேர்ச்சுற்றின் பெயர்:—தேர்ச்சுற்று, கிடுகு. ,, 2.

தேர்க்கூம்பின் பெயர்:—கூம்பு, மொட்டு. ,, 2.

462. தேர்த்தட்டின் பெயர்:—நாப்பண், தட்டு, தேர்நடு. ,, 3.

தேர்ப்பாரின் பெயர்:—கொடிஞ்சி, கூவிரம், தேர்ப்பா. ,, 3.

கதவின் பெயர்:—தோட்டி, கபாடம், புதவு, காப்பு, ஆரி, வாரி, கதவு. ,, 7.

தாழின் பெயர்:—தாழ், சீப்பு, கடிப்பு. ,, 3.

சித்திரத்தின் பெயர்:—வட்டிகை, ஓவியம், சித்திரம். ,, 3.

463. ஏட்டின் பெயர்:—ஏடு, சுவடி, இலேகம், புத்தகம். ,, 4.

எழுதாச் சுவடியின் பெயர்:—வெள்ளேடு, அலேகம், எழுதாச்சுவடி. ,, 3.

ஏட்டுப்பட்டையின் பெயர்:—ஏட்டுப்பட்டை, கம்பை. ,, 2.

பசுத்தீண்டு குற்றியின் பெயர்:—பசுத்தீண்டு குற்றி, கண்டியம். ,, 2.

அசையின் பெயர்:—அசை, துலாம், துலை, தூக்கு. ,, 4.

(பி - ம்) 1. வந்தாழ்சிப்.

464. வீணைகின்ன ரங்கருவி யாழ்விபஞ்சி கோடவதி
பேணுகலந் தண்டாம் பிரடைமுறுக்—காணியின்பேர்
மாடகமு மாம்வலிக்கட் டுத்திவவாம் வன்றயரி
நாடிகுரற் றந்திரிந ரம்பு. (௩௰)

465. பேரியாழ் செங்கோட்டி யாழ்பின் சகோடயாழ்
வார்மருத யாழ்நால் வகையாமாம்—வாரியுடன்
வங்கியமி சைக்குழலாம் வாத்தியமே ளம்பறைகொட்
டங்கோ டணைமுரசி யம். (௩௧)

466. தொண்டக மேதுடியே பம்பைகிணை சாபறைநேர்
கொண்டைந் திணைப்பறையாங் கூர்பணவந்—திண்டியா
மொந்தை பதலைதின்னை மோர்கட் பறைமுழவு
தந்தகுளிர் முட்டுமத்த ளம். (௩௨)

---

464. வீணையின் பேயர்:—வீணை, கின்னரம், கருவி, யாழ், விபஞ்சி, கோடவதி, கலம், தண்டு. ஆ 8.

முறுக்காணியின் பேயர்:—பிரடை, முறுக்காணி, மாடகம். ,, 3.

வலிக்கட்டின் பேயர்:—வலிக்கட்டு, திவவு. ,, 2.

தந்திரியின் பேயர்:—தயரி, நாடி, குரல், தந்திரி, நரம்பு. ,, 5.

465. நால்வகை யாழின் பேயர்:—பேரியாழ், செங்கோட்டி யாழ், சகோடயாழ், மருதயாழ். ,, 4.

இசைக்குழலின் பேயர்:—வாரி, வங்கியம், இசைக்குழல். ,, 3.

வாத்தியப் பொதுப் பேயர்:—வாத்தியம், மேளம், பறை, கொட்டு, கோடணை, முரசு, இயம். ,, 7.

466. குறிஞ்சிப்பறைப் பேயர்:—தொண்டகம். ,, 1.

பாலைப்பறைப் பேயர்:—துடி. ,, 1.

முல்லைப்பறைப் பேயர்:—பம்பை. ,, 1.

மருதப்பறைப் பேயர்:—கிணை. ,, 1.

நெய்தற்பறைப் பேயர்:—சாபறை. ,, 1.

திண்டியின் பேயர்:—பணவம், திண்டி. ,, 2.

ஓர்கட்பறையின் பேயர்:—மொந்தை, பதலை, தின்னம், ஓர்கட் பறை. ,, 4.

மத்தளத்தின் பேயர்:—முழவு, குளிர், முட்டு, மத்தளம். ,, 4.

467. தண்ணுமைநி சாளமாந் தட்டைகர டிப்பறையாந்
திண்ணிடக்கை யாமந் திரிகையா—நண்ணுநந்தி
பேரிகையுந் துந்துமியின் பேரா னகம்படகம்
சார்திமிலை சல்லரிப்பேர் தான். (௫௩)

468. குறியபறை யாகுளிகு டப்பறையே பன்றிப்
பறைதூ ரியமணப்ப றைப்பேர்—அறைதமரு
கந்துடியு டுக்கைகடிப் புக்குணிலா மண்பரிணை
மிந்திரண்டு மார்ச்சனையா மே. (௫௪)

469. பாதைவங்கம் பஃறியம்பி பாரதிச தாமதலை
போத மரக்கலநா வா[1]யான—மீதுகப்பல்
தோணியோ [2]டந்திமிலி தெப்ப மிதவைபுணை
காணும் படுவைபட்டி கை. (௫௫)

---

467. தண்ணுமையின் பெயர்:—தண்ணுமை, நிசாளம். ஆ 2.
கரடிப்பறையின் பெயர்:—தட்டை, கரடிப்பறை. ,, 2.
இடக்கையின் பெயர்:—இடக்கை, ஆமந்திரிகை. ,, 2.
பேரிகையின் பெயர்:—நந்தி, பேரிகை, துந்துமி. ,, 3.
படகத்தின் பெயர்:—ஆனகம், படகம். ,, 2.
திமிலையின் பெயர்:—திமிலை, சல்லரி. ,, 2.
468. குறியபறையின் பெயர்:—குறியபறை, ஆகுளி. ,, 2.
பன்றிப்பறையின் பெயர்:—குடப்பறை, பன்றிப்பறை. ,, 2.
மணப்பறையின் பெயர்:—தூரியம், மணப்பறை. ,, 2.
உடுக்கையின் பெயர்:—தமருகம், துடி, உடுக்கை. ,, 3.
கடிப்பின் பெயர்:—கடிப்பு, குணில். ,, 2.
மார்ச்சனையின் பெயர்:—மண், பரிணம், மார்ச்சனை. ,, 3.
469. கப்பலின் பெயர்:—பாதை, வங்கம், பஃறி, அம்பி, பாரதி, சதா, மதலை, போதம், மரக்கலம், நாவாய், யானம், கப்பல். ,, 12.
தோணியின் பெயர்:—தோணி, ஓடம், திமிலி. ,, 3.
தெப்பத்தின் பெயர்:—தெப்பம், மிதவை, புணை, படுவை, பட்டிகை. ,, 5.

(பி - ம்) 1. யாண. 2. திமில் ?

470. இம்மரக்க லப்பா யிதையாம் விசிப்பரியாஞ்
சும்மா டடை[1]சுடுவு டன்சுமடு—சும்மைசுமை
யேர்தொடுப்ப லம்படைவா ளின்கலனை நாஞ்சிலிவை
கூர்கலப்பை மேழியுமக் கூற்று. (நிசு)

471. செற்றைமயல் சோதனிது ரால்நரல்சிக் குக்காடாம்
பற்றுகலம் பாத்திரம்பாண் டப்பொதுப்பேர்—முற்றகளந்
தாழி தளம்பதலை சாடியாஞ்ச ராவமுட
னொள்சத் திகையு மகல். (நிஎ)

472. குடங்கர்குணந் தாலிகடங் கும்பங் கலச
மிடங்கர்குடம் பாண்டி லிடிஞ்சில்—சுடர்த்தகழி
சட்டி[2] விசளேகிடா ரந்தவிசு கொப்புரியா
கட்டிரக்கு மோடுகடி ஞை. (நிஅ)

---

470. மரக்கலப்பாயின் பெயர்:—மரக்கலப்பாய், இதை. ஆ 2.

விசிப்பின் பெயர்:—விசிப்பு, அரி. ,, 2.

சுமையின் பெயர்:—சும்மாடு, அடை, சுடுவு, சுமடு, சும்மை, சுமை. ,, 6.

கலப்பையின் பெயர்:—ஏர், தொடுப்பு, அலம், படை, வாள், கலனை, நாஞ்சில், கலப்பை, மேழி. ,, 9.

471. செற்றையின் பெயர்:—செற்றை, மயல், சோதனி, துரால், நரல், சிக்கு, காடு. ,, 7.

பாண்டப் பொதுப் பெயர்:—கலம், பாத்திரம், பாண்டம். ,, 3.

தாழியின் பெயர்:—அகளம், தாழி, தளம், பதலை, சாடி. ,, 5.

அகலின் பெயர்:—சராவம், சத்திகை, அகல். ,, 3.

472. குடத்தின் பெயர்:—குடங்கர், குணம், தாலி, கடம், கும்பம், கலசம், இடங்கர், குடம். ,, 8.

சுடர்த்தகழியின் பெயர்:—பாண்டில், இடிஞ்சில், சுடர்த்தகழி. ,, 3.

சட்டியின் பெயர்:—சட்டி, விசளே. ,, 2.

கிடாரத்தின் பெயர்:—கிடாரம், தவிசு, கொப்புரி. ,, 3.

இரக்தயோட்டின் பெயர்:—ஓடு, கடிஞை. ,, 2.

(பி - ம்) 1. சுடுபு. 2. விசனை.

473\. சிகரங்கன் னல்சிரகந் [1]தற்கரிநு வற்கரியு
மாகரக மந்தனித யிர்த்தாழி—பாய்குழிசி
[2]தாங்குறைக ரீரந் தடாமிடாப் பானைகுண்டம்
வான்குடுவைக் குங்குண்ட மாம். (௫௯)

474\. மொந்தைநீ ருண்கலனு லாமியுலை மூடிசெய்கூ
டுந்துகுயி லாயத் துடன்பஞ்ச—ரந்தான்புட்
கூடுகுடம் பைகட்சி கூண்டாங் குதிர்புகல்காற்
றூடி கதலிகறங் காம். (௬௰)

475\. தார்தெரியல் சுக்கைகண்ணி தாமமொலி யல்பிணைய
லாரம் படலையணி யல்சுருக்கை—சிரிலம்ப
கங்கத் திகைசிகழி கைகோதை மஞ்சரிய
லங்கல்தொடை தொங்கலுமா லை. (௬௧)

476\. வாகைவெற்றி மாலைவட்ட மாலையிண்டை யாந்தொடரே
யாகுஞ் சரம்வா சிகைபடலை—மோகச்
சிகழிகையாம் பள்ளித்தா மந்தேவர் பூசை
[3]மகிழ்காரீ யோட்டிகுஞ்ச மாம். (௬௨)

473\. கரகத்தின் பெயர்:—சிகரம், கன்னல், சிரகம், தற்கரி, நுவற்கரி, கரகம். ஆ 6.
தயிர்த்தாழியின் பெயர்:—மந்தனி, தயிர்த்தாழி. ,, 2.
மிடாவின் பெயர்:—குழிசி, உறை, கரீரம், தடா, மிடா. ,, 5.
பானையின் பெயர்:—பானை, குண்டம். ,, 2.
துடுவையின் பெயர்:—குடுவை, குண்டம். ,, 2.
474\. நீருண்கலனின் பெயர்:—மொந்தை, நீருண்கலன். ,, 2.
உலைமூடியின் பெயர்:—உலாமி, உலைமூடி. ,, 2.
செய்கூட்டின் பெயர்:—கூடு, குயிலாயம், பஞ்சரம். ,, 3.
புட்கூட்டின் பெயர்:—புட்கூடு, குடம்பை, கட்சி, கூண்டு. ,, 4.
குதிரின் பெயர்:—குதிர், புகல். ,, 2.
காற்றூடியின் பெயர்:—காற்றூடி, கதலி, கறங்கு. ,, 3.
475\. மாலையின் பெயர்:—தார், தெரியல், சுக்கை, கண்ணி, தாமம், ஒலியல், பிணையல், ஆரம், படலை, அணியல், சுருக்கை, இலம்பகம், கந்திகை, சிகழிகை, கோதை, மஞ்சரி, அலங்கல், தொடை, தொங்கல், மாலை. ,, 20.
476\. வெற்றிமாலையின் பெயர்:—வாகை, வெற்றிமாலை. ,, 2.
வட்டமாலையின் பெயர்:—வட்டமாலை, இண்டை. ,, 2.
தொடரின் பெயர்:—தொடர், சரம். ,, 2.
திருவாசிகையின் பெயர்:—வாசிகை, படலை, சிகழிகை. ,, 3.
தேவர்பூசைக்குரிய மாலையின் பெயர்:—பள்ளித்தாமம். ,, 1.
ஈயோட்டியின் பெயர்:—ஈயோட்டி, குஞ்சம், ,, 2.

செயற்கைப் பொருள் வர்க்க முற்றம்

(பி - ம்) 1. கர்க்கரியும் வீர்க்கரியு? 2. தாங்குரை. 3. மகிழ்தூரீ.

அஃறிணை யுயிரில்பொருட் படலம்.

3. இட வர்க்கம்.

477. வீடமிர்த முத்தி விபவருக்க மானந்த
நீடுசிவஞ் சித்தி நிருவாணங்—கூடுகதி
நின்மலஞ்சு காதீத ஞேயநித்தங் கைவலிய
மின்னும் பலமோக்க மே. (க)

478. விண்டுறக்க நாகம்விமா னம்விசும்பு மேலுலக
மொண்டான மேபொன் னுலகுகற்ப—மண்டுவணை
யும்பர்சுவ லோக முயர்நிலைவா னாடுசுவர்க்
கம்புவனந் தேவருல கம். (உ)

479. நாகலோ கம்பவனை நற்பாத லம்பிலம
தோகதிபா தாளஞ் சுவப்பிரமே—வேகவிருள்
கும்பியள றாவிரந்தீ நாரகம் பூதிநிரை
யம்பவர்க்க மூழல்நர கம். (ங)

480. பூமி பிருதுவிபார் பூவகலி டந்தரணி
கோமகிய ளக்கர்பொறை குவ்வசலை—நேமிபடி
பாரியகி லங்குவல யங்கா சினியவனி
தாரணிவ சுந்தரைத லம். (ச)

---

477. மோக்கத்தின் பெயர்:—வீடு, அமிர்தம், முத்தி, விபவருக்கம், ஆனந்தம், சிவம், சித்தி, நிருவாணம், கதி, நின்மலம், சுகாதீதம், ஞேயம், நித்தம், கைவல்லியம், மோக்கம். ஆ 15.

478. தேவருலகத்தின் பெயர்:—விண், துறக்கம், நாகம், விமானம், விசும்பு, மேலுலகம், தானம், பொன்னுலகு, கற்பம், உவணை, உம்பர், சுவலோகம், உயர்நிலை, வானாடு, சுவர்க்கம், புவனம், தேவருலகம். ஆ 17

479. நாகலோகத்தின் பெயர்:—நாகலோகம், பவணம். ,, 2.
பாதாளத்தின் பெயர்:—பாதலம், பிலம், அதோகதி, பாதாளம். 4.
நரகத்தின் பெயர்:—சுவப்பிரம், இருள், கும்பி, அளறு, ஆவிரம், தீ, நாரகம், பூதி, நிரையம், பவர்க்கம், அழல், நரகம். ஆ 12.

480—482. பூமியின் பெயர்:—பூமி, பிருதுவி, பார், பூ, அகலிடம், தரணி, கோ, மகி, அளக்கர், பொறை, கு, அசலை, நேமி, படி, பாரி, அகிலம், குவலயம், காசினி, அவனி, தாரணி, வசுந்தரை, தலம்.

481. தாத்திரி யேதரைத ரித்திரிப ணுதரிமண்
605. கண்ணல்சுட்டல் பேணல் கருதல்நுத லல்குறித்த
லெண்ணலாஞ் சிந்தைகருத் திங்கிதஞ்சுட்—டெண்ணமுன்ன
நாட்டியந்தி யான நினைவுயோ கங்குறிப்பா
மீட்டுமப்பேர் வெங்கியமு மே. (ங)

606. பாவகம்பா வம்பாவை பாவனைய கஞ்செடியாஞ்
சார்வரைய றுத்தல்கணித் தல்குணித்தல்—மேவுமமைச்

---

603. பண்பின் பெயர்:—மரபு, இலக்கணம், கிழமை, மாலே, சுபாவம், பரிசு, விதி, பெற்றி, இயல், பான்மை, பகுதி, சால்பு, சகசம், தகை, நீர், தன்மை, படி, வண்மை, குணம், பால், இயல்பு, கொள்கை, முறை, பண்பு. ஆ 24.

604. அறிவின் பெயர்:—சேதனம், சைதன்னியம், உரம், ஞாபகம், சிதம், தெருட்சி, மேதை, புலன், விற்பனம், விவேகம், மதி, போதம், அறிவு, உணர்வு, ஞானம். ஆ 15.

அறிவுத் திட்பத்தின் பெயர்:—முதுக்குறைவு. ,, 1.

அறிவின்மையின் பெயர்:—அறிவிலி, அசேதனம். ,, 2.

605. குறித்தலின் பெயர்:—கண்ணல், சுட்டல், பேணல், கருதல், நுதலல், குறித்தல், எண்ணல். ,, 7.

குறிப்பின் பெயர்:—சிந்தை, கருத்து, இங்கிதம், சுட்டு, எண்ணம், முன்னம், நாட்டியம், தியானம், நினைவு, யோகம், குறிப்பு, வெங்கியம். ஆ 12.

606. பாவனையின் பெயர்:—பாவகம், பாவம், பாவை, பாவனை, அகம், செடி. ,, 6.

வரையறுத்தலின் பெயர்:—வரையறுத்தல், கணித்தல், குணித்தல். ,, 3.

சுத்திமந்தி ரஞ்சூழ்ச்சி யூகமுபா யந்தேர்ச்சி
தத்துமளப் பாலோ சனை. (௬)

607. உன்னல்மா னைசிந்திப் பூழ்த்தல்திரு வித்தலுள்ளல்
முன்னல் படர்தல் நினைத்தலாம்—மன்னறஞ்ச
றாணுச் சதந்திரமே சாசுதஞ்சி ரஞ்சீவி
யேணிலைபே றாகு மிவை. (௫)

608. ஈரநே யம்புரிவா ணம்பாசம் பத்திபரி
வார்வநா ரன்பெழுமை யன்புழுவல்—போர்மை
கருணை யிரக்கந் தயாவே கிருபை
யருளளிய னுக்கிரக மாம். (௬)

609. தரும மறன்சுகிர்தம் புண்ணியந் தன்மம்
பெருநல் வினைதீ வினையே—வருதோடம்
பாதகம்ப வம்பழிபா வந்தா பரந்தம்ப
மாதாரந் தாரகந்தஞ் சம். (௭)

உபாயத்தின் பெயர்:—அமைச்சு, உத்தி, மந்திரம், சூழ்ச்சி, யூகம், உபாயம், தேர்ச்சி, அளப்பு, ஆலோசனை. „ 9.

607. நினைத்தலின் பெயர்:—உன்னல், மானை, சிந்திப்பு, ஊழ்த்தல், திருவித்தல், உள்ளல், முன்னல், படர்தல், நினைத்தல். „ 9.

நிலைபேற்றின் பெயர்:—மன்னல், துஞ்சல், தாணு, சதம், திரம், சாசுதம், சிரஞ்சீவி, ஏண், நிலைபேறு. „ 9.

608. அன்பின் பெயர்:—ஈரம், நேயம், புரிவு, ஆணம், பாசம், பத்தி, பரிவு, ஆர்வம், நார், அன்பு. „ 10.

எழுபிறப்புந் தொடர்ந்த அன்பின் பெயர்:—உழுவல். „ 1.

கருணையின் பெயர்:—போர்மை, கருணை, இரக்கம், தயா, கிருபை, அருள், அளி, அனுக்கிரகம். „ 8.

609. தருமத்தின் பெயர்:—தருமம், அறன், சுகிர்தம், புண்ணியம், தன்மம், நல்வினை. „ 6.

பாவத்தின் பெயர்:—தீவினை, தோடம், பாதகம், பவம், பழி, பாவம். „ 6.

தாரகத்தின் பெயர்:—தாபரம், தம்பம், ஆதாரம், தாரகம், தஞ்சம். „ 5.

610. நன்குவிழு மங்கடவுள் நன்னர்நயஞ் சேடொண்மை
நன்றுத் தமநறுமை யாணர்சிவ—நன்மைநலம்
நோன்றல் சமித்தல் சகித்தல்பொறை பேபொறுத்தல்
சான்று கரிசாட்சி தான். (அ)

611. [1] தொய்யில்கடி யின்பஞ் சுகமிரமி யந்தமிச
மெய்திதமா.னந்தமலர் வேமநகை—மெய்மகிழ்வா
மோகைமா ராய முவகைசந்தோ டம்பிரியம்
நாகார் பிரகருட ணம். (கூ)

612. கோணைசத்துக் கன்னி குமரியழி வின்மைதகை
சேணிகெழுப் பால்பாங் குரித்தாட்சி—மாண்கிழமை
தாயமுரி மைப்பேர்சம் பாத்தியமாங் தேட்டம்வரு
வாய்புகுதி வாரிவரத் து. (ம)

---

610. நன்மையின் பெயர்:—நன்கு, விழுமம், கடவுள், நன்னர், நயம், சேடு, ஒண்மை, நன்று, உத்தமம், நறுமை, யாணர், சிவம், நன்மை, நலம். ஆ 14.

பொறுமையின் பெயர்:—நோன்றல், சமித்தல், சகித்தல், பொறை, பொறுத்தல். ,, 5.

சாட்சியின் பெயர்:—சான்று, கரி, சாட்சி. ,, 3.

611. சுகத்தின் பெயர்:—தொய்யில், கடி, இன்பம், சுகம், இரமியம், தமி, சம், இதம், ஆனந்தம், மலர்வு, ஏமம், நகை, மகிழ்வு. ,, 13.

சந்தோடத்தின் பெயர்:—ஓகை, மாராயம், உவகை, சந்தோடம், பிரியம், பிரகருடணம். ,, 6.

612. அழிவின்மையின் பெயர்:—கோணை, சத்து, கன்னி, குமரி, அழிவின்மை. ,, 5.

உரிமையின் பெயர்:—தகை, சேணி, கெழு, பால், பாங்கு, உரித்து, ஆட்சி, கிழமை, தாயம், உரிமை. ஆ 10.

சம்பாத்தியத்தின் பெயர்:—சம்பாத்தியம், தேட்டம். ,, 2.

வரத்தின் பெயர்:—வருவாய், புகுதி, வாரி, வரத்து. ,, 4.

(பி - ம்) 1. தொய்யல்.

613. [1] நீதமரி யாதைநெறி ஞாயநியா யங்கிரம
மோதுநிறை நற்குணம்வ ழாமைகுடிப்—பேர்திணையாஞ்
சாதிவரு ணம்வழியி னங்குலப்பே ரொன்றினிற்சில்
பேதம் வருக்கமெனும் பேர். (௬௧௩)

614. சமுதாயஞ் சாமா னியம்பொதுவி சேடம்
[2] நிமித்தியந்தி ருச்சீ ருசிதஞ்—சிறப்பே
யோக்கியஞ் சம்பிரமந் திவ்வியஞ்சொம் பேரணம்மா
மூக்கமுர னுள்ளமிகைக் கோது. (௬௧௪)

615. செய்திநடை மஞ்சரிசா ரித்திரஞ்சி லந்தனம்வார்
கையியல்பா சாரந் திணையொழுக்கம்—பெய்யழுக்கா
றூர்மனக்கோண் மாற்சரிய மவ்வியம ழுக்கையுமாம்
கூரநோ னைமைபொறு மை. (௬௧௫)

---

613. நீதத்தின் பெயர்:—நீதம், மரியாதை, நெறி, ஞாயம், நியாயம், கிரமம். ஆ 6.

நற்குணம் வழாமையின் பெயர்:—நிறை. ,, 1.

குடியின் பெயர்:—குடி, திணை. ,, 2.

குலத்தின் பெயர்:—சாதி, வருணம், வழி, இனம், குலம். ,, 5.

ஒரு பொருளிற் சிறிது பேதப்பட்ட பொருளின் பெயர்:—வருக்கம். ,, 1.

614. பொதுவின் பெயர்:—சமுதாயம், சாமானியம், பொது. ,, 3.

விசேடத்தின் பெயர்:—விசேடம், நிமித்தியம், திரு, சீர், உசிதம், சிறப்பு, யோக்கியம், சம்பிரமம், திவ்வியம், சொம்பு, எரணம். ஆ 11.

உள்ள மிகுதியின் பெயர்:—ஊக்கம், உரன், உள்ளமிகை. ,, 3.

615. ஒழுக்கத்தின் பெயர்:—செய்தி, நடை, மஞ்சரி, சாரித்திரம், சீலம், தனம், வார், கை, இயல்பு, ஆசாரம், திணை, ஒழுக்கம். ,, 12.

அழுக்காற்றின் பெயர்:—அழுக்காறு, மனக்கோண், மாற்சரியம், அவ்வியம், அழுக்கை. ,, 5.

பொறாமையின் பெயர்:—கூரம், நோனைமை, பொறாமை. ,, 3.

(பி - ம்) 1. நீதி. 2. நமித்தியர்.

616. தூய்துசுசி பாவனந்தூய் [1]வேத்தியஞ்சுத் தஞ்சவுசம்
பூதம் பவித்திரந்துப் பும்புனிதம்—தூய்திலியுற்
பாதந்திட் டுத்துடக்கா சூசம்வா லாமைபுலை
சூதகமீன் றண்மைபுனி று. (௰௪)

617. வெண்மைசைச வம்புருவை விண்போத [2]கங்குழவு
கொம்மையெவ்வ னங்குருளை கோமளமே—செம்முருகு
நாகிளைவா லந்தருண நன்மழவு மாமிளமை
மூள்கிழம்வி ருத்தமுற்றல் மூப்பு. (௰௫)

618. திரம் பராக்கிரமஞ் சேவகந்தி ராணிதிறஞ்
சூரம்வல்ல பந்தயிரி யந்தூரமே—வீரிய
மாண்மைசதுர் சத்திசமத் துச்சவுரி யம்வீரம்
ஆண்மையிலி கோழைபெண்மை யாம். (௰௬)

619. வெற்றிமுல்லை வாகை விசையம்வல னாடுசெயங்
கொற்றம்வென்றி யாம்பரிச யம்பயிற்சி—மற்றனிட்டை
வாதனையு ழத்தல் பழக்கமொடு வாடிக்கை
சாதக மப்பியா சம். (௰௭)

---

616. சுத்தத்தின் பெயர்:—தூய்த், சுசி, பாவனம், தூய், பேத்தியம், சுத்தம, சவுசம், பூதம், பவித்திரம், துப்பு, புனிதம். ஆ 11.

அசுத்தத்தின் பெயர்:—தூய்திலி, உற்பாதம், திட்டு, துடக்கு, ஆசூசம், வாலாமை, புலை, சூதகம். ,, 8.

ஈன்றணிமையின் பெயர்:—ஈன்றண்மை, புனிறு. ,, 2.

617. இளமையின் பெயர்:—வெண்மை, சைசவம், புருவை, விண், போதகம், குழவு, கொம்மை, எவ்வனம், குருளை, கோமளம், முருகு, நாகு, இளை, வாலம், தருணம், மழவு, இளமை. ஆ 17.

மூப்பின் பெயர்:—கிழம், விருத்தம், முற்றல், மூப்பு. ,, 4.

618. ஆண்மையின் பெயர்:—திரம், பராக்கிரமம், சேவகம், திராணி, திறம், சூரம், வல்லபம், தயிரியம், தூரம், வீரியம், ஆண்மை, சதுர், சத்தி, சமத்து, சவுரியம், வீரம். ஆ 16.

பெண்மையின் பெயர்:—ஆண்மையிலி, கோழை, பெண்மை. ,, 3.

619. வெற்றியின் பெயர்:—வெற்றி, முல்லை, வாகை, விசையம், வலன், ஆடு, செயம், கொற்றம், வென்றி. ,, 9.

அப்பியாசத்தின் பெயர்:—பரிசயம், பயிற்சி, அனிட்டை, வாதனை, உழத்தல், பழக்கம், வாடிக்கை, சாதகம், அப்பியாசம். ,, 9.

(பி - ம்) 1. பேத்தியம். 2. வங்குழகு.

620. ஓதிகலை விச்சைவித்தை கல்வியின்பேர் கல்லாமை
யாதமஞ்ஞ மேழமையஞ் ஞானமிச்சை—பேதமட
மண்ணமிழு தம்பா மரமூட மாந்தனிமை
யெண்வியட்டி கேவலமே கம். (மஅ)

621. மாண்கொழுமை சால்பமைதி வாய்ப்பான்றல் மாட்சிவளங்
காண்செழிப்பாம் பாக்கியமாக் கந்திருச்சீர்—பூண்பெருக்க
மாடிடம்வெ றுக்கைபொறி வாழ்க்கைவிப வம்விருத்தி
தேடுசம்பத் துஞ்செல்வ மாம். (மக)

622. ஊழ்நியதி தெய்வம் பிராத்திவிதி தண்மைதஞ்சம்
தாழ்வெளிமை சாய்ப்பெண் பரிபவமே—கீழிழிவா
நாத்தியதி தஞ்சூ னியம்பூச் சியநாச
மேத்தரித பாவமின்மை யே. (உம)

623. நந்தல்பல்க லாக்கம்விளை வாம்பாட வங்கருவந்
தந்தபிமா னம்பெருமி தஞ்செருக்கே—மந்தருக்கு

---

620. கல்வியின் பெயர் :—ஓதி, கலை, விச்சை, வித்தை, கல்வி. ஆ 5.

கல்லாமையின் பெயர் :—கல்லாமை, ஆதம், அஞ்ஞம், ஏழமை, அஞ்ஞானம், மிச்சை, பேதம், மடம், அண்ணம், இழுதம், பாமரம், மூடம். ஆ 12.

தனியின் பெயர் :—தனிமை, வியட்டி, கேவலம், ஏகம். ,, 4.

621. வளமையின் பெயர் :—மாண், கொழுமை, சால்பு, அமைதி, வாய்ப்பு, ஆன்றல், மாட்சி, வளம், செழிப்பு. ,, 9.

பாக்கியத்தின் பெயர்:—பாக்கியம், ஆக்கம், திரு, சீர், பெருக்கம், மாடு, இடம், வெறுக்கை, பொறி, வாழ்க்கை, விபவம், விருத்தி, சம்பத்து, செல்வம். ஆ 14.

622. விதியின் பெயர்:—ஊழ், நியதி, தெய்வம், பிராத்தி, விதி. ,, 5.

எளிமையின் பெயர் :—தண்மை, தஞ்சம், தாழ்வு, எளிமை, சாய்ப்பு, எண், பரிபவம், கீழ், இழிவு. ,, 9.

இன்மையின் பெயர் :—நாத்தி, அதிதம், சூனியம், பூச்சியம், நாசம், அரிது, அபாவம், இன்மை. ,, 8.

623. ஆக்கத்தின் பெயர் :—நந்தல், பல்கல், ஆக்கம், விளைவு. ,, 4.

அகந்தையின் பெயர் :—பாடவம், கருவம், தந்து, அபிமானம், பெருமிதம், செருக்கு, ஏமம், தருக்கு, மதம், களிப்பு, அகந்தை, ஆங்காரம். ஆ 12.

வெம்மதங்க ளிப்பகந்தை யாங்காரம் வீற்றிருத்தல்
செம்மாப்பே மாப்பிறுமாப் பாம். (உக)

624. ஒய்யாரஞ் சிங்கா முல்லாசங் கெம்பீரங்
கொய்யு மகிழ்ச்சிக் குறிப்பாகுஞ்—செய்யுதவி
துப்பிணைச காயந் துணையாஞ்சா தித்ததொன்று
கைப்படுதல் சாத்தியம்போக் காம். (உஉ)

625. திட்கல்கூச் சந்துணுக்கம் புல்லரிப் புத்துட்கல்
மட்கல் மழுங்குதல்[1]மா னல்வெள்கல்—வட்கலுட்கு
நாண்சமழ்ப்பி லச்சைவெட்க நற்றவசு றுப்படிவந்
தாண்டுதவ நோன்புவிர தம். (உங)

626. வெறுப்புவர்த்தல் மாமுனிவேண் டாமையவா வின்மை
துறப்பு விரத்தி துறவி—வறுமைமிடி
நீள்கலித ரித்திரநி ரப்புமிச்சை யின்மைகுறு
வாழ்விலம்பா டொற்கநல்கூர் வாம். (உச)

இறுமாப்பின் பெயர் :—வீற்றிருத்தல், செம்மாப்பு, எமாப்பு, இறுமாப்பு. ஆ 4.

624. மகிழ்ச்சிக் குறிப்பின் பெயர் :—ஒய்யாரம், சிங்காரம், உல்லாசம், கெம்பீரம். ,, 4.

உதவியின் பெயர் :—உதவி, துப்பு, இணை, சகாயம், துணை. ,, 5.

ஒரு காரியத்தைச் சாதகஞ் செய்து கைவந்ததின் பெயர் :—சாத்தியம், போக்கு. ,, 2.

625. மழுங்குதலின் பெயர் :—திட்கல், கூச்சம், துணுக்கம், புல்லரிப்பு, துட்கல், மட்கல், மழுங்குதல். ,, 7.

வெட்கத்தின் பெயர் :—மானல், வெள்கல், வட்கல், உட்கு, நாண், சமழ்ப்பு, இலச்சை, வெட்கம். ,, 8.

தவசின் பெயர்:—தவசு, உறு, படிவம், தவம், நோன்பு, விரதம். ,, 6.

626. வெறுப்பின் பெயர்:—வெறுப்பு, உவர்த்தல், மா, முனி, வேண்டாமை, அவாவின்மை, துறப்பு, விரத்தி, துறவி. ,, 9.

வறுமையின் பெயர்:—வறுமை, மிடி, கலி, தரித்திரம், நிரப்பு, மிச்சை, இன்மை, குறுவாழ்வு, இலம்பாடு, ஒற்கம், நல்கூர்வு. ,, 11.

(பி - ம்) 1 மானம்.

627. கேண்மையிரு ளைசிநே கந்தொடர்கேள் நட்புறவா
மாணை யுடனேவ லாக்கினையாந்—தா னுமங்கல்
மாரிபிணி யாமயம்வி யாதி யுபத்திரநோய்
சூரணங்கு தீனமுரோ கம். (உரு)

628. மற்சரந்து வேடமடி தெவ்வரியி கற்பகைமை
முற்சத்து ருத்துவமு ரண்டுமுரண்—மெச்சுமறல்
வார மரில்பிணக்காம் வாய்ப்பையிர ணங்கடனுஞ்
சாரசர் [1]வேட்டைதளர் வு. (உசு)

629. கவ்வைபையுள் புன்கண்மம்மர் கையாறின் னுங்கஇத
மெவ்வமிடுக் கண்பழங்க ணேதமின்னல்—வெவ்வலக்கண்
கேதமிட்ட ளந்துயர்கி லேசம் பருவரல்சூர்
வாதைபடர் பீழைவிழு மம். (உஎ)

---

627. உறவின் பெயர் :—கேண்மை, இருளை, சிநேகம், தொடர், கேள், நட்பு, உறவு. ஆ. 7.

ஆக்கினையின் பெயர்:—ஆணை, ஏவல், ஆக்கினை. ,, 3.

நோயின் பெயர்:—மங்கல், மாரி, பிணி, ஆமயம், வியாதி, உபத்திரம், நோய், சூர், அணங்கு, தீனம், உரோகம். ,, 11.

628. பகைமையின் பெயர்:—மற்சரம், துவேடம், மடி, தெவ்வு, அரி, இகல், பகைமை, சத்துருத்துவம். ,, 8.

பிணக்கின் பெயர்:—முரண்டு, முரண், மறல், வாரம், அரில், பிணக்கு. ,, 6

கடனின் பெயர்:—வாய்ப்பை, இரணம், கடன். ,, 3.

தளர்வின் பெயர்:—அசர்வு, எட்டை, தளர்வு. ,, 3.

629-630. துன்பத்தின் பெயர்:—கவ்வை, பையுள், புன்கண், மம்மர், கையாறு, இன்னுங்கு, அகிதம், எவ்வம், இடுக்கண், பழங்கண், ஏதம், இன்னல், அலக்கண், கேதம், இட்டளம், துயர், கிலேசம், பருவரல், சூர், வாதை, படர், பீழை, விழுமம்.

அல்லகண்டம், பீடை, துக்கம், வேதனை, இடும்பை, அனர், செல்லல், உறுகண், கவலை, கோட்டாலை, அல்லல், இடர், யாதனை, அரந்தை, சங்கடம், தொங்கிசம், துன்பம். ஆ. 40.

(பி - ம்) 1. சட்டை.

630. அல்லகண்டம் பீடைதுக்கம் வேதனையி டும்பையருர்
செல்லலுறு கண்கவலை கோட்டாலை—யல்லலிட்ர்
யாதனைய ரந்தைசங்க டந்தொங்கி சந்துன்பஞ்
சூதார் பசிவிடைப்புச் சுத்து. (உஅ)

631. நந்தலலா பங்கயஞ்சே தஞ்சிதைவு ருங்கனட்டங்
கந்தல்சுத மானி[1]மடி கேடாம்பா—டந்தரங்கோள்
முட்டிடைவு விக்கினம்பொல் லாங்குதீங் கேமுடைஞ்சல்
துட்டூறு தீதுதுரோ கம். (உகூ)

632. நச்சலப்ப வாவேட்கை நம்பிரதி வெப்பநயப்
பிச்சைநகை காதல்பற்றி ராகமிட்ட—மெச்சிவிறல்
மாதர்விழை வேட்டைவெஃகல் வாஞ்சைபெட்ப பேட்சைவிருப்
பாதரம்வீழ் வேக்கறவா சை. (௩௰)

633. மால்விரகங் காமமத னோய்மோகந் தூங்கன்மந்த
மாலசியஞ் சோம்புவிடா யாயாச—மேல்வருத்த
மாய்வயர்வ ணங்கனுக்க மாகுலங்க வற்சிநொசி
வோய்வுயங்கல் தாவு முரை. (௩க)

630. பசியின் பெயர்:—பசி, விடைப்பு, சுத்து. ஆ 3.

631. கேட்டின் பெயர்:—நந்தல், அலாபம், கயம், சேதம், சிதைவு, உருங்கல், நட்டம், கந்தல், சுதம், ஆனி, மடி, கேடு. ஆ 12.

தீதின் பெயர்:—பாடு, அந்தரம், கோள், முட்டு, இடைவு, விக்கினம், பொல்லாங்கு, தீங்கு, முடைஞ்சல், துட்டு, ஊறு, தீது, துரோகம். ,, 13.

632. ஆசையின் பெயர்:—நச்சு, அலப்பு, அவா, வேட்கை, நம்பு, இரதி, வெப்பம், நயப்பு, இச்சை, நகை, காதல், பற்று, இராகம், இட்டம், இவறல், மாதர், விழைவு, எட்டை, வெஃகல், வாஞ்சை, பெட்பு, அபேட்சை, விருப்பு, ஆதரம், வீழ்வு, எக்கறவு, ஆசை. ஆ 27.

633. மோகத்தின் பெயர்:—மால், விரகம், காமம், மதனோய், மோகம். ,, 5.

ஆயாசத்தின் பெயர்:—தூங்கல், மந்தம், ஆலசியம், சோம்பு, விடாய், ஆயாசம். ,, 6.

வருத்தத்தின் பெயர்:—வருத்தம், ஆய்வு, அயர்வு, அணங்கு, அனுக்கம், ஆகுலம், கவற்சி, நொசிவு, ஓய்வு, உயங்கல், தாவு. ஆ 11.

(பி - ம்) 1. மதி.

634. தள்ளாட் டலைவுகுலை சஞ்சலஞ்ச லஞ்சபல
மள்ளாட் டுலேதலதிர்ப் புத்துளங்கல்—கொள்விதிர்ப்புக்
கம்பிதம்ப னிப்புநழுக் கம்பொதிர்ப்பு டன்பதர்த்தங்
கம்பம் பதறல்நடுக் கம். (௩௨)

635. ஏசுபிறக் குப்பிழைகா சேதமைசண் டாளம்வடு
மாசழுக்கி ழுக்கரில்வ ழுக்குறைகோ—தாசுகரில்
பொக்கசடு தப்புப் புகர்வசைக ளங்கநவை
கைக்குந் தவறுகச டு. (௩௩)

636. தோங்கறை நோம்பழுதாட் சேபமறுச் சோர்வுகுற்றம்
வாங்கும் பெருந்திணையொவ் வாக்காம—மாங்கொர்பா
லிச்சையாங் கைக்கிளையி கழ்ச்சிவழுக் குச்சோர்வு
பொச்சாப் பயர்த்தன்மறத் தல். (௩௪)

637. காய்த லுருத்தல்சலஞ் சிற்றங் கதங்கறுப்புத்
தீயபவ தொந்தஞ் செயிர்வெகுளி—பாய்முணவல்
செற்றங் குரோதஞ் சிவப்புருத்தி ரம்வயிரம்
பற்றரிற்க லாஞ்சினங்கோ பம். (௩௫)

---

634. நடுக்கத்தின் பெயர் :—தள்ளாட்டு, அலைவு, குலை, சஞ்சலம், சலம், சபலம், அள்ளாட்டு, உலைதல், அதிர்ப்பு, துளங்கல், விதிர்ப்பு, கம்பிதம், பனிப்பு, நழுக்கம், பொதிர்ப்பு, பதர்த்தம், கம்பம், பதறல், நடுக்கம். ஆ 19.

635-636. குற்றத்தின் பெயர் :—ஏசு, பிறக்கு, பிழை, காசு, ஏதம், மை, சண்டாளம், வடு, மாசு, அழுக்கு, இழுக்கு, அரில், வழு, குறை, கோது, ஆசு, கரில், பொக்கு, அசடு, தப்பு, புகர், வசை, களங்கம், நவை, தவறு, கசடு.

தோம், கறை, நோம், பழுது, ஆட்சேபம், மறு, சோர்வு, குற்றம். ஆ 34.

636. ஒவ்வாக்காமத்தின் பெயர்:-பெருந்திணை, ஒவ்வாக்காமம். ,, 2.

ஒருதலைக் காமத்தின் பெயர் :—கைக்கிளை. ,, 1.

மறத்தலின் பெயர் :—இகழ்ச்சி, வழுக்கு, சோர்வு, பொச்சாப்பு, அயர்த்தல், மறத்தல். ,, 6.

637. கோபத்தின் பெயர் :—காய்தல், உருத்தல், சலம், சிற்றம், கதம், கறுப்பு, பவம், தொந்தம், செயிர், வெகுளி, முணவல், செற்றம், குரோதம், சிவப்பு, உருத்திரம், வயிரம், அரில், கலாம், சினம், கோபம். ஆ 20.

638. பித்தமுன்மா தஞ்சோபம் பேதேம மோகமயல்
மத்தம்வெறி மால்கழுமு மாழாப்புன்—மத்தமருள்
பிச்சனந்த [1]ரேடணைபி ராந்தி யிலகிரிமான்
றச்சோக மாழ்கல்மயக் கம். (௬௬)

639. கோரமடுப் புட்குவெறி கொன்வெறிப்பு ரும்வீமம்
பீர்வெடிப யானகஞ்சூர் பீதிவெரூஉத்—தாருணநாம்
பேம்பயம்ப னிப்புமச்சப் பேர்துரித மேதவனங்
காண்பிரம மூன்றுகலக் கம். (௬௭)

640. சிரணஞ்சி தம்புசெடி சித்தைகுண மின்மையாம்
வாரமோ ரம்பக்க வாதமாங்—காரணமே
வாயில் நிமித்தம் வகைபொருட்டே துத்திறமாங்
தோயுமங்க லஞ்சுச் சுபம். (௬௮)

641. பாரம் பரியம் பரம்பரை பாந்தமுறை
யாரும் பதிற்பரியா யம்பிரதி—சேர்பிறிது

638 மயக்கத்தின் பெயர் :—பித்தம், உன்மாதம், சோபம், பேது, எமம், மோகம், மயல், மத்தம், வெறி, மால், கழுமு, மாழாப்பு, உன்மத்தம், மருள், பிச்சு, அனந்தர், எடணை, பிராந்தி, இலகிரி, மான்று, சோகம், மாழ்கல், மயக்கம். ஆ 23.

639. அச்சத்தின் பெயர் :—கோரம், அடுப்பு, உட்கு, வெறி, கொன், வெறிப்பு, உரும், வீமம், பீர், வெடி, பயானகம், சூர், பீதி, வெரூஉ, தாருணம், நாம், பேம், பயம், பனிப்பு, அச்சம். ஆ 20.

கலக்கத்தின் பெயர் :—துரிதம், கவனம், பிரமம், கலக்கம். ,, 4.

640. துணையின்மையின் பெயர் :—சிரணம், சிதம்பு, செடி, சித்தை. ,, 4.

பக்கவாதத்தின் பெயர் :—வாரம், ஓரம், பக்கவாதம். ,, 3.

காரணத்தின் பெயர் :—காரணம், வாயில், நிமித்தம், வகை, பொருட்டு, எது, திறம். ,, 7.

மங்கலத்தின் பெயர் :—மங்கலம், சு, சுபம். ,, 3

641. பாரம்பரியத்தின் பெயர் :—பாரம்பரியம், பரம்பரை, பாந்தம், முறை. ,, 4.

பதிலின் பெயர் :—பதில், பரியாயம், பிரதி, பிறிது, மற்றை, எதிர், எனை, மறுமை. ,, 8.

(பி - ம்.) 1. ரேட்சணை.

மற்றையெதி ரேனை மறுமை[1]வினைக் கேடுசெய
லற்றிடுதல் கையறவு மாம். (௩௬)

642. தோரணையா டம்பரமி டம்பம் [2]பிரகடமாம்
கோரங்கண் டந்தறுகண் கோடணைகு—ரூரம்வன்க
ணெட்டிர முக்கிரங்கொ டூரமக டங்கடினங்
கட்டங் கடுமைகொடு மை. (௪0)

643. வித்தகம்வி யப்பிறும்பூ தாச்சரியம் விம்மிதமுஞ்
சித்திரமு மற்புதமு முற்பனமுஞ்—சித்தமிசை
தங்கதிச யுய்ப்பேர்சந் தேகமனு மானமையஞ்
சங்கைகடுப் புச்சமுச யம். (௪௧)

644. வீற்றுவிள்ளல் பேதம்விரோ தம்விபரீ தம்விகடம்
வேற்றுமைமா றன்னியம்பின் னம்விகிர்த—மேற்றிரிவு
மாற்றம்விரு பம்விகற்பம் வேறுங் கயங்கீழ்மை
யாற்பணம்பி ரீதியற்பு தம். (௪௨)

வினைக்கேட்டின் பெயர்:—வினைக்கேடு, செயலறல், கையறவு. ஆ 3.

642. பிரகடத்தின் பெயர்:—தோரணை, ஆடம்பரம், இடம்பம், பிரகடம். ,, 4.

கொடுமையின் பெயர்:—கோரம், கண்டம், தறுகண், கோடணை, குரூரம், வன்கண், நெட்டூரம், உக்கிரம், கொடூரம், அகடம், கடினம், கட்டம், கடுமை, கொடுமை. ,, 14.

643. அதிசயத்தின் பெயர்:—வித்தகம், வியப்பு, இறும்பூது, ஆச்சரியம், விம்மிதம், சித்திரம், அற்புதம், உற்பனம், அதிசயம். ,, 9.

சந்தேகத்தின் பெயர்:—சந்தேகம், அனுமானம், ஐயம், சங்கை, கடுப்பு, சமுசயம். ,, 6.

644. வேறுபாட்டின் பெயர்:—வீற்று, விள்ளல், பேதம், விரோதம், விபரீதம், விகடம், வேற்றுமை, மாறு, அன்னியம், பின்னம், விகிர்தம், திரிவு, மாற்றம், விரூபம், விகற்பம், வேறு. ஆ 16.

கீழ்மையின் பெயர்:—கயம், கீழ்மை. ,, 2.

பிரீதியின் பெயர்:—ஆற்பணம், பிரீதி, அற்புதம். ,, 3.

(பி - ம்) 1. வினைக்கேடு. 2. பிரகடமாம்.

645. ஊதியம்வி ருத்திபிர யோசனமி லாபம்வியன்
வாதையில்ப யப்பதியம் வட்டிபலன்—மாதகவு
செப்பநடு நிற்றல்விறு தாவீதா வம்பவங்கொன்
மெய்ப்பயனி லாமையிவை வீண். (சாரு)

646. கைதவம்பட் டிமைமா யஞ்சாட் டியகடலை
குய்யம்வஞ்சங் குத்திரங்கூ டங்குடில—மொய்கபடம்
வல்லபுள் ளுவஞ்சூது வஞ்சனையும் வஞ்சகமுட்
டில்லாமை தாராள மே. (சாச)

647. மானந்தம் மேன்மைகுன்று வன்மையபா நாமமபி
தானம்பேர் சாபல்லி யஞ்சபல—மானசித்தி
பேசுநிறை வேற்றந் தெளிவுபிர சன்னநிருத்
தாசன மேவிமரி சம். (சாரு)

648. முத்திரையி லச்சினையி லிங்கமிலக் குக்குறியா
மத்தெளித்தல் தேற்ற லுணர்த்துதல்போ—தித்தலுப

---

645. இலாபத்தின் பெயர்:—ஊதியம், விருத்தி, பிரயோசனம், இலாபம், வியன், பயப்பு, அதியம், வட்டி, பலன். ஆ 9.

நடுநிற்றலின் பெயர்:—தகவு, செப்பம், நடுநிற்றல். ,, 3.

பயனிலாமையின் பெயர்:—விறுதா, வீதா, வம்பு, அவம், கொன், பயனிலாமை, வீண். ,, 7.

646. வஞ்சகத்தின் பெயர்:—கைதவம், பட்டிமை, மாயம், சாட்டியம், கடலை, குய்யம், வஞ்சம், குத்திரம், கூடம், குடிலம், கபடம், புள்ளுவம், சூது, வஞ்சனை, வஞ்சகம். ஆ 15.

முட்டில்லாமையின் பெயர்:—முட்டில்லாமை, தாராளம். ,, 2.

647. மேன்மை குன்றாமையின் பெயர்:—மானம். ,, 1.

பேரின் பெயர்:—நாமம், அபிதானம், பேர். ,, 3.

நிறைவேற்றத்தின் பெயர் :—சாபல்லியம், சபலம், சித்தி, நிறைவேற்றம். ,, 4.

தெளிவின் பெயர்:—தெளிவு, பிரசன்னம், நிருத்தாசனம், விமரிசம். ,, 4.

648. முத்திரையின் பெயர்:—முத்திரை, இலச்சினை, இலிங்கம், இலக்கு, குறி. ,, 5.

தெளித்தலின் பெயர்:—தெளித்தல், தேற்றல், உணர்த்துதல், போதித்தல், உபதேசம், தெருட்டல். ,, 6.

தேசங் தெருட்டலுமா மோர்தல்குறிக் கோடுணிவு
தேசார் [1]கடைப்பிடிதேற் றம். (சகு)

649. குச்சிதம்ப யிர்ப்பருவ ருப்பாஞ் சடைவுகத்து
வைச்சவந்தி மோடி வலித்தல்கட்டி—மெச்சுறுதி
வற்புறுத்த லாஞ்சும்மா வாளாகே ளாமூக
நற்பேசா மோனமவு னம். (சஎ)

650. கொள்கை மதமபிப்பி ராயஞ் சமையமுமா
முள்ளொருமை தோட்டிமையு மொற்றுமையாங்—குள்ளம்வண்டு
[1]செய்யிடம்பு சண்டங் [2]கராளம்வம்புஞ் சிற்றொழுக்கங்
கையடைய டைக்கலப்பேர் காண். (சஅ)

தேற்றத்தின் பெயர்:—ஓர்தல், குறிக்கோள், துணிவு, கடைப்பிடி, தேற்றம். ஆ 5.

649. அருவருப்பின் பெயர்:—குச்சிதம், பயிர்ப்பு, அருவருப்பு. ,, 3.

சடைவின் பெயர்:—சடைவு, கத்து, வந்தி, மோடி. ,, 4.

வற்புறுத்தலின் பெயர்:-வலித்தல், கட்டி, உறுதி, வற்புறுத்தல். ,, 4.

மவுனத்தின் பெயர்:—சும்மா, வாளா, கேளா, மூகம், பேசா, மோனம், மவுனம். ,, 7.

650. கொள்கையின் பெயர் :—கொள்கை, மதம், அபிப்பிராயம், சமையம். ,, 4.

ஒற்றுமையின் பெயர்: —ஒருமை, தோட்டிமை, ஒற்றுமை. ,, 3.

சிற்றொழுக்கத்தின் பெயர்:—குள்ளம், வண்டு, இடும்பு, சண்டம், கராளம், வம்பு, சிற்றொழுக்கம். ,, 7.

அடைக்கலத்தின் பெயர் :—கையடை, அடைக்கலம். ,, 2.

மனக் குணவர்க்க முற்றும்.

(பி : ம்) 1. செய்யிடும்பு. 2. கரளம்.

IV. குண நாமப் படலம்.

உயிர்ப்பொருள்: 2. வாக்குக் குணவர்க்கம்

651. சொல்பறைகீர் வாணிகதை தோல்வசனங் காதைபனு
வல்பதந்திர்ப் புக்கிளவி வாக்குமொழி—நல்வார்த்தை
கூற்றநொடி செப்புக் குயிலுரையி யம்பேச்சு
மாற்றமிசை வாக்கியமு மாம். (க)

652. உரைத்தல்விளம் பல்புகறல் ஓதல்செப்ப லாடல்
விரித்தலறை தல்கதைத்தல் விள்ளல்—தெரித்தல்பன்ன
லேற்றியம்பல் பேச லிசைத்தல்பகர் தன்னுவறல்
சாற்றல் நவிற்றல்மொழி தல். (உ)

653. கூறனொடித் தல்மிழற்றல் கிர்த்தல் குயிறல்சொற்ற
லூறசொல லாமீ துரைபலகாற்—கூறல்துதி
வாழ்த்தல்மெச்சல் போற்றல்வழுத் தல்பரசல் தோத்திரமே
யேத்தல்பழிச் சல்பரவ லென். (௩)

654. வாசகமும் பாசுரமும் வக்கணையா மாசில்வாழ்த்
தாசிடைதிட் டம்பல்பரி [1]யாசநிந்தை—சீசிளவ

---

651. சொல்லின் பெயர் :—சொல், பறை, கீர், வாணி, கதை, தோல், வசனம், காதை, பனுவல், பதம், கிர்ப்பு, கிளவி, வாக்கு, மொழி, வார்த்தை, கூற்று, நொடி, செப்பு, குயில், உரை, இயம், பேச்சு, மாற்றம், இசை, வாக்கியம். ஆ 25.

652—653. சொல்லலின் பெயர் :—உரைத்தல், விளம்பல், புகறல், ஓதல், செப்பல், ஆடல், விரித்தல், அறைதல், கதைத்தல், விள்ளல், தெரித்தல், பன்னல், இயம்பல், பேசல், இசைத்தல், பகர்தல், நுவறல், சாற்றல், நவிற்றல், மொழிதல்.

கூறல், நொடித்தல், மிழற்றல், கிர்த்தல், குயிறல், சொற்றல், சொல்லல். ,, 27.

653. பல்கால் கூறலின் பெயர் :—மீதுரை. ,, 1.

துதியின் பெயர் :—துதி, வாழ்த்தல், மெச்சல், போற்றல், வழுத்தல், பரசல், தோத்திரம், ஏத்தல், பழிச்சல், பரவல். ,, 10.

654. வக்கணையின் பெயர் :—வாசகம், பாசுரம், வக்கணை. ,, 3.

ஆசில்வாழ்த்தின் பெயர் :—ஆசிடை. ,, 1.

(பி - ம்) 1. யாதநிந்தை.

யெச்சுவர்ப்பி கழ்ச்சிபழிப் பெள்ளல்வைதல் கவ்வையலர்
தூச்சிறுசேர் லேயினிநீச் சொல். (௪)

655. மெய்சரத மாணையுண்மை சத்தியம்வே ளாண்மைநிலை
வைசாதந் தீர்க்கம்நிசம் வாய்மைதிடந்—செய்பரம
நிச்சயமாம் பொய்பழுது பிசிவ [1]லத்கார
மிச்சைசடம் பேடுபொக்க மே. (௫)

656. கொண்டியங்குஞ் சந்தொடுப்புக் கோள்பிசினஞ் சாடிகுற
ளண்டுகொடு வாய்புறங்கூற் ருறும்பாடை—யொண்டிசைச்சொற்
றேசிகங்க டாவுசா வாம்வினுச் செப்பெதிர்ச்சொ
லேசில்விடை யுத்தரமி றுப்பு. (௬)

657. ஆரியஞ் சங்கிருத மண்டர்சொற்பி ராகிருதஞ்
சீர்வடசொ லாங்கிரந்தந் தென்சொல்தமிழ்—ஒருந்
திராவிடமாம் யாப்புத்தூக் குக்கவிதை செய்யுள்
பராவுகவி பாத்தொடரும் பாட்டு. (௭)

நிந்தையின் பெயர் :—திட்டு, அம்பல், பரியாசம், நிந்தை, சீ, சி, எள, எச்சு, உவர்ப்பு, இகழ்ச்சி, பழிப்பு, எள்ளல், வைதல், கவ்வை, அலர், தூ, சிறுசொல், ஏய், இளி, நீச்சொல். ஆ 20.

655. மெய்யின் பெயர் :—மெய், சரதம், ஆணை, உண்மை, சத்தியம், வேளாண்மை, நிலை, சாதம், தீர்க்கம், நிசம், வாய்மை, திடம், பரமம், நிச்சயம். ,, 14.

பொய்யின் பெயர் :—பொய், பழுது, பிசி, வலத்காரம், மிச்சை, சடம், பேடு, பொக்கம். ,, 8.

656. புறங்கூறலின் பெயர் :—கொண்டியம், குஞ்சம், தொடுப்பு, கோள், பிசினம், சாடி, குறள், கொடுவாய், புறங்கூற்று. ,, 9.

திசைச்சொல்லின் பெயர் :—பாடை, திசைச்சொல், தேசிகம். ,, 3.

வினுவின் பெயர் :—கடா, உசா, வினு. ,, 3.

எதிர்ச்சொல்லின் பெயர் :—செப்பு, விடை, உத்தரம், இறுப்பு. ,, 4.

657. வடசொல்லின் பெயர்:—ஆரியம், சங்கிருதம், அண்டர்சொல், பிராகிருதம், வடசொல், கிரந்தம். ,, 6.

தமிழின் பெயர்:—தென்சொல், தமிழ், திராவிடம். ,, 3.

பாட்டின் பெயர் :—யாப்பு, தூக்கு, கவிதை, செய்யுள், கவி, பா, தொடர், பாட்டு. ,, 8.

(பி - ம்) 1. லக்காரம்.

658. வெள்ளைமுற்பா வெண்பா வியனகவ லாசிரியங்
கொள்ளுங் கலிமுரற்பாக் கூன்றனிச்சொற்—றுள்ளு
மசையடியம் போதரங்க மீர்முடுக ராக
மிசைசுரித கங்கலிப்பா வீறு. (அ)

659. எண்ணுங் கணக்கெழுத்தி லக்கணம்வி யாகரணந்
திண்ணியலு மாஞ்சோசி யங்கரண—மெண்கணிதஞ்
சோதிடமாம் வாகடஞ்சந் தோபிசிதி யாயுண்மறை
யாதல் வயித்தியநூ லாம். (கூ)

660. சாத்திரமங் கம்பிடகந் தந்திரந்தந் தாரிடநூல்
பேத்திலக்கி யம்பனுவ லேசமையஞ்—சூத்திரமா
மொய்தாக மஞ்சிறப்பு நூலோ டனுதிநூல்
ஐதுமனுக் குப்யமந்தி ரம். (ய)

---

658. வெண்பாவின் பெயர்:—வெள்ளை, முற்பா, வெண்பா. ஆ 3.
ஆசிரியப்பாவின் பெயர்:—அகவல், ஆசிரியம். „ 2.
கலிப்பாவின் பெயர்:—கலிப்பா, முரற்பா. „ 2.
தனிச்சொல்லின் பெயர்:—கூன், தனிச்சொல். „ 2.
அம்போதரங்கத்தின் பெயர்:—அசையடி, அம்போதரங்கம். „ 2.
அராகத்தின் பெயர்:—முடுகு, அராகம். „ 2.
கலிப்பாவீற்றின் பெயர்:—சுரிதகம். „ 1.
659. கணக்கின் பெயர்:—எண், கணக்கு. „ 2.
இலக்கணத்தின் பெயர்:—எழுத்து, இலக்கணம், வியாகரணம், இயல். „ 4.
சோதிடத்தின் பெயர்:—சோசியம், கரணம், எண், கணிதம், சோதிடம். „ 5.
வைத்திய நூலின் பெயர்:—வாகடம், சந்தோபிசிதி, ஆயுள் மறை, வைத்திய நூல். „ 4.
660. சாத்திரத்தின் பெயர்:—சாத்திரம், அங்கம், பிடகம், தந்திரம், தந்து, ஆரிடம், நூல், இலக்கியம், பனுவல், சமையம், சூத்திரம். ஆ 11.
ஆகமத்தின் பெயர்:—ஆகமம், சிறப்பு நூல், அனுதி நூல். „ 3.
மந்திரத்தின் பெயர்:—மனு, குப்யம், மந்திரம். „ 3.

661. மந்திரத்தி னெண்ணுருவா முச்சரித்தல் மந்திரத்தைச்
சிந்தைசெய்தல் மந்திரத்தைச் செப்பல்செப—முந்திபொன்றை
யோர்பொருட்டாற் சொல்லியதை யோர்பொருட்டாற் பின்னும்வைத்தல்
சோர்விலனு வாதமெனச் சொல். (௰௧)

662. ஆதிநூல் சாகையிருக் காரணமோத் துச்சுருதி
கேதுபொது நூலெழுதாக் கேள்விமறை—வேதமதின்
பாகைகன்ம ஞானமத்தம் வைதிகமப் பாதைபொரு
ளாகு முபநிடத மாங்கு. (௧௨)

663. தோன்றிருக்குப் பௌடிகமுன் வேதமிரண் டாஞ்சுருதி
சான்ற யெசுருத் தயித்திரிய—மூன்றுதாத்
தானுதாத் தஞ்சாம நான்கதர்வ ணந்தலைச்சொல்
வான்குடிலை யேபிரண வம். (௧௩)

---

661. மந்திர வெண்ணின் பெயர்:—மந்திர வெண், உரு. ஆ 2.
மந்திரத்தைச் சிந்தித்தலின் பெயர்:—உச்சரித்தல். ,, 1.
மந்திரத்தைச் சொல்லுதலின் பெயர்:—செபம். ,, 1.

ஒரு பொருளை யொருகாரணத்தான் முன்சொல்லி, அந்தப் பொருளை வேறொருகாரணத்தாற் பின்னும் வைத்தலின் பெயர்:—அனுவாதம். ,, 1.

662. வேதத்தின் பெயர்:—ஆதி நூல், சாகை, இருக்கு, ஆரணம், ஓத்து, சுருதி, பொது நூல், எழுதாக் கேள்வி, மறை, வேதம். ஆ 10.

வேத பாகையின் பெயர்:—கன்ம பாகை, ஞான பாகை, அத்த பாகை. ,, 3.

வேத மார்க்கத்தின் பெயர்:—வைதிகம். ,, 1.

வேதப் பொருளின் பெயர்:—உபநிடதம். ,, 1.

663. முதல் வேதத்தின் பெயர்:—இருக்கு, பௌடிகம், முதல் வேதம். ,, 3.

இரண்டாம் வேதத்தின் பெயர்:—எசுரு, தயித்திரியம். ,, 2.

மூன்றாம் வேதத்தின் பெயர்:—உதாத்தானுதாத்தம், சாமம். ,, 2.

நான்காம் வேதத்தின் பெயர்:—அதர்வணம். ,, 1.

வேதத் தலைச்சொல்லின் பெயர்:—குடிலை, பிரணவம். ,, 2.

664. இலம்பகம்ப ரிச்சேத மேற்றவத்தி யாயஞ்
கலந்தசருக் கம்படலங் காண்டஞ்—சொலும்படலத்
துன்னல்வியாக் யானமுரை சொற்பொழிப்புப் பிண்டமா
மன்னுவயஞ் சொற்கூட்ட லாம். (கச)

665. இன்மைபிறி தேற்றமறை யாக்கும்வட சொன்முன்வரும்
அங்ககநி குவ்விமுன றைந்தபொருட்—பின்னும்வத்தல்
சொர்புனருத் தம்படலஞ் சூழ்பல் வினக்கூட்டா
மோரினக்கூட் டோத்தென் றுன்னர். (கரு)

666. ஆப்பதிக நாந்தி யணிந்துரை நூன்முகஞ்
சாய்வில் முகவுரையுந் தந்துரையும்—பாயிரமா
மொப்பெடுத்துக் காட்டிதியா சத்தோ டுபகாணம்
வெப்பி லுதாரணமா மே. (கசா)

---

664. படலத்தின் பெயர்:—இலம்பகம், பரிச்சேதம், அத்தி யாயம், சருக்கம், படலம். ஆ 5.

படலக் கூட்டத்தின் பெயர்:—காண்டம். ,, 1.

உரையின் பெயர்:—வியாக்கியானம், உரை. ,, 2.

பொழிப்புரையின் பெயர்:—பொழிப்பு, பிண்டம். ,, 2.

சொற்கூட்டலின் பெயர்:—அன்னுவயம். ,, 1.

665. அங், அ, ந, நி, கு, வி: என்று ஆறும் வடசொற்களின் முன் வந்தால், இன்மை, பிறிது, எற்றம், எதிர்மறை யென்னும் பொருள்களை யுணர்த்தும். [உ - ம்: அஙகன், அகளங்கன், நபண்டிதன், நிமலன், குயுக்தி, விமலன்.]

முன் கூறியதைப் பின்னுங் கூறலின் பெயர்:—புனருத்தம். ,, 1.

பலவினக் கூட்டத்தின் பெயர்:—படலம். ,, 1.

ஓரினக்கூட்டத்தின் பெயர்:—ஓத்து. ,, 1.

666. பாயிரத்தின் பெயர்:—பதிகம், நாந்தி, அணிந்துரை, நூன் முகம், முகவுரை, தந்துரை, பாயிரம். ,, 7.

உதாரணத்தின் பெயர்:—ஒப்பு, எடுத்துக்காட்டு, இதியாசம், உபகரணம், உதாரணம். ,, 5.

667. கோதில்சகு னம்விரிச்சி கோள்குறிவாய்ப் புள்நிமித்த
மூதுரைபு ராண முதுசொல்கதை—வாதுபிர
மாணம்வஞ்சி னம்விரதஞ் சூள்சபத மொட்டல்வட்டிப்
பாணைபந்த யஞ்சத்தி யம். (கள)

668. தற்புகழ்ச்சி தர்ப்ப நெடுமொழிவி னவிடையாய்ச்
செப்பல்சல்லா பம்பிரத்தா பம்பிரசங்—கப்பேர்சொல்
லொன்றே யலட்டல்பிதற் றமுகமன் சன்மான்
மென்சொலுப சாரநய மே. (கஅ)

669. கொஞ்சல் மிழலையுல்லா பங்குதலை யேமழலை
யஞ்சுழற லேகுழற லாம்வழூச்சொல்—மிஞ்சுபுகழ்
கீர்த்திபிர தாபமொளி கேள்பிரப லந்தோற்றஞ்
சீர்த்தி சுவேதமிசை சீர். (கசு)

670. ஏற்றங் கியாதமெய்ப்பா டாமுறதிச் சொற்கழற
லேற்றிடிப்பாங் கூகனமி டக்கர்மறைக்—கூற்று

---

667. நிமித்தத்தின் பெயர்:—சகுனம், விரிச்சி, கோள், குறி, வாய்ப்புள், நிமித்தம். ஆ 6.

கதையின் பெயர்:—மூதுரை, புராணம், முதுசொல், கதை. ,, 4.

சபதத்தின் பெயர்:—வாது, பிரமாணம், வஞ்சினம், விரதம், சூள், சபதம், ஒட்டல், வட்டிப்பு, ஆணை, பந்தயம், சத்தியம். ,, 11.

668. தன்னைப் புகழ்தலின் பெயர்:—தற்புகழ்ச்சி, தர்ப்பம், நெடுமொழி. ,, 3.

வினவும் விடையுமாகப் பேசிக்கொள்ளுதலின் பெயர்:—சல்லாபம், பிரத்தாபம், பிரசங்கம். ,, 3.

ஒரு சொல்லைப் பலகாலுஞ் சொல்லலின் பெயர்:—அலட்டல், பிதற்றல். ,, 2.

உபசாரத்தின் பெயர்:—முகமன், சன்மானம், மென்சொல், உபசாரம், நயம். ,, 5.

669. வழூச்சொல்லின் பெயர்:—கொஞ்சல், மிழலை, உல்லாபம், குதலை, மழலை, உழறல், குழறல், வழூச்சொல். ,, 8.

புகழின் பெயர்:—புகழ், கீர்த்தி, பிரதாபம், ஒளி, பிரபலம், தோற்றம், சீர்த்தி, சுவேதம், இசை, சீர். ஆ 10.

670. மெய்ப்பாட்டின் பெயர்:—ஏற்றம், கியாதம், மெய்ப்பாடு. ,, 3.

உறுதிச் சொல்லின் பெயர்:—உறுதிச்சொல், கழறல், இடிப்பு. ,, 3.

மறைத்தலிருத் தல்கரைதல் கேத லகவல்
விளிப்பா கருடணங்கூ வல். (௨௰)

671. அன்னேவங் தோஆஓ அக்கோவை யோவம்மோ
என்னெற் றிரக்கச்சொ லோம்படையே—பின்வேண்டல்
தர்க்கம்வா தங்குதர்க்கந் தான்[1]விதண்டை ஞாயச்சொல்
வைக்கும்விவ காரம்வழக் கு. (௨௧)

672. அத்தம் பயன்றாற் பரியம் பொருளாம
னத்தமது வின்மைபிசி நற்பொருள்வா—சித்தல்படிப்
போதலத்தி யான முயற்சிரவ ணங்கேள்வி
வாதமர்க்க ழைப்பறைகூ வல். (௨௨)

673. வன்னம் பொறியிலிகி தங்கணக்கி லேகைவரி
தன்மை யிலிபியெழுத் தக்கரமாம்—பின்னகர
னக்கரங்கா ரங்கானச் சாரியைநற் றீர்க்கம்விலங்
கக்கோ டெழுத்தினுறுப் பாம். (௨௩)

மறைத்த சொல்லின் பெயர்:—கூகனம், இடக்கர், மறைக் கூற்று. ஆ 3.

அழைத்தலின் பெயர்:—அழைத்தல், இருத்தல், கரைதல், கேதல், அகவல், விளிப்பு, ஆகருடணம், கூவல். ,, 8.

671. இரக்கச்சொல்லின் பெயர்:—அன்னே, அந்தோ, ஆ, ஓ, அக்கோ, ஐயோ, அம்மோ, என், எற்று, இரக்கச்சொல். ஆ 10.

வேண்டிக்கொள்ளுதலின் பெயர்:—ஓம்படை, வேண்டல். ,, 2.

தர்க்கத்தின் பெயர்:—தர்க்கம், வாதம். ,, 2.

குதர்க்கத்தின் பெயர்:—குதர்க்கம், விதண்டை. ,, 2.

ஞாயச்சொல்லின் பெயர்:—ஞாயச்சொல், விவகாரம், வழக்கு. ,, 3.

672. பொருளின் பெயர்:—அத்தம், பயன், தாற்பரியம், பொருள். ,, 4.

பொருளின்மையின் பெயர்:—அனத்தம், பொருளின்மை. ,, 2.

நற்பொருளின் பெயர்:—பிசி, நற்பொருள். ,, 2.

படித்தலின் பெயர்:—வாசித்தல், படிப்பு, ஓதல், அத்தியானம். ,, 4.

கேள்வியின் பெயர்:—சிரவணம், கேள்வி. ,, 2.

அமர்க்கழைத்தலின் பெயர்:—அமர்க்கழைத்தல், அறைகூவல். ,, 2.

673. எழுத்தின் பெயர் :—வன்னம், பொறி, இலிகிதம், கணக்கு, இலேகை, வரி, தன்மை, இலிபி, எழுத்து, அக்கரம். ஆ 10.

எழுத்துச்சாரியின் பெயர்:—அகரம், ன, கரம், காரம், கான். ,, 5.

எழுத்துறுப்பின் பெயர்:—தீர்க்கம், விலங்கு, கோடு. ,, 3.

(பி - ம்) 1. விதண்டம்.

674. ஆவிசுர மச்சிருசு வக்குறிலாந் தீர்க்கநெடி
லோவில்புள்ளி மெய்புலுத மொற்றாய்த—மேவுதனி
யக்கேனம் புள்ளியவ்வி வுச்சுட்டாம் யார்யாதோ
எக்கொலெவன் யாவென்வினா வீறு. (உச)

675. நேரெதிர்தூக் கன்ன நிகர்மலைவாங் கேய்விணைவீ
ழேர்படிச மந்தகைபோ லின்னகடுப்—போர்துணைகே
ழொப்பனைதல் மானல்கதழ் வெள்ளலுறழ் துல்லியமிகல்
நற்புரைவத் தற்றுவமா னம். (உரு)

676. சின்குரையோ ரும்பிறமா திட்டிருந்தாந் தாந்தானை
யென்பிறக்க ரோகாபோ வென்பமதி—யன்றிருமால்
யாவசைமி யாமாள யாழவத்தை வாழிமதி
மோவிகவீ முன்னிலைய சை. (உசா)

677. என்றெனவோ தஞ்சமன்கொ னெற்றந்தி லாங்கொடுமா
மன்றதில்கொ லந்தெய்ய மற்றும்மெனு—வென்றாவே
மின்னுபொருள் கொள்ளிடைச்சொல் வேற்றுமைப்பே ரையால்குவ்
வின்னது கண்விளியென் றெட்டு. (உஎ)

---

674. உயிரெழுத்தின் பெயர்:—ஆவி, சுரம், அச்சு. ஆ 3.
குற்றெழுத்தின் பெயர்:—இருசுவம், குறில். „ 2.
நெட்டெழுத்தின் பெயர்:—தீர்க்கம், நெடில். „ 2.
ஒற்றெழுத்தின் பெயர்:—புள்ளி, மெய், புலுதம், ஒற்று. „ 4.
ஆய்தத்தின் பெயர் :—அக்கேனம், புள்ளி. „ 2.
சுட்டெழுத்தின் பெயர்:—அ, இ, உ. „ 3.
வினாவிறுதியின் பெயர்:—யார், யாது, ஓ, எ, கொல், எவன், யா, என். „ 8.

675. உவமையின் பெயர்:—நேர், எதிர், தூக்கு, அன்ன, நிகர், மலைவு, ஆங்கு, எய்வு, இணை, வீழ், ஏர், படி, சமம், தகை, போல், இன்ன, கடுப்பு, துணை, கேழ், ஒப்பு, அனைதல், மானல், கதழ்வு, எள்ளல், உறழ், துல்லியம், இகல், புரை, வத்து, அற்று, உவமானம். ஆ 31.

676 பொதுவசைச் சொல்லின் பெயர்:—சின், குரை, ஓரும், பிற, மாது, இட்டு, இருந்து, ஆம், தாம், தான், ஐ, என், பிறக்கு, அரோ, கா, போ, என்ப, மதி, அன்று, இரும், ஆல், யா. ஆ 22.
முன்னிலை யசைச்சொல்லின் பெயர்:—மியா, மாள, யாழ, அத்தை, வாழி, மதி, மோ, இக, ஈ. „ 9.

677. பொருள்கோள் ளிடைச்சொல்லின் பெயர்:—என்று, என, ஓ, தஞ்சம், மன், கொன், எற்று, அந்தில், ஆங்கு, ஒடு, மா, மன்ற, தில், கொல், அம், தெய்ய, மற்று, உம், எனு, என்றா, ஏ. ஆ 21.
வேற்றுமையின் பெயர்:—ஐ, ஆல், கு, இன், அது, கண், விளி. „ 8.

678. வல்லிசையெச் சுச்சமந்த மந்திரங் காகுளிதக்
கல்லமத்தி மம்பஞ்ச மங்கானஞ்—சொல்வரிபாண்
கேயம்வன்னக் கந்திருவங் கீதமிரா கங்கொளைபாட்
[1]டேய்மனிபண் காமரமி சை. (உஅ)

679. ஏழிசைகு ரற்றுத்த மின்கைக் கிளையுழையே
தாழ்வி ளிளிவிளரி தாரமவை—யாழ்மிடறு
நாக்கண்ணஞ் சென்னிநுதல் நெஞ்சுமூக் கிற்பிறக்கு
நீக்கக் கரமேழ் நெடில். (உகூ)

680. சேர்நான்கு நான்குமூன் றோரிரண்டு நான்குமூன்
றோரிரண்டா மாத்திரைவண் டொன்கிளிமா—வாரணமே
தேரைபசு வாடொலிபால் தேன்கணெய்யே லங்கதலி
தார்மா துளமேழ் சுவை. (கூ0)

---

678. வல்லிசையின் பெயர்:—வல்லிசை, எச்சு, உச்சம். ஆ 3.

மந்த விசையின் பெயர்:—மந்தம், மந்திரம், காகுளி, தக்கு. ,, 4.

மத்திம விசையின் பெயர்:—மத்திமம், பஞ்சமம். ,, 2.

இசைப் பொதுப்பெயர்:—கானம், வரி, பாண், கேயம், வன்னம், கந்திருவம், கீதம், இராகம், கொளை, பாட்டு, பண், காமரம், இசை. ,, 13.

679. ஏழிசையின் பெயர்:—குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம். ,, 7.

இவை பிறக்குமிடம்:—மிடறு, நாக்கு, அண்ணம், சென்னி, நுதல், நெஞ்சு, மூக்கு. ,, 7.

இவற்றின் அக்கரம்:—ஏழ் நெடில்

680. ஏழிசையின் மாத்திரை:—நான்கு, நான்கு, மூன்று, இரண்டு, நான்கு, மூன்று, இரண்டு.

ஏழிசையின் ஓசை:—வண்டோசை, கிளியோசை, குதிரையோசை, ஆனையோசை, தவளையோசை, பசுவோசை, ஆட்டோசை. ,, 7.

ஏழிசையின் சுவை:—பால், தேன், கள், நெய், ஏலம், கதலிப் பழம், மாதுளம்பழம். ,, 7.

(பி - ம்.) 1. டேய்விளி?

681. மவ்வல்முல்லை நீபம்வஞ்சி நெய்தல்மகிழ் புன்னைமணம்
அவ்விசுவா மித்ரனிம னங்கிதிங்கள்—வெவ்வருக்கன்
கோதமன் காசிபனேழ் கோவிசைக்காம் யாழினிசை
யேதமி லாத்திறனெ ழால். (௬௧)

682. கோசனையி யந்துழனி கோடணைமு ழக்கோதை
பூசல்களன் சும்மை புலம்பல்சத்த—மோசைதொனி
யாரவா ரஞ்சுருதி யார்ப்பிசை யாகுலம்பா
டோர்வெகுளி நாத முரை. (௬௨)

683. இரைத லுலம்ப லிரட்டல் சிரற்றல்
குரைசிலைப்பி யம்பல் குமுறல்—முரல
லலம்பல் கனைத்த லரற்ற லழுங்கல்
சிலம்பல் துவைத்தல்தெளிப் பு. (௬௩)

684. குமிறல் திமிலங் குமிலந் தெவிட்டல்
பிளிறல் நரலல் பிரற்றல்—உளர்தலை
கோலா கலமே கொழித்தல் குமுதமுக்கல்
மேலா மருமாஞ்ச மே. (௬௪)

685. கம்பலைசி லும்பல் கலகம் பயிர்ப்புரற்றல்
பம்பு தமரம் படுதல்விம்மல்—வெம்பரவங்
காய்கதித்த லேங்கல் கலித்த லுழைத்தலிடி
யோய்குரு மித்த லொலி. (௬௫)

---

681. ஏழிசையின் வாசனை:—மவ்வல், முல்லை, கடம்பு, வஞ்சி, நெய்தல், மகிழ், புன்னை. ஆ 7.

ஏழிசைக் கதிபதிகள் பெயர்:—விசுவாமித்திரன், இயமன், அக்கினி, சந்திரன், சூரியன், கவுதமன், காசிபன். ,, 7.

யாழிசையின் பெயர்:—திறன், எழால். ,, 2.

682—685 ஒலியின் பெயர்:—கோசனை, இயம், துழனி, கோடணை, முழக்கு, ஓதை, பூசல், களன், சும்மை, புலம்பல், சத்தம், ஓசை, தொனி, ஆர்வாரம், சுருதி, ஆர்ப்பு, இசை, ஆகுலம், பாடு, வெகுளி, நாதம், உரை.

இரைதல், உலம்பல், இரட்டல், சிரற்றல், குரை, சிலைப்பு, இயம்பல், குமுறல், முரலல், அலம்பல், கனைத்தல், அரற்றல், அழுங்கல், சிலம்பல், துவைத்தல், தெளிப்பு.

குமிறல், திமிலம், குமிலம், தெவிட்டல், பிளிறல், நரலல், பிரற்றல், உளர்தல், கோலாகலம், கொழித்தல், குமுதம், முக்கல், மருமாஞ்சம்.

கம்பலை, சிலும்பல், கலகம், பயிர்ப்பு, உரற்றல், தமரம், படுதல், விம்மல், அரவம், கதித்தல், ஏங்கல், கலித்தல், உழைத்தல், இடி, குருமித்தல், ஒலி. ஆ 67.

686. இம்மெனல் ஞெரேல்விண் ணிழுஞ்சிலீர் திண்ணென்றல்
பொம்மெனல்க ணீர்திமர் பொள்ளென்றல்—அம்மெனலே
மெல்லெனல்கல் லென்றல் வீரீர்பளீ ரென்னல்முத
லல்லி னனுகரணத் தார்ப்பு. (௯௬)

687. படபடென்ற லன்றிப் பகபகென்ற லோடு
தடதடென்ற லேசளச ளென்றல்—மடமடென்றல்
வன்றிடுதி டென்றல் வழுவழென் றல்கொழுகொ
ழென்றல்முத லாம்விரைவோ சை. (௯௭)

688. மிருகவொலி புள்ளிஞெலி வீரிடுதல் கூவல்
கரைதல்கத்தல் கூப்பிடல்க னைத்தல்—குரைத்தலுமா
மச்சவொலி கத்தலத றல்கதற லுங்கார
மெச்சுரப்புத் தாக்கதட்டா மே. (௯௮)

---

686. அநுகாண வோசையின் பெயர்:—இம்மெனல், ஞெரேலெனல், விண்ணெனல், இழுமெனல், சிலீரெனல், திண்ணெனல், பொம்மெனல், கணீரெனல், திமிரெனல், பொள்ளெனல், அம்மெனல், மெல்லெனல், கல்லெனல், வீரெனல், பளீரெனல், இவை முதலாயின. ஆ 15.

687. விரைவோசையின் பெயர் :—படபடென்றல், பகபகென்றல், தடதடென்றல், சளசளென்றல், மடமடென்றல், திடுதிடென்றல், வழுவழென்றல், கொழுகொழென்றல், இவை முதலாயின. ஆ 8.

688. மிருகவொலி புள்ளிஞெலியின் பெயர் :—வீரிடுதல், கூவல், கரைதல், கத்தல், கூப்பிடல், கனைத்தல், குரைத்தல். ,, 7.

அச்சவொலியின் பெயர் :—கத்தல், அதறல், கதறல். ,, 3.

அதட்டலின் பெயர் :—உங்காரம், உரப்பு, தாக்கு, அதட்டு. ,, 4.

வாக்குக் குணவர்க்க முற்றும்

---

3. உயிர்ப்பொருள்: செயற்குண வர்க்கம்.

689. காரியந்தொ ழிற்காமி யங்கிருத்தி யங்கிரியை
காரகங்கன் மங்கருமம் வேலைவினை—யோர்செயலா
மாற்றலிழைத் தல்குயிற்றல் பண்ணலயர் தல்வினைதல்
சாற்றியற்றல் செய்தல்புரி தல். (க)

690. உற்பவம்ப வஞ்சனிப்புற் பத்திசென்ம மேசெனனஞ்
சொற்பிரச வம்பிறப்புத் தோற்றமுமா—மிப்பிறப்பே
யிம்மையும்மை போம்பிறப்பி னிப்பிறப்ப தேமறுமை
யம்மையெம்மை யெப்பிறப்பு மாம். (உ)

691. கற்பிதம்ப டைப்புநின்மி தஞ்சிருட்டி யாக்கல்பிறப்
பிப்புவிதி யாந்திதியின் பேரளித்தல்—அப்புரத்தல்
ஓதிரக்கை காத்த லுடனிறுத்த னோக்கலுமாங்
காதரம்வி னைத்தொடர்ச்சி காண். (ங)

692. ஊறணங்கெ ருக்கலொழித் தல்சங்கா ரம்படுத்தல்
கோறன்முருக் கல்சவட்டல் சாடலடல்—நூறலெற்றல்
வீட்டல்வதை காதுதல்செ குத்தல்கொலை நிக்கிரகம்
நாட்டுமுடித் தன்மார ணம். (ச)

---

689. செயலின் பெயர் :—காரியம், தொழில், காமியம், கிருத்தியம், கிரியை, காரகம், கன்மம், கருமம், வேலை, வினை, செயல். ஆ 11.

செய்தலின் பெயர் :—ஆற்றல், இழைத்தல், குயிற்றல், பண்ணல், அயர்தல், வினைதல், இயற்றல், செய்தல், புரிதல். ,, 9.

690. பிறப்பின் பெயர் :—உற்பவம், பவம், சனிப்பு, உற்பத்தி, சென்மம், செனனம், பிரசவம், பிறப்பு, தோற்றம். ,, 9.

இப்பிறப்பின் பெயர் :—இம்மை. ,, 1.

முற்பிறப்பின் பெயர் :—உம்மை. ,, 1.

வருபிறப்பின் பெயர் :—மறுமை, அம்மை. ,, 2.

எப்பிறப்பின் பெயர் :—எம்மை. ,, 1.

691. பிறப்பித்தலின் பெயர் :—கற்பிதம், படைப்பு, நின்மிதம், சிருட்டி, ஆக்கல், பிறப்பிப்பு, விதி. ,, 7.

திதியின் பெயர் :—திதி, அளித்தல், புரத்தல், இரக்கை, காத்தல், நிறுத்தல், நோக்கல். ,, 7.

வினைத்தொடர்ச்சியின் பெயர்:—காதரம், வினைத்தொடர்ச்சி. ,, 2.

692. சங்காரத்தின் பெயர் :—ஊறு, அணங்கு, எருக்கல், ஒழித்தல், சங்காரம், படுத்தல், கோறல், முருக்கல், சவட்டல், சாடல், அடல், நூறல், எற்றல், வீட்டல், வதை, காதுதல், செகுத்தல், கொலை, நிக்கிரகம், முடித்தல், மாரணம். ஆ 21.

693. பாரணஞ்சாப் பாடயிறல் பக்கித்தல் மாக்தறின்றல்
ஆர்தல் நுகர்த லமுதுசெய்தல்—சேர்மிசைத்தல்
கைதொடல சித்தல் பொசித்த லருந்தறுய்த்தல்
எய்துதுவ்வல் கொள்ளலுண்ட லே. (௫)

694. உபவாசம் பட்டினியி லங்கனந்துவ் வாமை
யுபோடிதமாஞ் சாகரந்தூங் காமை—தபுபடுதல்
வண்பள்ளி நித்திரைவ ளர்ச்சிதுஞ்சல் தூங்கறுயில்
கண்படைய னந்தருறக் கம். (௬)

695. எழுப்ப லுணர்த்துதலா மீலனமி மைத்தல்
விழிப்பூற்றல் வார்த்தல் வடித்த—லொழுக்கல்விடல்
பானம் பருகல் குடித்தல்சொற்ப னங்கனவா
மானநன வேசகல மாம். (௭)

---

693. உண்டலின் பெயர் :—பாரணம், சாப்பாடு, அயிறல், பக்கித்தல், மாக்தல், தின்றல், ஆர்தல், நுகர்தல், அமுது செய்தல், மிசைத்தல், கைதொடல், அசித்தல், பொசித்தல், அருந்துதல், துய்த்தல், துவ்வல், கொள்ளல், உண்டல். ஆ 18.

694. பட்டினியின் பெயர்:—உபவாசம், பட்டினி, இலங்கனம், துவ்வாமை, உபோடிதம். ,, 5.

தூங்காமையின் பெயர் :—சாகரம், தூங்காமை. ,, 2.

நித்திரையின் பெயர் :—படுதல், பள்ளி, நித்திரை, வளர்ச்சி, துஞ்சல், தூங்கல், துயில், கண்படை, அனந்தர், உறக்கம். ,, 10.

695. எழுப்பலின் பெயர் :—எழுப்பல், உணர்த்துதல். ,, 2.

விழித்தலின் பெயர் :—மீலனம், இமைத்தல், விழிப்பு. ,, 3.

ஊற்றலின் பெயர்:—ஊற்றல், வார்த்தல், வடித்தல், ஒழுக்கல், விடல். ,, 5.

குடித்தலின் பெயர் :—பானம், பருகல், குடித்தல். ,, 3.

சொற்பனத்தின் பெயர் :—சொற்பனம், கனவு. ,, 2.

நனவின் பெயர் :—நனவு, சகலம். ,, 2.

696. காரணங் காரியமி ரண்டவத்தை காரணத்தின்
பேர்சகலங் கேவலம்பி ரேரகமே—போர்சுத்தங்
காரியஞ் சாக்கிரங்க னாச்சுழுத்தி யேதுரிய
மார்துரியா தீதமென வைந்து. (௮)

697. கருவியெலாஞ் சார்தல் கனிசகல மாகுங்
கருவிகுன்றல் கேவலமாங் குன்றாங்—கருவியருள்
கூட்டுதல்பி ரேரகமாங் கூர்கருவி பொய்யெனக்கண்
டோட்டுவதே சுத்தமென வோர். (௯)

698. சாக்கிரம ருட்காட்சி தங்குகனாப் பொய்க்காட்சி
யாக்கு புலனடங்க லாஞ்சுழுத்தி—காக்கு
மனமடங்க லாந்துரியம் வாயு வடங்கத்
தனியுயிரே நிற்றலதீ தம். (௰)

699. காரணங்க ணான்கவற்றின் காரியநா லைந்தாக
ஈரவத்தை யெண்மூன்றைந் தைந்தாகப்—பேர்கள்நடு

---

696. அவத்தைவகை:—காரண வவத்தை, காரிய வவத்தை ஆ 2.
காரண வவத்தையின் வகை:—சகலம், கேவலம், பிரேரகம், சுத்தம். „ 4.
காரிய வவத்தையின் வகை:—சாக்கிரம், கனா, சுழுத்தி, துரியம், துரியாதீதம். „ 5.

697. தொண்ணூற்றாறு கருவியும் பார்த்து அவத்தையுஞ் சார்ந்தது:—சகலம்.
கருவி குன்றல்:—கேவலம்.
கருவியைத் திருவருள்கூட்டுதல்:—பிரேரகம்.
கருவியைப் பொய்யெனக் கண்டுவிடுவது:—சுத்தம்.

698. மருட்காட்சியின் பெயர்:—சாக்கிரம்.
பொய்க்காட்சியின் பெயர்:—கனா.
புலனடங்கலின் பெயர்:—சுழுத்தி.
மனமடங்கலின் பெயர்:—துரியம்.
வாயு வடங்கி யுயிர் தரிப்பதின் பெயர்:—துரியாதீதம்.

699. அவத்தைத் தொகையாவது:—முன் காரணாவத்தை 4; அதுவே யொன்று ஐவைந்தாகக் காரியாவத்தை 20. ஆ 24.

வாமவத்தை கீழவத்தை மேலவத்தை நின்மலமென்
றுமவத்தை யாங்காரி யம். (௬௯௯)

700. மீறவத்தை பற்றுமொன்றை விட்டொன்றைப் பற்றுதலாம்
வேறில் பிரோகஞ்செய் வித்தலாங்—கூரகைத்த
[1]லூர்தலெய்த லுய்த்தலுகைப் போட்டல்நட வல்கடவல்
சார்செலுத்தல் தூண்டல்நடாத் தல். (௭௦௦)

701. கேளியொப்பி லீலைபொய்த லோரை கிரீடைபண்ணை
வீழுங் கெடவரல்வி லாசனையே—சூழ்தொடலை
வண்டல்விளை யாடல்குலா மெச்சல்வினோ தம்பாராட்
டண்பொழுது போக்கல்கொண்டாட் டாம். (௭௦௧)

702. மன்றல்விவா கந்தி வலஞ்செயல்கைப் பற்றல்வரை
வன்திமணம் வேட்டல்கல்யா ணம்வதுவை—யென்பவிழா
உச்சவந்து ணங்கறல்சே றோர்முருகு சாறுமாங்
கைச்சிடா நங்கல்விழுங் கல். (௭௦௨)

அந்த 24-க்கு விவரம்:—சகலம், கேவலம், பிரேரகம், சுத்தம் என்னும்

காரணாவத்தை	ஆ	4.
காரியாவத்தையில் நடுவாமவத்தை	,,	5.
கீழவத்தை	,,	5.
மேலவத்தை	,,	5.
நின்மலாவத்தை	,,	5.
	,,	24.

700. அவத்தையாவது:—பற்றிநின்றதைக் கைவிட்டு வேறொன்றைப் பற்றுவது.

பிரேரகம் - செய்விப்பது.

நடாத்தலின் பேயர்:—அகைத்தல், ஊர்தல், எய்தல், உய்த்தல், உகைப்பு, ஓட்டல், நடவல், கடவல், செலுத்தல், தூண்டல், நடாத்தல். ஆ 11.

701. விளையாடலின் பேயர்:—கேளி, ஒப்பு, இலீலை, பொய்தல், ஓரை, கிரீடை, பண்ணை, கெடவரல், விலாசனை, தொடலை, வண்டல், விளையாடல். ஆ 12.

பொழுதுபோக்கலின் பேயர்:—குலா, மெச்சல், வினோதம், பாராட்டு, பொழுதுபோக்கல், கொண்டாட்டு. ,, 6.

702. கல்யாணத்தின் பேயர்:—மன்றல், விவாகம், தீவலஞ்செயல், கைப்பற்றல், வரைவு, மணம், வேட்டல், கல்யாணம், வதுவை, ,, 9.

விழாவின் பேயர்:—விழா, உச்சவம், துணங்கறல், சேறு, முருகு, சாறு. ,, 6.

விழுங்கலின் பேயர்:—நங்கல், விழுங்கல். ,, 2.

(பி - ம்.) 1. ஊர்தலெய்த?

703. வேள்வியுப காரம்வண்மை வீசலுத வல்வழங்கல்
விதர ணங்கவிகை யீட்டலிட—லாளருளல்
தானம்வே ளாண்மையுதா ரந்தரல்வள் ளன்மையளிப்
பான்விர வீகைகொடை யாம். (௰௫)

704. பெய்தல்வரு டித்தல்சொரி வெக்கல்பொழி தல்வேண்டல்
கொய்வாங்க லேற்றல்கோள் கோடல்கொள்ளல்—கைவரையா
திகை கொடைமடமீ யாமைஉலுத் தம்பிசினம்
வாகி லுலோபமிவ றல். (௰௬)

705. காவல்கடி காப்பேமஞ் சேமமரண் வேலிகட்டி
பாவுகத வாமோம்பல் பாதுகாப்—போவில்பிச்சை
பிண்டமையம் பாகம் பிடிகம் பலிசரிதை
யண்டிரப்பு டன்பயிக்க மாம். (௰௭)

---

703. கொடையின் பெயர்:—வேள்வி, உபகாரம், வண்மை, வீசல், உதவல், வழங்கல், விதரணம், கவிகை, ஈட்டல், இடல், அருளல், தானம், வேளாண்மை, உதாரம், தரல், வள்ளன்மை, அளிப்பு, விரவு, ஈகை, கொடை. ஆ 20.

704. பெய்தலின் பெயர்:—பெய்தல், வருடித்தல், சொரிதல், எக்கல், பொழிதல். ,, 5.

கொள்ளலின் பெயர்:—வேண்டல், வாங்கல், ஏற்றல், கோள், கோடல், கொள்ளல். ,, 6.

வரையாது கொடுத்தலின் பெயர்:—வரையாதீகை, கொடைமடம். ,, 2.

ஈயாமையின் பெயர்:—ஈயாமை, உலுத்தம், பிசினம், உலோபம், இவறல். ,, 5.

705. காவலின் பெயர்:—காவல், கடி, காப்பு, ஏமம், சேமம், அரண், வேலி, கட்டி, கதவு. ,, 9.

பாதுகாவலின் பெயர்:—ஓம்பல், பாதுகாப்பு. ,, 2.

பிச்சையின் பெயர்:—பிச்சை, பிண்டம், ஐயம், பாகம், பிடிகம், பலி, சரிதை, இரப்பு, பயிக்கம். ,, 9.

706. ஆரா தனைவழிபா டர்ச்சனையு வாசனையும்
சீராரும் பூசனையாந் தெண்டனமக்—காரம்
வணங்கல்பணி தாழ்விறைஞ்சல் வந்தனைவந் தித்தல்
குணங்க லொழுங்கறுத லாம். (மஅ)

707. வாயில்சந்து தூதாம்வே யொற்றுலவ லாம்வழங்க
லாய்தொழல்கை கூப்பல்கும்பா டஞ்சலியாம்—பாய்வேள்வி
யெச்சங் கிருதோமம் யாகமிட்டி யூபமகம்
அச்சினிறுங் கல்கொய்த லாம். (மகூ)

708. தொண்டுபரி சாரந் தொழும்புநிமந் தஞ்சபரி
கண்டபணி யாம்வரலா கந்துகமா—முண்டதறல்
சீரணஞ்செ ரித்தல்செரி யாமையபி வாசனம்
சீரணங்கு ருத்துவமுஞ் செப்பு. (உ0)

---

706. பூசனையின் பெயர்:—ஆராதனை, வழிபாடு, அர்ச்சனை, உவாசனை, பூசனை. ஆ 5.

நமக்காரத்தின் பெயர்:—தெண்டன், நமக்காரம், வணங்கல், பணி, தாழ்வு, இறைஞ்சல், வந்தனை, வந்தித்தல். ,, 8.

ஒழுங்கறுதலின் பெயர்:—குணங்கல், ஒழுங்கறுதல். ,, 2.

707. தூதின் பெயர்:—வாயில், சந்து, தூது. ,, 3.

ஒற்றின் பெயர்:—ஒற்று, வேய். ,, 2.

வழங்கலின் பெயர்:—உலவல், வழங்கல். ,, 2.

அஞ்சலியின் பெயர்:—தொழல், கைகூப்பல், கும்பாடு, அஞ்சலி ,, 4.

வேள்வியின் பெயர்:—வேள்வி, எச்சம், கிருது, ஓமம், யாகம், இட்டி, யூபம், மகம். ,, 8.

இறுங்கலின் பெயர்:—இறுங்கல், கொய்தல். ,, 2.

708. பணியின் பெயர்:—தொண்டு, பரிசாரம், தொழும்பு, நிமந்தம், சபரி, பணி. ,, 6.

வருதலின் பெயர்:—வரல், ஆகந்துகம். ,, 2.

உண்டதறலின் பெயர்:—சீரணம், செரித்தல். ,, 2.

செரியாமையின் பெயர்:—செரியாமை, அபிவாசனம், சீரணம், குருத்துவம். ,, 4.

709. காட்சி தெரிசினைநோக் கம்பார்வை காண்டல்கண்ணல்
மீட்சிவக்கி ரந்திரும்பல் மீளலா—மேச்சில்
சிறக்கணிப்ப பாங்கங் கடைக்கணிப்பாஞ் சிய்த்த
லறப்பெருக்கல் தூர்த்தல்துடைப் பாம். (உக)

710. பம்முதல்மூ சல்கவித்தல் மூடல்பரப் பூழ்த்தலுமாக்
தும்மலின்பேர் மூச்சுச் சுவாசமாம்—விம்மலின்பே
ருப்பல்பொரு மல்புடைத்த லூதுதல் வீங்கலுமாம்
துப்பலுமிழ் வேகாறல் சொல். (உஉ)

711. கூம்பாச்சி ரம்பணமா வித்தலுங்கொட் டாவியங்காப்
பாம்பேரோ வாய்பிளத்தல் மூரிநெட்டி—சோம்பாம்
விரியல் பரப்பல் விளம்பல்பா ரித்தல்
பரிமாற்ற மும்படைத்த லாம். (உ௩)

---

709. காண்டலின் பெயர்:—காட்சி, தெரிசினை, நோக்கம், பார்வை, காண்டல், கண்ணல். ஆ 6.

மீளலின் பெயர்:—மீட்சி, வக்கிரம், திரும்பல், மீளல். ,, 4.

கடைக்கணித்தலின் பெயர்:—சிறக்கணிப்பு, அபாங்கம், கடைக்கணிப்பு. ,, 3.

துடைத்தலின் பெயர்:—சிய்த்தல், பெருக்கல், தூர்த்தல், துடைப்பு. ,, 4.

710. மூடலின் பெயர்:—பம்முதல், மூசல், கவித்தல், மூடல், பரப்பு, ஊழ்த்தல். ,, 6.

தும்மலின் பெயர்:—தும்மல், மூச்சு, சுவாசம். ,, 3.

விம்மலின் பெயர்:—விம்மல், உப்பல், பொருமல், புடைத்தல், ஊதுதல், வீங்கல். ,, 5.

துப்பலின் பெயர்:—துப்பல், உமிழ்வு, காறல். ,, 3.

711. கொட்டாவியின் பெயர்:—சிரம்பணம், ஆவித்தல், கொட்டாவி. ,, 3.

வாய்பிளத்தலின் பெயர்:—அங்காப்பு, வாய்பிளத்தல். ,, 2.

சோம்பின் பெயர்:—மூரி, நெட்டி, சோம்பு. ,, 3.

படைத்தலின் பெயர்:—விரியல், பரப்பல், விளம்பல், பாரித்தல், பரிமாற்றம், படைத்தல். ,, 6.

712. புல்லல் கிரீடை புணர்ச்சிகூட் டங்கலவி
வல்லவிழை வாடல்சங்க மைதுனமாம்—சொல்புலவி
யூடல்துனி யத்தீர்ப் புணர்த்தலாந் தேய்த்தல்சிதைப்
போடுரைப்பு ரிஞ்சலுரோ சல். (உச)

713. ஆலிங்க னந்தழுவல் விள்ளல் முயங்கலுமாம்
மேலிரங்க லேங்க லினைவழுங்கல்—நாலல்தொங்கல்
தூங்கலா நாற்றுதல்தூக் கற்பேர் சுமத்தல்பரி
தாங்குதல்த ரித்தல்பொறுத் தல். (உரு)

714. பூசல் [1]வரித்தல் புலர்த்தலங்க ராகமுமாம்
பூசல்மண்ணல் வேய்தல்புனை தல்வனைதல்—விசணிதல்
ஒப்பனைசெய்த லலங்கரித்த லாஞ்செருகல்
கப்பிலடைச் சல்சொரு கல். (உசு)

---

712. மைதுனத்தின் பெயர்:—புல்லல், கிரீடை, புணர்ச்சி, கூட்டம், கலவி, விழைவு, ஆடல், சங்கம், மைதுனம். ஆ 9.

புலவியின் பெயர்:—புலவி, ஊடல், துனி. ,, 3.

புலவி தீர்த்தலின் பெயர்:—உணர்த்தல். ,, 1.

உரோசலின் பெயர்:—தேய்த்தல், சிதைப்பு, உரைப்பு, உரிஞ்சல், உரோசல். ,, 5.

713. ஆலிங்கனத்தின் பெயர்:—ஆலிங்கனம், தழுவல், விள்ளல், முயங்கல். ,, 4.

இரங்கலின் பெயர்:—இரங்கல், ஏங்கல், இனைவு, அழுங்கல். ,, 4.

தூங்கலின் பெயர்:—நாலல், தொங்கல், தூங்கல். ,, 3.

தூக்கலின் பெயர்:—நாற்றுதல், தூக்கல். ,, 2.

சுமத்தலின் பெயர்:—சுமத்தல், பரி, தாங்குதல், தரித்தல், பொறுத்தல். ,, 5.

714. பூசலின் பெயர்:—பூசல், வரித்தல், புலர்த்தல், அங்கராகம். ,, 4.

அலங்கரித்தலின் பெயர்:—பூசல், மண்ணல், வேய்தல், புனைதல், வனைதல், அணிதல், ஒப்பனை, செய்தல், அலங்கரித்தல். ,, 9.

சொருகலின் பெயர்:—செருகல், அடைச்சல், சொருகல். ,, 3.

(பி - ம்) 1. வரிதல்.

715. வளைத்தல்வளா கம்வலத்தல் சூழ்தல்சுற்றல் பாதி
டளித்தல்மடுத் தல்செறித்தல் பெய்தல்—தளிர்த்தல்
சிலிர்த்தல் [1]கிளைத்தல் துளிர்த்தலாஞ் சூட்டல்
மிலைச்சல் தரித்தல்மலை வே. (உஎ)

716. பற்றல்பிடி மூளல்தொட லூறுபரி சந்துவளல்
சொற்றிவள லாந்தேடல் நேடல்தரு—கற்றேர்தல்
கையரிக்கோள் நாடலாய் வாமபகா ரங்கவர்தல்
கொய்வளைத்தல் வாரல்வவ்வல் கோள். (உஅ)

717. சாவிறப்ப வன்றல்விளி தல்முடித ஞன்சன்முஞ்சன்
மாய்விலைய மாளல் மரித்தல்விழல்—வீவடைதல்
போக்குமிரு தந்தபுதல் பொன்றல்நசித் தல்மரண
மாக்கமுக்கற் பேர்ஞெமுங்க லாம். (உகூ)

---

715. சூழ்தலின் பெயர் :—வளைத்தல், வளாகம், வலத்தல், சூழ்தல், சுற்றல். ஆ 5.

செறித்தலின் பெயர் :—பாதிடு, அளித்தல், மடுத்தல், செறித்தல், பெய்தல். ,, 5.

தளிர்த்தலின் பெயர் :—தளிர்த்தல், சிலிர்த்தல், கிளைத்தல், துளிர்த்தல். ,, 4.

சூட்டலின் பெயர் :—சூட்டல், மிலைச்சல், தரித்தல், மலைவு. ,, 4.

716. பிடித்தலின் பெயர் :—பற்றல், பிடி, மூளல். ,, 3.

தொடுத்தலின் பெயர் :—தொடல், ஊறு, பரிசம், துவளல், திவளல். ,, 5.

தேடலின் பெயர் :—தேடல், நேடல், தரு, தேர்தல், கையரிக்கோளல், நாடல், ஆய்வு. ,, 7.

கவர்தலின் பெயர்:—அபகாரம், கவர்தல், வளைத்தல், வாரல், வவ்வல், கோள். ,, 6.

717. மரணத்தின் பெயர் :—சாவு, இறப்பு, அவன்றல், விளிதல், முடிதல், துஞ்சல், முஞ்சல், மாய்வு, இலயம், மாளல், மரித்தல், விழல், வீவு, அடைதல், போக்கு, மிருதம், தபுதல், பொன்றல், நசித்தல், மரணம். ,, 20.

அழுக்கலின் பெயர் :—அமுக்கல், ஞெமுங்கல். ,, 2.

(பி - ம்) 1. கிளர்த்தல்.

718. சமர்சமிகம் பூசல்செரு சங்க்ராமந் திய்த்த
லமருடன்றல் போர்மறனா யோதம்—சமமலைதல்
மொய்யிகன்ஞாட் பாகவமு ரண்பொருதல் சல்லிகநே
ரையிரண்டுஞ் சண்டையுத்த மே. (௯௰)

719. முட்டலெற்றல் தாக்கல் முடுகலெதிர்த் தல்கிடைத்தல்
கிட்டல் தலைப்படலாங் கிழ்ப்பகையூ—ரட்டல்வள்ளை
சார்ந்திடில டாமை தழிஞ்சிகொள்ளை கொண்டி[1]குறை
பாந்தலொடுக் கம்பதுக்கொ துக்கு. (௯௧)

720. உடைவிரிதல் சாய்தல்சரி வோட்ட நெரித
லிடைதல்கெடல் தோற்பா மிறுதல்—ஒடிதல்
முரித லொசிதல் முசித லிடிதல்
பரிதல் ஞெமிர்தல்முறி வு. (௯௨)

721. எற்றலறை மோதலடித் தற்பே ரெறிதலெற்றல்
குற்றல்புடைப் பேதகர்த்தல் குட்டுதலா—நிற்றல்நிலை
நின்றிடற்பே ராங்கசித மீடழுத்த லாம்பதித்தல்
கொன்று குவிப்பதுநா ழில். (௯௩)

---

718. யுத்தத்தின் பெயர் :—சமர், சமீகம், பூசல், செரு, சங்கிராமம், தியத்தல், அமர், உடன்றல், போர், மறன், ஆயோதம், சமம், மலைதல், மொய், இகல், ஞாட்பு, ஆகவம், முரண், பொருதல், சல்லிகம், நேர், இரணம், சண்டை, யுத்தம். ஆ 24.

719. கிட்டலின் பெயர் :—முட்டல், எற்றல், தாக்கல், முடுகல், எதிர்த்தல், கிடைத்தல், கிட்டல், தலைப்படல். ,, 8

பகையூரடுதலின் பெயர் :—வள்ளை. ,, 1.

சார்ந்திடி லடாமையின் பெயர் :—தழிஞ்சி. ,, 1.

கொள்ளையின் பெயர் :—கொள்ளை, கொண்டி, குறை. ,, 3.

ஒதுங்கலின் பெயர் :—பாந்தல், ஒடுக்கம், பதுக்கு, ஒதுக்கு. ,, 4.

720. தோற்றலின் பெயர் :—உடைவு, இரிதல், சாய்தல், சரிவு, ஓட்டம், நெரிதல், இடைதல், கெடல், தோற்பு. ,, 9.

முறிவின் பெயர் :—இறுதல், ஒடிதல், முரிதல், ஒசிதல், முசிதல், இடிதல், பரிதல், ஞெமிர்தல், முறிவு. ,, 9.

721. அடித்தலின் பெயர் :—எற்றல், அறை, மோதல், அடித்தல். ,, 4.

குட்டலின் பெயர் :—எறிதல், எற்றல், குற்றல், புடைப்பு, தகர்த்தல், குட்டுதல். ,, 6.

நிற்றலின் பெயர் :—நிற்றல், நிலை, நின்றிடல். ,, 3.

பதித்தலின் பெயர் :—கசிதம், அழுத்தல், பதித்தல். ,, 3.

கொன்று குவிப்பதின் பெயர் :—நாழில். ,, 1.

(பி - ம்.) 1. குறை.

722. நட்டநடை வாணிநட னந்தான் டவநிருத்தம்
நட்டணைதூக் குப்படிக நாட்டியமே—யொட்டுகண்ணுள்
நாடகங்கூத் தாட்டுநட மாநடித்தல் தூங்கல்பெயர்
வாடலசை வாலலக வல். (௩௪)

723. கூர்பேடு மாரன் கொடுகொட்டி பாண்டரங்கம்
